Appropriate Technology Services
121, POINT • PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 3589

# பொருளியல் நோக்கு

ஏப்ரல் 1981




மத்திய கிழக்கு அலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பத்திரிகைச் செய்திகள்

# விமானம் புறப்படுகிறது

மத்திய கிழக்குக்கான ஸ்ரீலங்கா உழைப்பாளர்களின் பயணம் இடையீடின்றித் தொடர்கிறது. ஸ்ரீலங்கா உட்பட தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யும் சகல நாடுகளினதும் பத்திரிகைகள் குடாநாடுகளில் இத்தொழிலாளர்கள் படும் அவதிகள் குறித்து அடிக்கடி எழுதிவருகின்ற அதேவேளையில், வெற்றிடங்களுக்கான தொழில் நாடிகளைக் கோரும் விளம்பரங்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. தொழில் நாடிகளின் தொகையில் ஒருபோதும் குறைவு ஏற்பட்டுவிடவும் இல்லை. கட்டுநாயக்காவிலிருந்து ஒவ்வொரு நாளும் குடாநாடுகளுக்கு ஒரு விமானம் புறப்படுகின்றது. விமான நிலையத்தில் ஆவலுடன் காத்திருக்கும் ஒவ்வொரு இளைஞனதும் யுவதியினதும் கண்களில் அக்கரையில் காத்திருக்கும் 'தங்கப் புதையல்' குறித்த கனவுகள் மின்னுகின்றன. இப்பக்கத்திலிருக்கும் சில படங்களில் இக்காட்சிகளையே காண்கிறீர்கள். (இடது பக்கத்தில்) குடாநாட்டு உழைப்பாளர்பற்றிய உள்ளூர் பத்திரிகைத் தலைப்புக்கள்.





நண்பர், உறவினர்...பிரிவு





மீண்டும் வருகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 7 இதழ் 1 ஏப்ரல் 1981

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 3589

## நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு: பெப்ரவரி 16 — 28

22 வர்த்தகம்: வர்த்தகத்துறையின் மாறிவரும் போக்குகள்

24 விவசாயம்: உயர் விளைச்சல் தரும் நெல்லினங்கள்

27 பொருளாதாரம்: செலாவணி விகிதமும் ரூபா பெறுமதியும் அரசாங்க செலவில் வெட்டு

## விஷேச அறிக்கை

3 மத்திய கிழக்கு அலை — நேற்று, இன்று, நாளை

வினிதா ஜயசிங்கா 8 ஐக்கிய அரபு அமீர் இராச்சியங்களில் வீட்டுப் பணியாட்களாகப் பெண்கள்

நிஹால் பெரோரா 16 வடக்கில் புதிய போக்குகள்

## சிறப்புக் கட்டுரைகள்

சுவர்ணு ஜயவீர 30 இலங்கையில் பெண் கல்வியும், வேலைவாய்ப்பும் — பிரச்சினையின் பரிமாணங்கள்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத் தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும், எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும், அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதன் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- இலங்கையின் தெங்குக் கைத்தொழில்—தற்போதைய நெருக்கடியும், புனருத்தாரணத்துக்கான சாத்தியப்பாடுகளும்
- வறுமைப் பிரச்சினை — மாயைகளின் திரைகளுக்குப் பின்னால் தெரிகின்ற உண்மைகள்
- பொருளாதாரத்தின் மீதான அமுக்கங்கள்
- பீடைகொல்லிகளும் பட்டினி உலக மக்களும் — "ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் பலி"

## அட்டைப் படம்

குணரத்ன எம். கமகேயின் தூரிகையிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

## பெப்ரவரி

16 (பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழு, வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு ஆகிய திட்டங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்ட போதிலும்) பிற நாட்டாருக்கு தனியார் காணிகளை விற்பதனைத் தடுக்கவும், நில, கட்டடக் குத்தகை என்பவற்றை ஒழுங்குபடுத்தவும் அரசாங்கம் சட்டங்களைத் ஆக்கத் தீர்மானித்திருப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெங்காயம் தற்போது மிகையாக உற்பத்தி செய்யப்பட்டிருப்பதனுல், சந்தைப்படுத்தற் திணைக்களம் வெங்காயத்துக்கான ஏற்றுமதிச் சந்தைகளைத் தேடுவதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறியது. யாழ்ப்பாணமும், எம்பிலிபிடியாவும் அதிகளவு வெங்காயத்தை உற்பத்தி செய்துள்ளன.

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினதும், அதன் ஒன்பது பிராந்திய போக்குவரத்துச் சபைகளதும் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டுள்ளது. இ. ம. போ. சபைக்கு புதிய பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஒன்பது பிராந்திய போக்குவரத்துச் சபைகளுக்கும் பொறுப்பாக தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமனஞ் செய்யப்பட்டுள்ளனர்.

17 துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் "சி" பகுதிக்கு, உலக வங்கி 10 கோடி டொலர் பாரிய திட்டக் கடனென்றை வழங்கும் என தற்போது இடம்பெற்று வருகின்ற ஒப்பந்தங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. இத் திட்டம் சௌதி நிதியினுல் இணைந்து நிதிப்படுத்தப்படும் என ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

ஜப்பானின் ஷென்மீ இறப்பர் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தினுல் கையாளப்படுகின்ற கார்களுக்குத் தேவையான சகல இறப்பர்ப் பொருட்களையும் தயாரிப்பதற்கு இலங்கை டயர் கூட்டுத்தாபனம், கிர் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக உத்தியோகபூர்வமான அறிக்கைகள் தெரிவித்தன.

கடந்த டிசம்பர் மாதம் மூன்ருவது வாரம் உற்பத்தியை ஆரம்பித்த, ரூபா 277 கோடி பெறுமதி வாய்ந்த சபுகஸ்கந்த யூரியா உர ஆலை, இதுவரையிலும் 25,000 தொன் யூரியாவை உற்பத்தி செய்துள்ளது. இந்த ஆலையின் மதிப்பீடு செய்யப்பட்ட இயலளவு நாளாந்தம் 940 தொன்னுகும்; இயக்கத்தின் முதலாவது வருடத்தில் இது நாளாந்தம் 650 தொன்னுக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

18 ஒபெக் நிறுவனம் இலங்கைக்கு 270 கோடி ரூபா கடன் வழங்கும் எனவும், இதில் 18 கோடி ரூபா பண்ட உதவியாக இருக்கும் எனவும் நிதி அமைச்சர் வாராந்த அமைச்சர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்; பிரான்சிய அரசாங்கம் இவ் வருடம் பல திட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ரூ. 60 கோடியாக தனது உதவியை அதிகரிக்கும் எனவும், அனுராதபுரம், பதுளை ஆகிய மாவட்டங்களில் இரு பிரதான திட்டங்களுக்கு இத்தாலி ரூ. 56கோடியை அளிக்கும் எனவும் 1982ல் மேற்கு ஜேர்மனி ரந்தெனிகல திட்டத்துக்கு ரூ. 40 கோடியை அளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனுதிபதி றீகனுல் முன்மொழியப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட மீளமைப்பு, அடுத்த வருடத்தில் வெளிநாட்டு உதவியை 26 சதவீதத்தினுல் குறைக்கும் என ஐ. அ. வரவு செலவுப் பணிப்பாளரினுல் வெளியிடப்பட்ட கணிப்பீடுகள் கூறுவதாக வாஷிங்டனிலிருந்து ஒரு ரொய்டர் செய்தி தெரிவிக்கின்றது. முன்னுள் ஜனுதிபதி கார்டரின் வெளிநாட்டு உதவிக் கோரிக்கையை 720 கோடி டொலரிலிருந்து 540 கோடி டொலராகக் குறைப்பதற்கும் புதிய நிர்வாகம் உத்தேசித்துள்ளது.

ஏழு பாரிய கைத்தொழில் நாடுகளான ஐ. அ., கனடா, ஐ.ரா., மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் என்பன இவ் வருடம், தமது மொத்த உள்ளூர் உற்பத்தியில் 1 சதவீதத்திற்கும் குறைந்த சராசரி வளர்ச்சியை எதிர்பார்க்கலாம் என இலண்டனில் பொருளாதார ஆய்வு அலகு வெளியிட்ட அச்சங் கலந்த முன்னிகழ்வுக் கூற்று தெரிவிக்கின்றது. இந்த ஏழு நாடுகளிலும் ஜப்பான் சிறந்த முறையில் தனது மொத்த உள்ளூர் உற்பத்தியை 2.5 சதவீதத்தினுல் அதிகரிக்கும் எனவும் இது தெரிவிக்கின்றது.

20 இலங்கையின் உற்பத்தியும், ஏற்றுமதியும் வருடாந்தம் 6 சதவீதத்தினுல் அதிகரிக்காவிடில், 1981க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா 2000கோடி பாரியளவிலான சென்மதி நிலுவையை அரசாங்கத்தினுல் தாங்க இயலாது இருக்கும் என நிதி அமைச்சர் கைத்தொழிலாளர்களையும், ஏற்றுமதியாளர்களையும் எச்சரித்தார்.

53 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள லுங்காவஹர திட்டம், செலவு அதிகரிப்புக்கள் காரணமாக தற்போது 90 கோடி ரூபாவாக உயருமென நிதி அமைச்சர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். இத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியினுல் நிதிப்படுத்தப்படுகின்றது.

ஆரம்பப்படியாக கொழும்புப் பிராந்தியத்தில் பி.ப 3-00—7-00 வரையில் நான்கு மணி நேர மின்வெட்டு அமுலாக்கப்பட்டுள்ளது.

ரூபா 1இலிருந்து ரூபா 3 வரை ஒரு போத்தல் சாராயத்தின் விலையை அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம் அதிகரித்துள்ளது.

23 தென் ஆசிய கூட்டுறவு சூழல் நிகழ்ச்சித் திட்டத்தினை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பிரதமர் ஆரம்பித்து வைத்தார்.

உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக உணவு இறக்குமதியைத் தீவிரமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக வர்த்தக அமைச்சர் ஒரு கூட்டத்தில் அறிவித்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

24 மேலதிக ஊழியர்களைக் குறைக்கின்ற சபையின் புதிய திட்டத்தின் கீழ், ஓய்வு பெற விரும்புகின்ற ஊழியர்களைஊக்குவிப்பதற்கு கொடையும், நட்டஈடும் கொடுக்க இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதன் ஊழியர்களின் தற்போதைய எண்ணிக்கை 65,000 ஆகும்; இது உண்மையான தேவையை விடவும் அதிகமாகும்.


26 தற்போதைய அரசாங்கக் கொள்கைகள் கிராமியத் துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை அளவீடு செய்வதற்கு, இவ் வருட ஆகஸ்ட் மாதத்தில் கிராமப் புறங்களில் செலவு, கொள்வனவு அமைப்பு தொடர்பாக ஓர் ஆய்வு நடத்தப்படவிருப்பதாக அபிவிருத்திச் செயலாளர் குழுவின் தீர்மானம் தெரிவிக்கின்றது.

27 இலங்கையின் முதலாவது சர்வதேச இரத்தினக் கல் ஏல விற்பனை. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினுல் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் 275வது கிளை, நிதி அமைச்சரினுல் கொழும்பில் ஒல்கட் மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது. தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளினுல் முன்னுரிமைகளை மீளொழுங்குபடுத்தி, செலவுகளைக் குறைப்பதற்கும், அபிவிருத்தித் திட்டங்களைத் தாமதப்படுத்துவதற்கும் அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படலாம் என நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனீ டி மெல் எச்சரிக்கை செய்தார். "நாம் சில கடினமான தீர்மானங்களை எடுக்கவும், எமது பெருமைகளை விழுங்கிக் கொள்ளவும் நேரிடலாம். இத் தீர்வுகளை நாம் இப்பொழுதே மேற்கொள்ளாவிடில், எதிர்காலத்தில் இதனை விடவும் தீவிரமான பொருளாதார, நிதிப் பிரச்சினைகளை எதிர்நோக்க நிர்ப்பந்திக்கப்படுவோம்" எனவும் அவர் கொழும்பு வர்த்தக சம்மேளனத்தில் முதலாவது சர்வதேச இரத்தினக் கல் ஏல விற்பனையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

கொள்ளத் தொடங்கியதையடுத்து பிற நாட்டுத் தொழிலாளர்கள் இப் பகுதிக்குக் குடிபெயர்ந்து செல்லத் தொடங்கினர். இவ்விதம் குடியேறியுள்ள தொழிலாளர் களின் எண்ணிக்கை பற்றிய தற் போதைய மதிப்பீடுகள் 20 லட்சத் துக்கும் 25 லட்சத்துக்குமிடையே வித்தியாசப்படுகின்றன. இப்பிர தேசத்தில் குடியேறியுள்ள வெளி நாட்டுத் தொழிலாளர்களில் மிகக் கூடிய தொகையினர் எனப் பதிவு செய்யப்பட்டோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்; அதையடுத்து எகிப்து, இந்தியா, ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் இடம்பெறுகின் றனர்; இதேவேளையில், இத்தொழி லாளர்களை ஏற்றுள்ள பிரதான நாடுகள் ஈரான், சவூதி அரே பியா, குவைத், லிபியா, கட்டார், ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங் கள் (எமிரேட்டுகள்), ஓமான் என்பனவாகும். இத் தொழிலா ளர்களை ஏற்றுமதி செய்த நான்கு வளர்முக நாடுகளையும் பொறுத்த வரையில் அந்நாடுகளிலிருந்து குடிபெயர்ந்த தொழிலாளர்களால் 1970களில் அனுப்பிவைக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி அந் நாடுகளின் வெளிநாட்டு வருமா னங்களில் ஒரு கணிசமான பகுதி யாக அமைந்திருந்தது; சில நாடு களைப் பொறுத்தவரை, இத் தொகை அவற்றின் வெளிநாட்டு நாணயச் சம்பாந்தியங்களில் அதி வேகமாக வளர்ந்துவரும் பகுதி களில் ஒன்ருக அமைந்திருந்தது. இத் தொழிலாளர்களை ஏற்கும் நாடுகளைப் பொறுத்தவரை, பிற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் இத் தொழிலாளர்கள் அந் நாடுகளின் அபிவிருத்தி முயற்சி யில் ஒரு ஜீவாதாரமான பங்கை எடுத்து வந்துள்ளனர். ஆனல், பல காரணங்களுக்காக, பிற நாடு களிலிருந்து வந்து குடியேறும் சமூகங்களின் அபிவிருத்திக்கு ஊக்கமளிப்பதன் விவேகம் பற்றி இந்த விருந்தோம்பும் நாடுகளில் சந்தேகங்கள் எழுந்துள்ளன; என் ருலும், அந்நாடுகள் தங்களுடைய பொருளாதாரங்களை விரிவாக்குவ தற்கு அதிகமான தொழிலாளர் களைக் கொண்டிருக்கவேண்டிய தும், இத் தொழிலாளர்கள் பிற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படவேண்டியதும் அத்தி யாவசியமாயுள்ளது.





மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் நவீன மயமாக்கல் முயற்சிகளின் விளைவாக கைத்தொழில் நிர்மாணம் ஆகிய துறைகளில் பாரிய செய்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் பெருந் தொகையான வேலை வாய்ப்புக்களை உருவாக்கி யுள்ளன. சவூதி அரேபியாவின் தம்மாமில் பாலைவனத்தில் நிர்மாணிக் கப்பட்டுவரும் நவீன வீடமைப்புத் திட்டமொன்றை மேலேயுள்ள படம் காட்டுகிறது. கீழேயுள்ள படம் குவைத்தில் அல்-அஹ்மதி என்ற இடத்தில் அமைந்திருக்கும் எண்ணெய்க் களஞ்சியமொன்றைக் காட்டு கிறது. குவைத்தின் தொழிலாளர் படையில் மிகச் சிறு தொகை யினரே எண்ணெய் உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளனர்; அதே வேளையில் அரசாங்கம் 90 சதவீதத்துக்கும் கூடிய வருமானத்தை இத்துறையிலிருந்தே பெறுகிறது. இதன் விளைவாக வெளிநாடுகளி லிருந்து பெருந்தொகையான தொழிலாளர்களைப் பெறவேண்டிய அவ சியம் எழுந்துள்ளது.

# மத்திய கிழக்கு அலை

மத்திய கிழக்கு நாடுகள் 1973ம் ஆண்டளவில் பெற்ருேலியத்தி லிருந்து தங்களுக்குக் கிடைக்கும் வருமானங்களை அதிகரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களை வழங்கிவரும் மற்றும் நாடுகளில் போலவே, இலங்கையின் விஷயத்திலும், வளைகுடாப் பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் இந்த அபிவிருத்திகள் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட அம்சங்களுடன் நெருக்கமாக பின்னிப் பிணைந்துள்ளன. இவை அந்தந்த நாடுகளின் வெளிநாட்டு நிதிவளங்களை அதிகரிக்க உதவுகின்றன; அதேவேளையில், உள்நாட்டிலே பொருள் நுகர்வின் பேரிலோ அல்லது காணி, வீடமைப்பு போன்ற முதலீடுகளின் பேரிலோ செலவிடப்படும் இப்பணத் தொகைகள் விலைவாசிகளை மேலும் மேலே தள்ளுவதற்கு அடிகோலுகின்றன; பெருந்தொகையான தொழிலாளர்களுக்கு வேலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில் உள்நாட்டிலே தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் தட்டுப்பாடு மேலும் மோசமடைந்துள்ளது; அத்துடன், இலங்கையர்களுக்கு இப் பிரதேசத்தில் பொதுவான வியாபார வாய்ப்புகள் அபிவிருத்தியடைந்துள்ள அதே சமயத்தில் இந் நிலைமை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது நிச்சயமற்றதாயுள்ளது.

எழுபதுக்களின் முடிவில் பிற நாடுகளிலிருந்து தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இடையறாது வந்து குடியேறுவதைக் கட்டுப்படுத்தக் குடா நாடுகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தோன்றியது. எண்ணெயில் திடீர்ச் சுபிட்ச நிலை தோன்றியதையடுத்து 1970களின் மத்தியில் குடா நாட்டுக்கு கூட்டங் கூட்டமாக பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் சென்ற இந்தியா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை, இப்போக்கு எதிரிடையாக மாறுவதற்குரிய திட்டமான அறிகுறிகள் காணப்பட்டன. 1979, 1980 ஆகிய இரு வருடங்களிலும், தங்களுடைய 'விஸா' அனுமதிக்கும் காலத்துக்கு மேல் தங்கியிருந்த பல்லாயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பக் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1979ம் ஆண்டிலிருந்து குடா நாட்டில் உள்ள வேலைவாய்ப்புகளிலும், இப் பிரதேசத்தில் வேலை வாய்ப்புகளை நாடும் இந்தியர் — பாகிஸ்தானியரின் தொகையிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை, கடவுச் சீட்டுகளை வழங்கலும், குடிபெயர்வுகளும் 1979ம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்த பின்னர், 1980ம் ஆண்டில் 1978ம் வருட மட்டங்களுக்கு கீழே வீழ்ச்சியுற்றன. எனினும், பண அனுப்பீடுகளின் பெறுமதி அதிகரித்து வந்துள்ளதாகத் தோன்றுகிறது—ஒரு வேளை 1980ம் ஆண்டளவில் குடா நாட்டுப் பிரதேசத்திலே முன்னெப்போதும்விட அதிகமான இலங்கையர்கள் வேலை செய்து கொண்டிருந்திருக்கலாம். எனினும், அவ் வருடத்தில் புதிதாக வந்து குடியேறிய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும்.

மத்திய கிழக்கில் உள்ள தொழிலாளர் சந்தையைச் சற்றே நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், இதில் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகளை நன்கறிந்துகொள்ளலாம்.

1950 களின் முடிவில் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் சில தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஸ்தாபனத்தை (ஒபெக்) அமைக்க ஒன்றுகூடின. 60 க்கள் முழுவதும் 'ஒபெக்,' அங்கத்துவத்திலும் நிபுணத்துவ அறிவிலும் வளர்ச்சியடைந்தது. 1970-ம் ஆண்டு ஆரம்பமானதும் அவர்கள் தாங்கள் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் கைத்தொழில் பொருட்களின் விலைகளுக்கேற்ப எண்ணெய் வருமானங்கள் உயரவில்லை என்றும், தங்களுடைய ஓரே சொத்து இடையறாது வற்றிச் செல்வதற்குப் போதியவாறு ஈடு செய்யப்படவில்லை என்றும் குரல் எழுப்பினர். லிபியாவுக்கும் மேற்கத்திய எண்ணெய்க் கம்பெனி (ஒக்சிடென்டல் ஒயில் கம்பெனி)க்குமிடையே தோன்றிய ஒரு தகராறுடன் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையின் விளைவாக லிபியாவுக்கு மேலதிகமாக 50 கோடி டொலர் கிடைத்தது. 1974 ஜனவரியிலிருந்து 'ஒபெக்' நாடுகள் ஒன்று சேர்ந்து சுத்தி செய்யாத எண்ணெய்ப் பீப்பா ஒன்றின் பதித்த விலைகளை 11.65 அமெரிக்க டொலருக்கு அதிகரித்தன. இது 1973 ஜனவரியில் நிலவிய விலையைப் போல் நான்கு மடங்காயிருந்தது. இதன் விளைவாகப் பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளர்களின் வருமானம் 1973-ம் வருட மட்டத்துக்கு மேல் சுமார் 6500 கோடி அமெரிக்க டொலருக்கு அதிகரித்ததாக மதிப்பிடப்படுகிறது. உலக வருமான, மூலதனப் பகிர்வில் திகிலூட்டும் வகையில் ஏற்பட்ட இந்த மாற்றம் 1970 கள் முழுவதும் தொடர்ந்து நிலவி வந்ததுடன் இது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மட்டுமன்றி எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கும், வளர்முக உலகின் ஏனைய நாடுகளுக்கும் ஆழ்ந்த உட்சிக்கல்களை ஏற்படுத்தியது. டொலர்கள் வருடந்தோறும் பிரமாண்டமான அளவில் அராபியரின் கைகளுக்கு மாறியமை மேற்கத்திய பொருளாதாரங்களுக்கிடையே மிகுந்த கவலையை உண்டாக்கியது. ஏனென்றால், வருடாந்தம் இந்த உபரிப் பணத் தொகைகள் அராபியரின் கைகளுக்குப் போய்ச் சேர்வதானது, அபிவிருத்தியடைந்த உலகின் செலவிடும் சக்தியில் ஏறக்குறைய 5 சதவிகிதத்தை அராபியரின் ஒதுக்கு நிதிக்கு அகற்றுவதற்குச் சமமாயிருந்தது. இது இந்தப் பெற்றோ — டொலர்களைத் "திரும்பத் திரும்ப உபயோகிக்கும்" பிரச்சினையை உண்டாக்கியதென மேற்கு நாடுகள் கருதின.

இந்தப் பேரளவிலான உபரி வருமானங்கள் தங்கள் கைகளிலிருந்தால், மத்திய கிழக்கு எண்ணெய் உற்பத்தி நாடுகளுக்கு இரு மாற்று வழிகளே புலப்பட்டன; வெளிநாடுகளில் முதலீடு செய்வது அல்லது உள்நாட்டில் முதலீடு செய்வது. இந்த நாடுகளில் பல, தீரக்கூடிய தனியொரு மூலவளத்தையே தாங்கள் சார்ந்திருப்பதை உணர்ந்தன. அத்துடன், தங்களுடைய உபரி வருமானத்தில் பெரும்பகுதியை வெளிநாடுகளில் முதலீடு செய்தால், தங்களுக்கு 'உண்மையான' ஆதாயமாக என்ன கிடைக்கும் என்பதைப்பற்றி அவை நிச்சயமில்லாமலுமிருந்தன. ஆதலால், கைத்தொழில்களையும், நிர்மாணத் திட்டங்களையும் தங்களுடைய சொந்தப் பொருளாதாரங்களின் சமூகப் பொது முதலீடுகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற வழியையே அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்க முடியாதவாறு தெரிவு செய்தன.

1970 களில் வளைகுடா நாடுகளால் குவிக்கப்பட்ட பிரமாண்டமான மூலதனத் தொகைகள், இந்நாடுகளின் அபிவிருத்தி நிலையை முன்னேற்றும் நோக்கத்திற்காக எண்ணற்ற செய்திட்டங்களில் ஓரளவுக்கு முதலீடு செய்யப்பட்டன. துபாயில் 60 கோடி அமெரிக்க டொலர் செலவிலான அலுமினியத்தை உருக்குந் தொழிற்சாலை, சவூதி அரேபியாவின் 93 கோடி அமெரிக்க டொலர் செலவிலான ஜுபெயில் துறைமுகத் திட்டம், ஜுபெயிலில் தொடங்கப்பட்ட மற்றுமநேக பிரமாண்டமான பெற்ரோ — இரசாயனத் திட்டங்கள், பஹ்ரெயினின் 50 கோடி அமெரிக்க டொலர் செலவிலான கப்பல் செப்பனிடுந் துறை, கட்டாரின் 30 கோடி அமெரிக்க டொலர் செலவிலான உருக்குத் தொழிற்சாலை போன்ற பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களில் நிதிகள் கொட்டப்பட்டன.

இவ்விதமாக, 1973-ம் ஆண்டுக்குப் பின், இந்நாடுகளில் துரித கதியில் நடைபெற்ற நகரமைப்புத் திட்டங்களுடன், சமூகப் பொது முதலீடுகளையும் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு மின்னல் வேகத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக, துறைமுகத்தில் இடநெருக்கடி, பொருளாதாரத்தில் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகள், உள்நாட்டுப் பணவீக்கம் போன்ற அதிக பணச் செலவை இழுத்து வைக்கும் நிலைமைகள் தொடர்ந்து ஏற்பட்டு வந்தன. ஆனால், தொடக்கத்திலிருந்தே இருந்துவந்த பெரிய நிர்ப்பந்தம் என்னவென்ருல், சகல வகைகளிலும் பல்வேறு மட்டங்களிலும் நிலவிய ஆளணித் தட்டுப்பாடாகும். இந்நாடுகளுக்குள்ளேயிருக்கும் ஆள்பலம் அறவே போதாததாயிருந்தது. அவற்றிற்குத் தேவைப்பட்ட ஆள் பலத்தில் பெரும் பகுதி ஏனைய அரபு நாடுகளிலிருந்தும் ஜோர்தான், யேமன், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து தென் கொரியாவரை விரிந்து செல்லும் வளர்முக ஆசிய நாடுகளிலிருந்தும் பெறப்பட்டது.

## ஆள் பலத் தட்டுப்பாடு

பணவளம் படைத்த மத்திய கிழக்கு நாடுகள் தங்களுடைய ஆள்பலத் தேவையைப் பூர்த்தி செய்ய, பிறநாடுகளிலிருந்து வந்து குடியேறும் தொழிலாளர்களைச் சார்ந்திருக்க வேண்டியிருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. 1975-ம் ஆண்டளவில், லிபியா, சவூதி அரேபியா உட்பட வளைகுடா நாடுகளிலிருந்த மொத்தச் சுதேச மக்களின் தொகை 1 மில்லியனுக்குக் குறைவென்று மதிப்பிடப்பட்டது. (எனினும், இரண்டு மில்லியனுக்குச் சற்று அதிகமான பேரைக் கொண்ட லிபியாவின் ஜனத் தொகையும் 4 மில்லியனுக்கு மேற்பட்டோரைக் கொண்ட சவூதி அரேபியாவின் தேசிய ஜனத்தொகையும் ஒரு வித்தியாசமான அளவுகோல் கொண்டு கணிக்கப்பட்டன.) தற்கால கைத்தொழில் நாடுகளுக்கு இவை சிறிய ஜனத்தொகைகள் என்றே இன்னும் கருதப்படுகின்றன. ஏனென்ருல், அவை ஒரு பெரிய உள்நாட்டுச் சந்தையையோ அல்லது ஒரு கணிசமான தொழிலாளர் படையைத் திரட்டக்கூடிய ஒரு மூலத்தையோ உண்டாக்குவதாயில்லை.

இந்த அட்டவணையிலிருந்து தெரிவதுபோல், இந்த மூலதன வளமுள்ள நாடுகளில் கிடைக்கக் கூடியதாயுள்ள சுதேச தொழிலாளர்களின் தொகையும், தரச் சிறப்பும் வரையறுக்கப்பட்டனவாயிருந்தன. மேலும், சுதேச தொழிலாளர் படையிலிருந்து பெண்கள் நடைமுறையில் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். மேலும் இச்சமூகங்களில் உள்ள மக்களில் பெரும் பகுதியினர் உடலுழைப்பு வேலைகளை ஏளனமாகக் கருதி வந்தனர். அத்துடன் இந்தக் குடாநாட்டு அரபுச் சமூகங்களில் கணிசமான தொகையினர் (அவர்களுடைய முந்திய வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடுகையில்) எவ்வளவோ செல்வ வளமுள்ளவர்களாகிவிட்ட படியால், செல்வத்தைப் பெறுவதற்காக வேலை செய்ய வேண்டிய தேவை அவர்களுக்குத் தெளிவாகவில்லை. கடினமாக வேலை செய்ய அவர்களுக்கு இஷ்டமில்லாமலிருந்ததற்கும், உற்பத்தி செய்வதற்குப் பிரதிபலனாகச் சாதாரண தினசரி விகிதங்களில் கூலிகளையும், வேதனங்களையும் பெறுவதுபற்றி அவர்கள் சிந்திக்க முடியாத நிலையிலிருந்ததற்கும், (அவர்கள் அவ்வளவாக முயற்சியெடுக்காது) இவ்வளவு செல்வத்தைக் குவித்துவிட்டதே காரணம் என்று கூறப்பட்டுள்ளது. இச்சமூகத்திலுள்ள ஏழை மக்கட் பிரிவினர்கூட, தங்கள் சமூகத்தில் சிலர் எந்த வெளித் தெரியும் முயற்சியின்றியும் பொருள்வளம் அடைந்திருப்பதைக் கண்ணுற்றபோது வேலை செய்வதன் பெறுமதி குறைந்துவிட்டதெனக் கருதினர். இந்தப் பொருளாதாரங்களிலே மொத்தத் தேசிய உற்பத்தி (எண்ணெய் துறை)க்கு அதிக அளவில் உதவும் பொருளாதாரத் துறையில் நடைபெறும் உற்பத்தி முயற்சிகளுக்கும், அத்துறையில் வருமானத்தைப் பெறுவதற்குமிடையேயுள்ள பிணைப்பு மிகத் தளர்ந்ததாயிருந்தது.

### அட்டவணை 1

**மூலதனவளமுள்ள அரபு நாடுகளின் சுதேச மக்கள் தொகையும் சுதேச தொழிலாளர் படையும், 1975**

| நாடு | மக்கள் தொகை | தொழிலாளர் படை | சதவிகிதம் |
|---|---|---|---|
| குவைத் | 472,100 | 91,800 | 19.4 |
| கட்டார் | 67,900 | 12,500 | 18.4 |
| லிபியா | 2,223,700 | 449,200 | 20.2 |
| ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள் | 200,000 | 45,000 | 22 3 |
| பஹ்ரெயின் | 214,000 | 45,800 | 21.3 |
| சவூதி அரேபியா | 4,592,500 | 1,026,500 | 22.3 |

மூலம்: ஜே- ஸ்டேக்ஸ் பர்க்ஸ், கிளேவ் ஏ- சிங்கிளெயர் ஆகியோரின் ஆய்வு களிலிருந்தும்: குவைத் கட்டார் லிபியா; ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள், பஹ்ரெயின், சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் சர்வதேச குடியேற்றத் திட்டம்பற்றிய நடைமுறை தஸ்தாவேஜுகளிலிருந்தும் பெறப்பட்டன. (டர்ஹாம்: டர்ஹாம் பல்கலைக்கழகம், பொருளியல் பகுதி, 1977—78)

செய்த வேலைக்கு மறு கொடுப்பனவாகக் கூலி கொடுக்கும் வழமையான சந்தை வருவாய் முறையின் தொடர்பு நீக்கம் அரசாங்கக் கொள்கையினால் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது.தொழிலாளர் தட்டுப்பாடாயிருந்த போதிலும், குடாப் பிரதேசத்திலுள்ள எந்த அரசாங்கமும் பொருளாதாரத்தின் மிகவும் தடைப்பட்ட துறைகளில் பிரவேசிக்கத் தனது குடிமக்களுக்கு ஊக்கமளிப்பதற்கு விரும்பவில்லை. இதற்கு மாறாக, சுதேச மக்களுக்கு வசதி செய்வதற்காக அரசாங்கத் துறையில் பதவிகளைச் சிருஷ்டிக்கும் முறையும், தமது மக்களுக்கு வேண்டியவற்றை வழங்குவது ஆட்சியாளர்களின் பாரம்பரியக் கடமைகளாகும் என்பதற்குத் தற்காலத்தில் அளிக்கப்படும் வியாக்கியானத்தையே அதிகம் பிரதிபலிப்பதாயிருக்கிறதென்று இந்நாடுகளில் கருதப்பட்டு வந்துள்ளது . உதாரணமாக, குவைத்தில் சுதேச மக்கள் மட்டுமே மெய்ஆதனங்களை (வீடுகள், மரங்கள், கனிப்பொருள்கள், கட்டடங்கள் முதலியவற்றைக் கொண்ட காணிகள்)ச் சொந்தமாகக் கொண்டிருக்க முடியும்; வியாபார ஸ்தாபனங்களில் குவைதியர் குறைந்தபட்சம் 51 சதவிகிதப் பங்குகளைக் கொண்டிருக்க வேண்டும். அந்நிய ஒப்பந்தக்காரர்களும் ஏற்றுமதியாளர்களும் செய்திட்டங்கள்மீது ஏலத்தில் விலை கூறுவதற்கும், நாட்டில் தங்களுடைய சரக்குகளை விற்பதற்கும் குவைதிய முகவர்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், குவைதியர் மட்டுமே இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை (லைசென்ஸ்)ப் பெற முடியும். இம்முறை சிவில் சேவை அதிகாரிகளின் மதிப்பை அளவு மீறி உயர்த்துவதற்கு ஊக்கமளிப்பதுடன், தேர்ச்சி பெற்ற தொழிலாளர், பிழைப்புக்காக உத்தியோகம் பார்ப்போர், முகாமையாளர், ஆகியோரைப் புறக்கணித்து உறங்கும் (செயல்படாத) பங்காளிக்கும், முகவருக்கும் சன்மானம் வழங்குகிறது. உதாரணமாக, 90,000 பேரைக் கொண்ட செயலூக்கமுள்ள குவைதிய தொழிலாளர் படையில் சுமார் 75 சதவிகிதம் அரசாங்கத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளது; ஆனால், 1,000க்கும் குறைவான குவைதியர் குறைந்த சம்பளமுள்ள வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பல விஷயங்களில் முயற்சிக்கும் சன்மானத்துக்குமிடையேயுள்ள பிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, குடிமக்கள் இழிவாகக் கருதும் தாழ்வான வேலைகளைச் செய்ய இந்நாடுகள் அந்நியர்களை எதிர்பார்த்தது மட்டுமன்றி, எந்த வேலைகளைச் செய்யச் சுதேச மக்களுக்குப் பயிற்சியளிக்க முடியுமோ (இம்முறை அவர்களுடைய நலன்களுக்குப் பாதகமாயில்லாவிட்டால்), அந்த வேலைகளைச் செய்யவும் மீண்டும் அந்நியர்களையே எதிர்பார்க்கின்றன. எனினும், மிகச் சமீபகாலத்தில், சில மத்திய கிழக்கு நாடுகள் இப்பிரச்சினைகளில் சிலவற்றைப் பரிகரிக்க முயல்வதன் அவசியத்தை உணர்ந்துள்ளன.

மூலதனத்தையும் அத்துடன் தங்களுடைய அந்நிய நாட்டு ஆலோசகர்களையும் அல்லது ஒப்பந்தக்காரர்களையும் கொண்டுள்ள அராபியர்களில் பலர் சம்பள விகிதங்கள் குறைவாகவும், வேலை வசதிகள் அருமையாகவுமுள்ள வளர்முக நாடுகளின் ஆள்பலத்தைத் தங்களால் ஈர்க்க முடியும் என்பதையும், மேற்கு நாடுகளிலிருந்தோ அல்லது மற்றும் அரபு நாடுகளிலிருந்தோ வந்தவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்களைவிடக் குறைவாக இத்தொழிலாளர்களுக்கு வழங்க முடியும் என்பதையும் உணர்ந்தனர். வறிய வளர்முக நாடுகளிலிருந்து வரும் இத்தொழிலாளர் படை, தங்களுடைய கஷ்டமான சந்தர்ப்ப சூழ்நிலைகளின் விளைவாக மிகவும் பணிந்து நடப்பார்கள்; ஆதலால் மிகக் கடுமையான வேலைகளையும் இப்பொழுது விட நீண்ட வேலை நேரங்களையும் ஏற்றுக்கொள்வார்கள். இது அவர்களுடைய கொடிய வறுமை நிலையிலிருந்தே எழுகின்றது. ஆனால், பிறநாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் தொழிலாளர்கள் இந்தக் குடா நாடுகளில் தாங்கள் உள்ளாக்கப்படும் கடின வேலை நிலைமைகளைச் சகித்துக் கொள்வதற்கு தமது சொந்த நாட்டில் அவர்கள் அனுபவித்த வறுமை மட்டும் காரணமல்ல. தங்களைக் கட்டுப்பாடான முறையில் அமைத்துக் கொள்வதற்கும், பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களுக்குள்ள வரையறுக்கப்பட்ட சக்தியும், அடக்கு முறைகளால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படக் கூடியவர்களாயிருப்பதும்தான் அவர்களை இந்நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளனவென்று பரிசீலனைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. குடியேறிய தொழிலாளர் அந்நியர் என்ற அந்தஸ்து வகிப்பதனால் அவர்களுடைய அரசியல் உரிமைகள் பறிக்கப்படுகின்றன; அல்லது தொழிற்சங்கவாதிகள் என்ற முறையில் அவர்களுக்குள்ள உரிமைகள்கூடப் பறிக்கப்படுகின்றன. மேலும், குடியேறிய தொழிலாளர்களின் பலதரப்பட்ட தன்மையினால் இந்நாடுகளில் அவர்களுக்குள் சண்டைச்சச்சரவுகளைப் பரப்புவதும், பிளவுகளை உண்டாக்குவதும் மிகச் சுலபமாயிருக்கின்றது.

சகல விதமான ஆட்சேபனைகளும் உபத்திரவங்களுக்கு உட்படுத்தப்படும் பயமுறுத்தல்களைத் தோற்றுவிப்பதுடன், கடவுச்சீட்டுகளின் (பாஸ் போர்ட்) பறிமுதல், சகல வருவாய் வழிகளும் துண்டிக்கப்படல் ஆகியவற்றிற்குக் கூட அடிகோலுகின்றன. இவ்விதமாக, குடியேறிய தொழிலாளர் தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கு, மிகக் குரூரமான முறையில், போதிய பணத்தை எப்படியும் சம்பாதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

மத்திய கிழக்கில் குடியேறிய இந்தியத் தொழிலாளர் பற்றி "இன்றைய இந்தியா" (இண்டியா டுடே) என்னும் சஞ்சிகையிலிருந்து எடுத்துக் கூறப்படும் இரு உதாரணங்கள் இந்நிலைமையை எடுத்துக் காட்டுவதாகத் தோன்றுகிறது.

1979ம் ஆண்டில் துபாயிலுள்ள ஒரு செய்திட்டத்துக்காக எவ்வாறு 200 சொச்ச தொழிலாளர்கள் இந்தியாவில் திரட்டப்பட்டனரென்பதை இச்சஞ்சிகை எடுத்துரைக்கின்றது. பம்பாயிலுள்ள மிகப் பெரிய ஆள்திரட்டு முகவர் நிலையங்களில் ஒன்றைச் சேர்ந்த ஊழியரொருவர் அவர்களுக்கு மாதம் 1,200 திர்ஹம் (இந்திய ரூபா 2,700) சம்பளம் வழங்கப்படுமென்று உறுதி கூறினார். இலவச வசிப்பிடமும், உணவும், அத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் மேலதிக நேர வேதனத்தின் மீது சம்பளத்தை இரட்டித்துக் கொள்ளும் சந்தர்ப்பமும் வேலை பெறும் தொழிலாளருக்கு உறுதி கூறப்பட்டன. மேலும், உறுதி கூறப்பட்ட ஏற்பாட்டில் இலவச மின்சார வசதி, ஒரு குளிர்சாதனப் பெட்டி, போகவும் திரும்பவும் விமானப் பயணச் சீட்டுகள் ஆகியனவும் இடம் பெற்றிருந்தன. துபாயில் சுவர்க்க வாழ்க்கையை அனுபவிக்க அவர்கள் செய்ய வேண்டியது ஆள் திரட்டும் முகவருக்குத் தலா 10,000 ரூபா மட்டும் கொடுப்பதுதான். இந்த 200 சொச்ச தொழிலாளர்களும் தங்கள் வசமிருந்த காணிகளையும், நகை நட்டுக்களையும் விற்று, லேவாதேவிக்காரர்களிடம் கடன் பட்டு, பெருமகிழ்ச்சியோடு 'வெற்றி வாகனத்'தில் தாவியேறினர்.

குறித்த பணம் ஆள் திரட்டும் முகவருக்குச் செலுத்தப்பட்ட பின்னரே உறுதி கூறப்பட்ட விமானப் பயணச் சீட்டுகளுக்குப் பதில், எலித்தொல்லை மிகுந்த சரக்குக் கப்பலொன்றில் அவர்கள் ஆட்டு மந்தையைப் போல் ஏற்றப்பட்டனர். பத்து நாட்களுக்குப் பிறகு துபாய்க்குப் போய்ச் சேர்ந்ததும், கட்டட ஸ்தலத்துக்கு அவசரமவசரமாகக் கொண்டு போகப்பட்டு, அவர்களுக்கு வசிப்பிடம் வழங்கப்பட்டது. மெல்லிய மரப்பலகைக் குடிசைகள். வந்து சேர்ந்தவுடனே, அவர்களுடைய கடவுச் சீட்டுகள் பிடுங்கப்பட்டு, அவர்களுக்கு நாளொன்றுக்கு 20 திர்ஹம் (இந்திய ரூபா 45) சம்பளமாக வழங்கப்படும் என்றும், அவர்கள் தினந்தோறும் ஒன்பது மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்றும், மேலதிக நேர வேலை வசதி வழங்கப்பட மாட்டாதென்றும் சாப்பாட்டுக்குப் பணம் தர வேண்டுமென்றும் பண்பற்ற முறையில் சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டது. குளிர் சாதனப் பெட்டி, மின்சார வசதி ஆகியன அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாவென்பது இயற்கையே. சுமார் 20 தொழிலாளர்கள் ஆட்சேபித்த போது, அவர்கள் அவ்விடத்திலேயே வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர். அவர்களுக்கு அவர்களுடைய கடவுச் சீட்டுகள் தரப்படவில்லை; அத்துடன், தாய்நாட்டுக்குத் திரும்ப விமானப் பயணச் செலவும் வழங்கப்படவில்லை.

ஒரு மாதகாலம் வரை முதுகை முறிக்கும் வேலையைச் செய்த பின்னர் 50 தொழிலாளர்களைக் கொண்ட மற்றொரு கோஷ்டி வெறுத்துப் போய் வேலையை விட்டு, நாட்டில் பெருகிக் கொண்டிருந்த சட்ட விரோதமான, வேலையில்லாத, குடியேறிய தொழிலாளர்களுடன் சேர்ந்துகொண்டனர். "நாங்கள் தொழில் காரியாலயத்துக்கு ஒரு தூதுகோஷ்டியைக் கூட இட்டுச் சென்றோம். ஆனால், அங்குள்ள அதிகாரிகள் நாங்கள் சொல்வதைக் கேட்பதில் அக்கறை கூட காட்டவில்லை" என்று அவர்களிடையேயிருந்த ஒரு கொத்தனார் (மேசன்) கூறினார்.

கடைசி வரை வேலையில் ஒட்டிக் கொண்டிருப்பதென முடிவு செய்த எஞ்சிய தொழிலாளர்கள் வளைகுடாப் பிரதேசத்தில் ஒரு தொழிலாளியின் வாழ்க்கையாக அமைந்திருக்கும் பொல்லாத வட்டத்துக்குள் பிரவேசித்தனர். "இது கொத்தடிமை முறையேயன்றி வேறல்ல. நாங்கள் புறப்பட முடியாது. ஏனென்றால், அவர்கள் எங்களுடைய கடவுச் சீட்டுகளைத் திருப்பித்தர மறுக்கிறார்கள். எங்களுடைய வேலை விசாக்கள் அந்தக் குறித்த கம்பெனியின் பெயரில் தான் உள்ளன. நாங்கள் ஆட்சேபித்தால், எங்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். ஸ்தானீகராலயத்தினால் ஒன்றுஞ் செய்ய முடியாது. எனவே நாங்கள் மௌனமாகக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதுதான்" என்று கேரளத்தைச் சேர்ந்த தோமஸ் என்னும் ஒரு தொழிலாளி கூறினார்.

மற்றோர் உதாரணம்: கட்டட நிர்மாணம், சரக்குகளைக் கப்பலேற்றல், இறக்குமதிகள் ஆகியவற்றில் ஈடுபடும் அபுதாபியிலுள்ள ஒரு கம்பெனிக்காக 51 இந்தியர்கள் திரட்டப்பட்டனர். கட்டடங் கட்டும் வேலைக்காக ஆள் திரட்டும் ஒரு முகவர் நிலையத்தினால் பம்பாயில் அவர்கள் திரட்டப்பட்டனர். அவர்களுக்கு ஒரு மாதம் தகுதிநிர்ணய காலமாக இருக்கும் என்றும், மாதம் 1,300 திர்ஹம் (இந்திய ரூபா 2,950) சம்பளம் வழங்கப்படும் என்றும் அசல் ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது.

அபுதாபி போய்ச் சேர்ந்த போது, அவர்களுடைய மாதச் சம்பளம் 600 திர்ஹம் (இந்திய ரூபா 1,350) ஆக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது; வசிப்பிட வசதி வழங்கப்படவில்லை. காலை 7 மணியிலிருந்து இரவு 11 மணி வரை இடைநிறுத்தமின்றி வேலை செய்யும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். எந்த வாராந்த விடுமுறைநாளும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்றும், ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளருக்கும், தேர்ச்சிபெற்ற தொழிலாளருக்கும் எந்த மேலதிக வேதனமும் கொடுக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒரு வாரம் வரை இரவில் வெகுநேரம் வரை வேலை செய்து, தெருவில் படுத்துறங்கிய பின்னர், எல்லோரும் கூட்டாக சேர்ந்து ஆட்சேபனை செய்தனர். குறித்த செய்திட்டத்திலிருந்த இந்திய மேற்பார்வையாளர் அவர்களை அவ்விடத்திலேயே வேலை நீக்கஞ் செய்ததோடு கடவுச் சீட்டுகளைத் திருப்பித்தரவோ அல்லது அவர்களைத் தாய்நாட்டுக்கு அனுப்பவோ மறுத்துவிட்டார்.

1980 பெப்ரவரியில் ஏறக்குறைய ஒரு மாதகாலம் வரை அவர்கள் இந்திய சமூக நிலையத்தின் சபா மண்டபத்தில் தரையில் படுத்துறங்கிக் கொண்டிருந்தனர். தாய்நாட்டுக்குத் திரும்பும் வரை அவர்களுக்கு உணவளிப்பதற்காக இந்நிலையம் நிதி திரட்டியிருந்தது. பிரஸ்தாப கம்பெனி 150 தொழிலாளர்களுக்குரிய ஒரு குழு 'விஸா'வைக் கொண்டிருந்தது. இந்தியர்களின் இன்னொரு கோஷ்டி மார்ச் மாத ஆரம்பத்தில் வேலைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக, அவர்களை வராது தடுத்து நிறுத்தி விடும்படி அபுதாபியிலுள்ள இந்திய தூதுவராலயம் உத்தரவுகளைப் பிறப்பித்தது.

"ஆள் திரட்டும் முகவருக்குப் பணம் செலுத்துவதற்காக எங்கள் வாழ்நாள் முழுவதும் சேமித்ததையெல்லாம் நாங்கள் இழந்துவிட்டோம்," என்று 51 பேரைக் கொண்ட குழுவைச் சேர்ந்த ஒரு மெக்கானிக் கூறினார். பொலீசாருக்குச் செய்த முறைப்பாடுகளால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. தொழில் காரியாலயம் மார்ச் 17ம் திகதிக்கு ஒரு வழக்கு

(9ம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய அரபு அமீர் இராச்சியங்களில் வீட்டுப் பணியாட்களாக பெண்கள்

—வினிதா ஜயசிங்கா

இலங்கையிலுள்ள பெண்கள் பணியகத்தின் பணிப்பாளரான வினிதா ஜயசிங்கா கடந்த வருடப் பிற்பகுதியில் ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்களுக்கு விஜயம் செய்தபோது, அங்கு வீட்டுப்பணியாட்களாயுள்ள பெண்கள் அவரிடம் பல முறையீடுகளைத் தெரிவித்தனர். மிதமிஞ்சிய வேலைகள், ஓய்வு நேரமின்மை; சம்பாதிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க மறுப்பு; குறைவான சம்பள விகிதங்கள்; வீட்டு எஜமானாலோ, வீட்டு எஜமானியாலோ, முகவராலோ தாக்கப்படுதல்; வீட்டு எஜமானின் முறைகேடான நடத்தை— அவரிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் இவை சிலவாகும். அபு-தாபியில் உள்ள இலங்கைத் தூதராலயத்தில் இருக்கும் ஒரு சில சர்ச்சைக்கிடமான ஆவணக் கோவைகளை அவர் கவனமாகப் படித்துப் பார்த்தார்; தூதராலயத்தின் புதிய விவகாரப் பொறுப்பாளருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்; வீட்டுப் பணிப் பெண்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒரு சில பெண்களையும் சந்தித்த பின், அவர் எமது வெளிநாட்டு விவகார அமைச்சுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் கீழ்க்கண்ட அபிப்பிராயங்களையும், சிபார்சுகளையும் தெரிவித்துள்ளார்.

## மிதமிஞ்சிய வேலைகள்

ஒரு வீட்டுப் பணிப்பெண் செய்ய வேண்டியிருக்கும் வேலைகளின் தன்மை இலங்கையிலுள்ள ஒரு வீட்டுப் பணியாள் செய்யும் வேலைகளைவிட எவ்வளவோ அதிகமாகும். வீடுகளில் பெரும்பாலானவை பெரியனவாயுள்ளன; குடும்பங்களும் பெரியனவாகவே உள்ளன அப்படியிருக்கையில் எல்லா வேலைகளையும் ஒரு தனியாளே-வீட்டுப் பணிப் பெண்ணே- செய்ய வேண்டியிருக்கிறது.

## ஓய்வு நேர மின்மை

மிதமிஞ்சிய வேலைகளின் காரணமாகவே ஓய்வு நேரம் கிடைக்காமலிருக்கிறது.

## சம்பாதித்த சம்பளத்தை வழங்க மறுப்பு

பல முறைகளில் எஜமானர் சரியாகத் தரவேண்டிய சம்பளத்தைத் தரவில்லை. சில சந்தர்ப்பங்களில் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைவிடக் குறைவாகவே கொடுத்துள்ளார்.

## குறைவான சம்பள விகிதங்கள்

வீட்டுப் பணிப் பெண்கள் சாதாரணமாக நாளொன்றுக்கு 250 திர்ஹம் வீதம் சம்பளம் பெறுகிறார்கள். இது இலங்கை ரூபாவில் 1,000/- ரூபாவுக்குச் சமமாகும். எனினும், நாட்டிலுள்ள ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் மற்றும் சம்பள விகிதங்களுடன் ஒப்பிடுகையில் இச்சம்பள விகிதம் மிகக் குறைவாக அல்லது ஆகக் குறைவானதாக உள்ளது. ஒரு வீட்டுப் பணிப் பெண் செய்ய வேண்டியிருக்கும் வேலைச் சுமையைக் கவனிக்கும்போது, அவளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் உண்மையில் மிகக் குறைவானதே.

வீட்டு எஜமானால், வீட்டு எஜமானியால், முகவரால் தாக்கப்பட்டதாக அடிக்கடி அறிவிக்கப்படுகிறது. வீட்டுப் பணிப் பெண்ணுக்கு எஜமானியால் சூடுபோடப்பட்ட சில சம்பவங்களும் நடந்துள்ளன. வேலை குறித்து எஜமானியின் உத்தரவுக்குப் பணிப் பெண் இணங்காததன் விளைவாகவே இத்தகைய இம்சை நடைபெற்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. வீட்டு எஜமானால் தாக்கப்பட்டதற்கு, பணிப் பெண்கள் எஜமானின் அனுமதியின்றி வீட்டை விட்டுப் போகும் வழக்கமே அடிக்கடி காரணமாயிருந்துள்ளது. பணிப் பெண்கள் முறைப்பாடுகளுடன் முகவரிடம் செல்லும்போது அவரால் உபத்திரவிக்கப்பட்டுள்ளனர்.

## முறைகேடான நடத்தை

பணிப்பெண் தகாத முறையில் நடந்து கொண்ட சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ள அதே வேளையில், ஒரு வீட்டு எஜமான் வீட்டுப் பணிப் பெண்ணை முறைகேடாக நெருங்கியுள்ள சம்பவங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

எனினும், வெகு சில பெண்களே தங்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகளின் தன்மை குறித்துத் திருப்தி தெரிவித்தனர். வீட்டுப் பணிப்பெண்ணாயிருக்கும்போது, அவளை வேலைக்கமர்த்தியுள்ள குடும்பத்தின் நம்பிக்கையை அவள் பெற்றால், அவளுடைய வாழ்க்கை அதிக சந்தோஷமுள்ளதாயிருக்குமென்று சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

## நிலைமையைச் சீர்திருத்துவதற்கான யோசனைகள்

ஆழ்ந்த கவனத்தை அவசியம் பெறவேண்டிய பிரச்சினைகள், மிதமிஞ்சிய வேலைகள்; குறைவான சம்பள விகிதங்கள்; முறைகேடான நடத்தை ஆகியனவாகும்.

1. தொழில் அமைச்சு உள்நாட்டு ஆள் திரட்டல் முகவர் நிலையங்கள் மீது அதிக கட்டுப்பாட்டையும், மேற்பார்வையையும் பிரயோகிக்க வேண்டும். வெளிநாட்டு சேவை வாய்ப்பு மசோதா இதில் ஓரளவுக்கு உதவியாயிருக்கிறது.

2. சகல ஆள்திரட்டல் முகவர் நிலையங்களும் வீட்டுப் பணிப் பெண்களைத் திரட்டுவதற்கு முன்பு வேலையின் தன்மை பற்றித் திருப்திகரமான விவரத்தைத் தெரிவிக்க வேண்டும். அந்த விவரத்தில் கீழ்கண்ட தகவல்கள் அடங்கியிருக்க வேண்டும்.

(அ) வேலை செய்யவிருக்கும் நாட்டைப் பற்றிய நியாயமான விவரணம்.

(ஆ) வேலையின் தன்மை பற்றி விவரமான குறிப்புக்கள்.

(இ) வேலைநேரங்களும், அத்துடன் ஓய்வு நேரங்களும் அல்லது விடுதலை நேரமும் குறித்துரைக்கப்பட வேண்டும்.

(ஈ) இத்தகவல்கள் சிங்களத்திலும்/தமிழிலும்/ ஆங்கிலத்திலும், அத்துடன் அரபு மொழியிலும் தயாரிக்கப்பட வேண்டும்.

3. அபு-தாபியிலுள்ள தூதராலயம் சகல ஆள் திரட்டல்களுக்கும் பொறுப்பாயிருக்க வேண்டும். வெளிநாட்டுத் தூதராலயத்தின் தொழில் திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்படுவதற்கான முறையொன்று அமைக்கப்படவேண்டும். பிறகு தொழில் திணைக்களம் நிர்வாகப் பகுதியில் கிடைக்கக் கூடியதாயுள்ள சகல வெற்றிடங்களும் முதலில் தூதராலயத்துக்கு அறிவிக்கப்பட்டு, பின்னர் அவை அதை உள்நாட்டு முகவர் நிலையங்களுக்குத் தெரிவிக்கும். தொழில் திணைக்களம் வெளிநாட்டுத் தூதராலயம் ஆகிய இரண்டும் நிலைமையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை இது உறுதிப்படுத்தும்.

4. சகல வெளிநாட்டு ஆள் திரட்டல் முகவர் நிலையங்களும் அபு-தாபியிலுள்ள வெளிநாட்டுத் தூதராலயத்திலும், சகல உள்நாட்டு ஆள் திரட்டல் முகவர் நிலையங்களும் தொழில் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட வேண்டும். அத்துடன், உள்நாட்டு ஆள் திரட்டல் முகவர் நிலையங்களுக்கும் வெளிநாட்டு ஆள் திரட்டும் முகவர் நிலையங்களுக்கும் களங்கமின்மைச் சான்றுப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

5. அப்பிரதேசத்தைச் சேர்ந்த சகல வெளிநாட்டு ஆள்திரட்டல் முகவர் நிலையங்களும் அபு-தாபியிலுள்ள வெளிநாட்டுத் தூதராலயத்தில் மீளளிக்கத்தக்க கட்டுப் பணம் செலுத்த வேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க வேண்டும். மிதமிஞ்சிய வேலைகள் அல்லது தாக்குதல் அல்லது சம்பாதித்த சம்பளத்தை வழங்க மறுப்பு அல்லது எஜமானனின் முறைகேடான அணுகல்கள் போன்ற பணிப்பெண்ணின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் அவளிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை அவளால் நிறைவேற்ற முடியவில்லையானால், அவளை நாட்டுக்குத் திருப்பியனுப்பிவிட இப்பணத்தை உபயோகிக்கலாம்.

ஒரு தனிப்பட்ட கட்சி இலங்கையிலிருந்து ஒரு வீட்டுப் பணிப்பெண்ணின் சேவைகள் வேண்டுமென்று கேட்டால், அக்கட்சி உள்நாட்டு முகவருக்கு 3,000 திர்ஹம் (இது ஏறக்குறைய 900 அமெரிக்க டாலருக்குச் சமம்) கொடுக்க வேண்டுமென்று ஓர் உள்நாட்டு முகவர் கூறுகிறார். இப்பணத்திலிருந்து கீழ்கண்ட கடமைப் பொறுப்புகள் ஏற்கப்படுகின்றன.

(அ) ஐக்கிய அரபு அமீர் இராஜ்யத்துக்கு ஒரு வழிப் பயணத்துக்கான டிக்கெட்... ஏறக்குறைய 440 அமெரிக்க டொலர்.

(ஆ) இலங்கை முகவருக்குத் தரகுப் பணம்... 50 அமெரிக்க டொலருக்கும் 75 அமெரிக்க டொலருக்கும் இடைப்பட்ட ஒரு தொகை.

(இ) கடல் தந்திக் கட்டணங்கள், விமான நிலையத்திலிருந்து வாகனப் போக்குவரத்து முதலியன போன்ற நானாவித செலவுகள்.

மேற்சொன்ன கடமைப் பொறுப்புகளைப் பூர்த்தி செய்தபின் இந்தப் பக்கத்திலுள்ள ஒரு முகவர் 200 அமெரிக்க டொலருக்கும் 2,500 அமெரிக்க டொலருக்குமிடையே இலாபம் பெறுகிறார். இப்பிரதேசத்தாக்குள்ளே மீளளிக்கத்தக்க கட்டுப்பணத்தைக் கட்டலாம்.

இதனால் வெளிநாட்டு ஆள் திரட்டல் முகவர்கள் மீது வெளிநாட்டுத் தூதராலயத்துக்கு அதிக கட்டுப்பாட்டதிகாரமும் மேற்பார்வையதிகாரமும் உறுதிப்படும்.)

6. வெளிநாட்டுத் தூதராலயம் வேலை நிலைமையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டியதவசியமாகும். வேலையாட்களுடன் (குறிப்பாகப் பிரச்சினைக்குரியவர்களான வீட்டுப் பணிப் பெண்களுடன்) குறைந்த பட்சம் காலாண்டுக் கூட்டங்கள் (மூன்று மாதங்களுக்கு ஒருமுறை) கூட்டப்படவேண்டும்.

7. ஆள் திரட்டல் பிரச்சினையை மட்டும் முதலாவதாக வீட்டுப் பணிப் பெண்களின் பிரச்சினையை மட்டும் தனியே கையாள்வதற்காக ஒரு சிரேஷ்ட அதிகாரியையும் (இவர் பெண்ணாயிருப்பது விரும்பத்தக்கது) இன்னோர் அதிகாரியையும் கொண்ட ஒரு வேலைப் பகுதியை வெளிநாட்டுத் தூதராலயத்தில் அமைப்பது அவசியமாகும்.

8 கிரமமான முன்னேற்ற அறிக்கைகளைப் பெறுதல் முதலியனவற்றின் மூலம் ஆள் திரட்டல் முகவர் நிலையங்கள் மீது அதிக கட்டுப்பாட்டையும், மேற்பார்வையையும் கொண்டிருக்கும் நோக்கத்துக்காக, தொழில் திணைக்களத்தின் வெளிநாட்டு வேலைப் பகுதி பலப்படுத்தப்பட வேண்டியதவசியமாகும்.

9. முற்கூறிய இரு சிபார்சுகளைப் பொறுத்தவரை (மேலே உள்ள 7ஆவது 8ஆவது சிபார்சுகள்), அவை,

1. பிரச்சினையை ஒழுங்குபடுத்தும்.
2. வேலை வசதிக்கு அதிகமான வழிகளைத் திறந்துவிடும்.

அத்துடன், உள்நாட்டு முகவர் நிலையங்கள், வெளிநாட்டு முகவர் நிலையங்கள் ஆகிய இருவகை முகவர் நிலையங்களும் சரியாக நடைபெறுகின்றனவாவென்று எழுந்தமானமாகப் பரிசோதிப்பதையும் அவை உறுதிப்படுத்தும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையைக் குறித்தது. ஆனால், அக்கம்பெனியின் உரிமையாளர் விசாரணைக்குத் தோற்ற முடியாதென மறுத்துவிட்டார். விவகாரம் அந்த இடத்தில் நிற்கின்றது.

மத்திய கிழக்குக்குக் குடிபெயர்ந்த இந்தியத் தொழிலாளர் பற்றி "இன்றைய இந்தியா" என்னும் சஞ்சிகையிலிருந்து மேற்கோளாக எடுத்துச் சொல்லப்பட்ட இரு சம்பவங்கள் இந்நிலைமையைத் தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றன.

எனினும், சுதேச மக்கள் செய்ய மறுத்துவிட்ட கடினமான வேலைகளைச் செய்து முடிக்கப் பிற நாட்டுத் தொழிலாளர் தேவைப்படுகின்றனர் என்ற கருத்து, கதையில் பாதிதான். இத்தகைய வேலைகள் கொடுக்கப்படுவதற்கு அவை "அசுத்தமானவை," "ஆன்மாவை அழிப்பவை" என்பது மட்டும் காரணமல்ல; அவை நல்ல சம்பளமில்லாத வேலைகள் என்பதே காரணம். குடியேறிய தொழிலாளர்கள் அங்கு இருந்து வருவதற்கு "கஷ்ட சாத்தியமான— குறைந்த சம்பளமுள்ள" வேலைகள் அங்கு இருப்பது காரணமல்ல; குடியேறிய தொழிலாளர் பிரசன்னமாயிருக்கிறார்கள் — "கஷ்ட சாத்தியமான, குறைந்த சம்பளமுள்ள" வேலைகளைச் செய்ய அவர்களைக் கூப்பிட்டனுப்பலாம் என்பதனாலேயே அவ்வேலைகள் அங்கு இருந்து வருகின்றனவென்பதை ஆராய்ச்சிப் பரிசீலனைகள் நிலைநாட்டியுள்ளன. இதற்கோர் தெளிவான உதாரணம் கட்டடக் கைத்தொழிலாகும். கட்டடக் கைத்தொழிலின் தன்மை பிரதானமாகச் சிறு அளவிலேயே இருந்து வந்துள்ளது. ஏனென்றால், நவீன கைத்தொழில்மயமான முறைகளைக் கைக்கொள்வதைவிட, குடியேறிய தொழிலாளர்களைச் சுலபமாக வேலைக்கமர்த்துவதனால் மூலதனத்திலிருந்து அதிக இலாபம் அடைய முடியும். குடியேறிய தொழிலாளர்கள் கிடைக்காதிருப்பின், இக்கைத்தொழில் நவீனமான முறைகளைக் கைக்கொள்ள வேண்டியிருந்திருக்கும். அந்நிலைமை இக்கைத்தொழிலில் முதலீடு செய்வோரின் மூலதன வளத்தைப் பெருமளவுக்குப் பிழிந்திருக்கும். குடியேறிய தொழிலாளர் கிடைக்காதிருந்திருப்பின், கட்டடக் கைத்தொழிலை நவீனமயமாக்க வேண்டியிருந்திருக்கும். அப்பொழுது இத்துறையில் இலாப விகிதம் பெருமளவுக்குக் குறைந்திருக்கும். அதனாற்றான், "கஷ்ட சாத்தியமான வேலைகள்" இல்லாமலோ அல்லது அவற்றைச் செய்யும் குடியேறிய தொழிலாளர்கள் இல்லாமலோ மூலதனத்தால் பயனடைய முடியாது என வாதிக்கப்படுகிறது. மூலதனத்தின் திடசங்கற்பத்திலுள்ள "கட்புலனாகாத அமைப்பு" இதுதான். இதன் விளைவுகளை மட்டுமே நாம் பொதுவாகக் காண்கிறோம்.

குடியேறிய தொழிலாளர் படையொன்றினால் இந்த அதிதி நாடுகளுக்கு ஏற்படும் இன்னொரு பெரிய நன்மை என்னவென்றால், அவர்கள் மிகக் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள் என்பது ஒருபுறமிருக்க, (பொதுவாக நம்பப்படுவதற்கு மாறாக), தொழிலாளர் படையிலுள்ள சிறந்த உடல் நலத்தைக் கொண்ட பிரிவாகும். இது உண்மை. ஏனென்றால், பிற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் தொழிலாளர் பொதுவாக இள வயதினராகவும், வேலை செய்யும் வாழ்க்கையில் முழு முயற்சியெடுத்துப் பேரூக்கத்துடன் வேலை செய்யும் பருவத்திலுமிருக்கின்றனர். மேலும், நல்ல உடல் நலமற்றோர் இந்நாடுகளில் வேலைக்கு அமர்த்தப்படாதிருப்பதைப் பொதுவாக உடலாரோக்கியப் பரிசோதனைகள் உறுதிப்படுத்தி விடுகின்றன.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 2
## மத்தியகிழக்கு வேலைவாய்ப்பு

| நாடு | வருடம் | தொகை | பண அனுப்பீடு 100 கோடி டொலரில் |
|---|---|---|---|
| அப்கானிஸ்தான் | 1977 | 200,000 | .2 |
| வங்காளதேசம் | 1978 | 100,000 | .15 |
| எகிப்து | 1977 | 350,000 | 1.0 |
| இந்தியா | 1978 | 300,000 | 1.6 |
| ஜோர்தான் | 1977 | 150,000 | .4 |
| தென் கொரியா | 1978 | 80,000 | .2 |
| பாகிஸ்தான் | 1978 | 200,000 | 1.1 |
| பிலிப்பைன்ஸ் | 1978 | 80,000 | .1 |
| சூடான் | 1977 | 50,000 | .04 |
| தாய்லாந்து | 1978 | 30,000 | .02 |
| யெமன் அரபுக் குடியரசு | 1977 | 500,000 | 1.0 |
| யெமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு | 1977 | 300,000 | .2 |

மூலம்: சர்வதேச நாணய நிதி ஆய்வு,
பினான்சியல் டைம்ஸ் அனுபந்தம்,
செப். 4, 1978

மேலும், தொழிலாளர் படையில் உள்ளவர்களில் பாதுகாப்பே இல்லாத— படுமோசமான —சுகாதாரமற்ற நிலைமைகளில் வேலை செய்வோர் குடியேறிய தொழிலாளர்களேயாவர். இதனால் வேலைகளின் ஒழுங்கமைப்பில் பெருந்தொகைப் பணம் மிச்சப்படுவதுடன், அவர்களுடைய வேலை அதிபர்களுக்கும் அதிதி நாட்டுக்கும் பணச் செலவுகள் மேலும் குறைகின்றன. அத்துடன், வாலிப வயதினராகவும், உற்பத்திக்கு உதவவல்லவர்களாகவும் உள்ளவர்களிடையேயிருந்து தொழிலாளர்களைத் திரட்டுவதன் மூலம் குடியேறிய தொழிலாளர்களால் இலாபத்தின் மொத்தச் சராசரி விகிதம் அதிகரிக்கின்றது. ஆண் அல்லது பெண் தொழிலாளரின் வேலை செய்யும் வாழ்க்கை முடிவடைந்ததற்குப் பின், அவர்களைப் "போஷிக்கும்" செலவுகளையும் பராமரிப்புச் செலவுகளையும் தவிர்ப்பது சாத்தியமாயிருப்பதை அதிதி நாட்டின் மூலதனம் காண்கின்றது. 1970களில் ஐரோப்பாவிலே ஒரு தொழிலாளிக்கு ஏறக்குறைய 10,000 அமெரிக்க டொலர் வீதம் இச்செலவுகள் ஆனதாகப் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் அக்காலத்தில் நடத்திய பரிசீலனையொன்று மதிப்பிட்டது.

குடியேறிய தொழிலாளர்கள் வாழும் நிலைமைகளையும், வேலை செய்யும் நிலைமைகளையும் பொறுத்த வரை, அவர்களில் பெரும்பாலோர் ஒன்றில் விவாகமாகாதவர்களாகவோ "கட்டாய" பிரமசாரிகளாகவோ இருக்கின்றனர். சந்ததி விருத்திச் செலவுகளையோ அல்லது குடும்பங்களின் பராமரிப்புச் செலவுகளையோ அதிதி நாடுகள் ஏற்பதில்லை. ஆதலால் இவ்விதமாக, பொதுக் குடியிருப்பு வசதி, பாடசாலைகள், ஆஸ்பத்திரிச் சேவைகள், மற்றும் சேமாபிவிருத்தி நன்மைகள் போன்ற கூட்டு வசதிகளின் செலவுகள் மிச்சமாகின்றன.

தொழிலாளர் வழங்கலில் ஏற்பட்ட பற்றுக் குறையை ஈடுசெய்வதற்காகத் தொழிலாளரின் இறக்குமதிகளை அனுமதிப்பது அல்லது அதற்குத் தீவிர ஊக்கமளிப்பதே மத்தியகிழக்கு நாடுகளிலுள்ள இந்த அரசாங்கங்களின் கொள்கையாக இருந்தது. 1975ம் ஆண்டளவில், குடியேறிய தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துவிட்டதை மேலே உள்ள அட்டவணையில் காணலாம்.

குறிப்பாக குவைத், கட்டார், ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள் போன்ற நாடுகளில் பிறநாடுகளிலிருந்து வந்து குடியேறிய சமூகங்களின் தொகை சுதேச மக்களின் தொகையை மிஞ்சிவிட்டது. அமீர் இராஜ்யங்களில் (எமிரேட்டுகள்) பெருந்தொகையான சுதேசிகளல்லாதார் அபுதாபிக்குள்ளும் துபாய்க்குள்ளும் பிரவேசித்தனர். இன்று அவர்களின் தொகை சுதேச மக்களின் தொகையை மிஞ்சி, 1 சுதேசிக்கு 5 சுதேசிகளல்லாதார் என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. பிறநாடுகளிலிருந்து வந்து குடியேறிய இச்சமூகங்களின் தன்மை தொழிலாளரை வழங்கிய நாடுகளின் பூகோள அண்மையையும், வேலைவாய்ப்புகளின் அளவையும், வகையையும், அதிதிநாடுகளுடைய செல்வத்தின் அளவையும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் மட்டத்தையும் பிரதிபலித்தவாறு மாறுபடுகின்றது. இவ்விதமாக பஹ்ரெயினில், ஆசியாக்காரர்களே மிகப் பெரிய தனிக் குழுவாக அமைந்துள்ளனர். அவர்களுக்கு அடுத்தபடியாக ஓமானியர் வருகின்றனர். அங்குள்ள பிறநாட்டுச் சமூகத்தினரில் பிரிட்டிஷாரும் ஒரு முக்கிய பிரிவினராக விளங்குகின்றனர். மறு பக்கத்தில், ஓமான் அமீர் இராஜ்யம் தனது தொழிலாளர் படையில் ஏறக்குறையக் கால் பங்கை ஏற்றுமதி செய்துவிட்டு, இலங்கை உட்பட அயலிலுள்ள அரபு நாடுகளிலிருந்தும், ஆசிய நாடுகளிலிருந்தும் தனது

## அட்டவணை 3
## தெரிவு செய்யப்பட்ட நாடுகளுக்கான குடிபெயர்ந்த தொழிலாளர்களின் பண அனுப்பீடு

(பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களில்)

| நாடு | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 |
|---|---|---|---|---|---|
| அப்கானிஸ்தான் | — | — | — | — | 200 |
| வங்காளதேசம் | — | 18 | 43 | 53 | 75 |
| எகிப்து | 87 | 189 | 340 | 615 | 1025 |
| இந்தியா | 235 | 297 | 535 | 713 | 1000 |
| ஜோர்டான் | 45 | 75 | 167 | 411 | 425 |
| கொரியா | 154 | 154 | 158 | 195 | 172 |
| பாகிஸ்தான் | 151 | 230 | 56 | 590 | 1110 |
| பிலிப்பைன்ஸ் | — | 104 | 353 | 112 | 130 |
| இலங்கை | — | — | 128 | 7 | 12 |
| சூடான் | — | — | 3 | 12 | 40 |
| யெமன் அரபு குடியரசு | 129 | 159 | — | 796 | 1000 |
| யெமன் மக்கள் ஜனநாயக குடியரசு | 33 | 41 | 307 | 115 | 179 |

மூலம்: சர்வதேச நாணய நிதி ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய தொழிலாளர் படையில் பாதியை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. எனினும், ஓமானிலுள்ள பிறநாட்டுச் சமூகத்தினரில் மிகப் பெரும்பாலோர் இந்தியரும் பாகிஸ்தானியருமாவர்.

இடையறாது குறைந்து வரும் சுதேசிகளின் சதவிகிதமும் வளர்ந்து வரும் ஜனத்தொகையும் சேர்ந்து மத்திய கிழக்கு நாடுகளில் சிலவற்றின் ஸ்திரநிலைக்கு ஒரு அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளன. தங்கள் சொந்தக் குடிமக்களின் பலம் இத்தகைய ஓர் அளவுக்குக் குறைந்திருப்பதால் தங்கள் சொந்த நாடுகளின் பொருளாதார, கலாசார, அரசியல் தனித்துவத்துக்குக் கூட ஆபத்து ஏற்படுமென இந்நாடுகள் அஞ்சத் தொடங்கியுள்ளன. எனினும், ஜனத்தொகையின் வளர்ச்சியில் காணப்படும் இந்தச் சமச்சீரற்ற ஏற்றத்தாழ்வானது, இந்நாடுகளின் எண்ணெய்ச் செல்வத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் தோன்றியுள்ள எதிர்பாராத (ஆனால் தவிர்க்க முடியாத) தீங்குகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது.

தொழிலாளரின் இறக்குமதிகளுக்கு ஊக்கமளிக்கும் இக்கொள்கையின் விளைவாக, 1980ம் ஆண்டு முடிவில் இக்குடா நாடுகளில் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட அந்நிய நாட்டுத் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு ஜனத்தொகை உருவாகியுள்ளது. 1973ம் வருட எண்ணெய் விலை உயர்வையடுத்து ஏற்பட்ட திடீர்க் கட்டட நிர்மாணப் பெருக்கத்தின்போது அவர்கள் தேவைப்பட்டனர். இப்போக்கு கிட்டத்தட்ட 1970களின் முடிவுவரை நீடித்தது. அப்போது சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டுமென்று அரபு அரசாங்கங்கள் திடீரென முடிவு செய்தன. குறிப்பாக, சமூகப் பொது முதலீடுகளையும், கைத்தொழில் திட்டங்களையும் துரிதமாக அபிவிருத்தி செய்வதற்காகக் குடியேறிய தொழிலாளர்களை உபயோகித்ததனால் தாம் பெருமளவுக்கு நன்மையடைந்துள்ளனவென்பதை மத்தியகிழக்கு நாடுகளில் பல ஏற்றுக்கொண்டன. அபிவிருத்தியின் இந்தக் கட்டம் முடிவடைவதற்கான அறிகுறிகள் தோன்றியதும், அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பான தமது கொள்கையை அதிதி அரசாங்கங்கள் மீளாய்வு செய்யத் தொடங்கின. கட்டட அமைப்பு வேலைகளில் திடீரென ஏற்பட்ட அதிகரிப்பின் வேகம் குறையத் தொடங்கியதுடன், குடாப் பிரதேசத்தில் தேவைப்பட்ட பிற நாட்டுத் தொழிலாளரின் வகை மாற ஆரம்பித்தது. புதிதாகத் தோன்றியுள்ள கப்பல் செப்பனிடுந் துறைகள், அலுமினியம் தொழிற்சாலைகள், பெற்றோ—இரசாயன அமைப்புகள், மற்றும் கைத்தொழில் வசதி நிலையங்களை நடத்துவதற்கு தேர்ச்சி பெறாத தொழிலார் படைக்குப் பதிலாக தேர்ச்சியற்ற தொழில் நுட்பவியலாளர்கள் தேவைப்படுகின்றனர். இந்நிகழ்வுப் போக்கு வேறு வகையான அதிக படிப்பறிவுள்ள ஆசியத் தொழிலாளரை ஈர்த்துள்ளது. ஆதலால், இவர்கள் அதிக சமூக, அரசியல் விழிப்புணர்வு உள்ளவர்களாயிருக்கின்றனர். அத்துடன், குடாப் பிரதேசத்தில் தேர்ச்சி பெறாத தொழிலாளர் அனுபவித்த கஷ்டமான நிலைமைகளை இவர்கள் சகிப்பதும் குறைவு. இவ்விதமாக 1979ம் ஆண்டளவில், குடியேறிய தொழிலாளரிடமிருந்து ஆட்சேபனைகள் அதிகரித்தன. தமது வாழ்க்கை நிலைமைகளைக் குறித்து அவர்கள் முறையிட்டுக் கொண்டிருந்தனர். இது அதிதி அரசாங்கங்களுக்குக் கவலையை உண்டாக்கத் தொடங்கியது. அதன் விளைவாக, அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவது சம்பந்தமாகக் குடா நாடுகள் சில தமது கொள்கைகளை மறுபரிசீலனை செய்தன. குடியேறிய தொழிலாளர்களில் குறிப்பாகத் தேர்ச்சி பெறாத தொழிலாளர் தாய்நாட்டுக்குத் திரும்புவதை உறுதிப்படுத்துவதற்காக, அரசாங்கங்கள் இந்த நாடுகளில் வேலை வழங்குவதற்கு அதிக கட்டுப்பாடுகளை அமுல் செய்யத் தொடங்கின. ஒப்பந்தத்தின் பேரில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள குடியேறிய தொழிலாளர் ஒருபுறமிருக்க, ஒப்பந்தச் சேவையின் முடிவில் குடாப் பிரதேசத்தில் (எப்படியோ சமாளித்து) தங்கியிருந்து சட்ட விரோதமாக வேலை பெறும் அந்நியர்களின் தொகை வளர்ந்து வருவதும் அவதானிக்கப்பட்டது. இவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டிலில்லாத ஒரு பெரிய குழுவாயிருப்பதை அதிதி நாடுகள் கண்டன. ஆதலால், அவர்களுடைய 'விஸா'க்கள் காலாவதியாகிவிட்டன வென்ற காரணத்தின் பேரில் இவர்களில் எத்தனை பேரைச் சாத்தியமோ அத்தனை பேரை வெளியேறும்படி கட்டாயப்படுத்தினர்.

ஈரானில் ஏற்பட்ட புரட்சி இஸ்லாமிய கோட்பாடுகள் தொடர்பான தமது பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்ய பல நாடுகளைத்

அட்டவணை 4

இலங்கைக்கான மாற்றுச் செலுத்தல்கள்

(பத்து இலட்சம் ரூபாக்களில்)

| ஆண்டு | தனியார் மாற்றுதல்கள் | ஏற்றுமதி வருவாய்கள் | ஏற்றுமதி வருமானத்தில் தனியார் மாற்றுதல்களின் சதவீதம் |
|---|---|---|---|
| 1970 | 17.9 | 2033.0 | .9 |
| 1971 | 20.4 | 2039.0 | 1.0 |
| 1972 | 23.6 | 2015.7 | 1.2 |
| 1973 | 47.7 | 2629.8 | 1.8 |
| 1974 | 54.3 | 3502.9 | 1.6 |
| 1975 | 60.0 | 3968.5 | 1.5 |
| 1976 | 108.0 | 4840.1 | 2.2 |
| 1977 | 189.7 | 6569.6 | 2.9 |
| 1978 | 609.8 | 13193.0 | 4.6 |
| 1979 | 935.4* | 15282.0 | 6.1 |
| 1980 | 2164.0** | 17388.3 | 12.5 |

மூலம்: மத்திய வங்கி

* உத்தேசம்

** 1980 முதல் அரையாண்டுக்கான ரூபா 1082 மில்லியனிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்டது.

மிகச் சரியான ஒரு மதிப்பீட்டின் பிரகாரம், 1973ம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற தனியார் மாற்றுதல்களில் சுமார் 75 சதவீதமானவை மத்திய கிழக்கிலிருந்து வந்தவை என்று கருத முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டியது. தமது மதத்தின் கோட்பாடுகள் அந்நியச் செல்வாக்குகளால் எந்த அளவுக்குச் சிதைவுறலாம் என்பது பற்றிய விழிப்புணர்வும் ஏற்படலாயிற்று. மேலும், தங்களுடைய ஜனத்தொகைகளில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டோர் பிறநாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்களாயிருப்பதையும், அரசியல் ரீதியாக அவர்களால் ஆபத்து ஏற்படக் கூடும் என்பதையும் இந்நாடுகள் மேன்மேலும் உணர்வதாகத் தோன்றியது.

உதாரணமாக, மெக்காவில் நடைபெற்ற கிளர்ச்சியில் பல அந்நியர்கள் பங்குபற்றிய சம்பவம் சவூதிமக்களுக்குத் திடீர்ப் பயத்தை உண்டாக்கியது. இன்று இங்கு குடியேற வரும் தொழிலாளர் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் தங்கள் சார்பில் பொறுப்பேற்கும் ஓர் உத்தரவாதியை மட்டுமன்றிக் குறிப்பிட்ட வேலைக்கான பத்திரங்களையும் கொண்டிருக்க வேண்டும்; பொதுவாக இவர்கள் தங்களுடைய குடும்பங்களைக் கொண்டுவர அனுமதிக்கப்படுவதில்லை. இந்நாடுகள் சிலவற்றில் குடியேறிய தொழிலாளர் நகருக்கு வெளியேயுள்ள தற்காலிக வசிப்பிடங்களில் குடியிருக்கின்றனர். இவர்களால் சுதேச மக்கள் அனுபவிக்கும் வசதிகளையும், நலவுரிமைகளையும் அனுபவிக்க முடிவதில்லை.

அந்நியர்கள் இவ்வளவு பெருந்தொகையாக இருந்து வருவது, அரசியல், சமூகக் காரணங்களின் பேரில் அதிகாரிகளின் மனங்களில் சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. 1979 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற குடாப் பிரதேச தொழில் மந்திரிகள் மகாநாட்டைத் தொடர்ந்து, சில நாடுகளிலுள்ள அரசாங்கங்கள் “அராபியர்மயமாக்கும்” கருதுகோள் ஒன்றை முன்வைத்துள்ளன. எதிர்காலத்தில் அரபு மக்களுக்கு மட்டுமே வேலைகள் வழங்கப்படவேண்டும் என்பதே இதன் அர்த்தம். இந்நடவடிக்கையையடுத்து, சில குடா நாடுகளில் ஆசியாக்காரர்களைக் கொண்ட தொழிலாளர் படை குறைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பதிலாக பாலஸ்தீனரும், எகிப்தியரும், சிரியரும், ஈரானியரும் அமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

எண்ணெய் வளமிக்க குடா நாடுகளுக்கு இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில்களையும், மற்றும் வசதிகளுக்கான நிலையங்களையும் நடத்துவதற்குக் கட்டடத் தொழிலாளர், தேர்ச்சி பெறாத தொழிலாளர் ஆகியோர் குறைவாகவும், தொழில் நுட்பவியலாளர்கள் மிக அதிகமாகவும் தேவைப்படுகின்றனர். 1980ம் ஆண்டில் இந்நாடுகளுக்குக் குடிபெயர்ந்தவர்களின் தொகை வீழ்ச்சியடைந்திருப்பதிலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

குடாப் பிரதேசத்தின் குறுக்கே காலியாயுள்ள அல்லது கட்டிமுடிக்கப்படாத பல கட்டடங்கள் பரவலாகக் காணப்படுவதுடன், பேரளவிலான கட்டட நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டு விட்டனவென்பதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தென்படுகின்றன. குவைத்திலும், அமீர் இராஜ்யங்களிலும் இரவோடிரவாகக் காளான்களைப் போலத் தோன்றிய ஆயிரக்கணக்கான மாடிக் கட்டடங்களும் தனியறை வாசஸ்தலங்களும் குடியிராத நிலையில் விடப்பட்டுள்ளன. 1970களின் முடிவில் உலகெங்கும் ஏற்பட்ட தற்காலிக வியாபார மந்தம், இந்நாடுகளுக்குள் நடைபெற்ற ஊதாரித்தனமான செலவுகள் ஆகியவற்றின் விளைவாகச் சில நாடுகளில் 40 சதவிகிதத்துக்கு மேல் பண வீக்கம் ஏற்பட்டது. வங்கிகள் எச்சரிக்கையான கொள்கையொன்றைக் கைக்கொள்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டன. இதனால் பல கட்டட நிர்மாணத் திட்டங்கள் அரைகுறையாக நிறைவேற்றப்பட்ட நிலையில் கைவிடப்பட்டன. உதாரணமாக, ஷர்ஜா ‘ ‘ஒரு விண்வெளியுக பேய் நகரம்’’ என வர்ணிக்கப்பட்டது. ஏனென்றால், பாலைவனத்தில் அமைந்துள்ள அதன் நவீன கட்டடங்கள் அரைவாசி கட்டி முடிக்கப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றன. துபாயில் பெரு முயற்சியின் பேரில் அமைக்கப்பட்டுள்ள வர்த்தக—பொருட் காட்சி நிலையம் குடாப் பிரதேசத்திலேயே மிக உயரமான கட்டடமாகும். அதைக் கட்ட ஏறக்குறைய 10 கோடி டொலர் செலவாயிற்று. இது துபாயின் “மிகப் பெரிய வெள்ளை யானை” (எவ்வித இலாபமோ அல்லது பயனோ அளிக்காமல், பராமரிப்பு அதிக பணச் செலவை உண்டாக்கி வரும் கட்டடம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனென்றால், அது ஆண்டின் பெரும் பகுதியில் காலியாகவே உள்ளது. நவீனமயமாக்கலை நோக்கி ஒரு பிரமாண்டமான நடவடிக்கையை எடுக்க முயல்வதில் சில நாடுகளில் சமூகக் காரணிகள் பிரச்சினைகளை உண்டாக்கி வந்தன. பாரம்பரிய வழிகளுக்கும் சிந்தனைக்கும் மேற்றிசைப்பாங்கான வழிகளுக்கும் சிந்தனைக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இவ்விதமாக, சவூதி அரேபியாவில் உள்ள ஜித்தா நகரில் 50 கோடி டொலர் செலவிலான 200—அலகு தனியறைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுக் கிட்டத்தட்ட ஓராண்டு சென்ற பின்னரும் இன்னும் குடியிராத நிலையில் உள்ளது. ஏனென்றால், பெண்களுக்கெனத் தனியான லிப்டுகளை (மேலுயர்த்தி இயந்திர அமைப்பு) இல்லையெனச் சமயப் பழமைவாதிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். எகிப்திலும், பிரிட்டனிலும் படித்த சிற்பியான ஜித்தாவின் வாலிப வயது மேயர் முஹம்மது செய்யது ஃபார்ஸி, “எங்களுடைய மிகப் பெரிய பிரச்சினை மிதமிஞ்சிய வேகத்தில் மேற்கொள்ளப்பட்ட விஸ்தரிப்பேயாகும்” என்று கூறியுள்ளார். இது இந்நாடுகளிலுள்ள அதிகாரிகளின் மனநிலையை எடுத்துக் காட்டுவதாயுள்ளது. தங்களுடைய நவீனமயமாக்கும் முயற்சிகளின் பாதக விளைவுகள் குறித்து அவர்கள் கவலைப்படுகின்றனர்.

## தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் தாக்கம்

குடாப் பிரதேசத்துக்குள் குடிபெயர்ந்த தொழிலாளரின் இந்தப் பாய்ச்சலின் பயனாக ஆசிய நாடுகளும், அரபு நாடுகளும் நன்மையடைந்துள்ளனவெனினும் பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றன. குடிபெயர்ந்த தொழிலாளர் பெருமளவுக்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணியைத் தங்கள் நாடுகளுக்குள் கொண்டு வந்திருந்த போதிலும், இதில் பெரும் பகுதி மூலதன முதலீட்டின் உருவத்தில் விட நுகர்ப் பொருள்கள் மீது செலவிடப்பட்டுள்ளது. தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகள் குடிபெயர்ந்த தங்களுடைய தொழிலாளரிடமிருந்து பண





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பீடுகளை ஈர்ப்பதில் பொதுவாக வெற்றி பெற்றுள்ளன; ஆனால், இந்தப் பணத்தொகைகளைப் பயன்படுத்துவதில் போதிய கவனம் செலுத்தவில்லை. பண அனுப்பீடுகளிலிருந்து உற்பத்திக்கு உதவும் முதலீடுகள் அவ்வளவாக வரவில்லையென்றும், இந்த நிதிகள் சம்பந்தப்பட்ட நாடுகளின் நீண்டகால அபிவிருத்தி வாய்ப்புக்கு உதவவில்லையென்றும் ஆராய்ச்சிப் பரிசீலனைகள் எடுத்துக் காட்டியுள்ளன. குடிபெயர்ந்த தொழிலாளர்களில் பெரும்பாலோர், பெருமளவுக்குத் தேர்ச்சி பெறாதவர்கள் அல்லது அரை குறைத் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் நாடு திரும்பியதும், குடாநாடுகளிலிருந்த போது தாங்கள் ஆசைப்பட்ட வாழ்க்கைத் தரங்களைப் பராமரிப்பதற்காக உடனடியான நுகர்வின் பேரில் தங்களுடைய பணம் முழுவதையும் செலவிட வேண்டியிருப்பதைக் கண்டனர். இது முறையே இறக்குமதிகளில் அதிகரிப்பு ஏற்படவும், பண வீக்கத்தை உண்டாக்கும் விதத்தில் பண நிரம்பலைப் பெருக்கவும் அடிகோலியது. ஏனென்றால், தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பல இந்தப் பண அனுப்பீடுகளைச் செலவிடக்கூடிய நுகர்ப் பொருள்களின் இறக்குமதியை அனுமதிக்கின்றன. இந்த அளவுக்கு, குறித்த நன்மைகள் பிரதானமாகக் குறுகிய காலத்துக்குரியனவேயென்று கூறப்படுகிறது.

மேலும், தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கோணத்திலிருந்து நோக்குமிடத்து, அந் நாடுகளுக்கு ஏற்படும் ஒரு பெரிய நஷ்டம் நாட்டிலிருந்து வெளியேறிய இத்தொழிலாளரால் ஏற்பட்ட உற்பத்தி நஷ்டமாகுமெனக் காணப்பட்டுள்ளது. இவர்கள் வெளியேறிய ஆரம்ப கட்டங்களில் இந்த நஷ்டம் சிறிதாயிருக்கலாம். ஏனென்றால் நாட்டைவிட்டு வெளியேறுவோர் பொதுவாக வேலையற்றவர்களாகவோ அல்லது போதிய வேலையில்லாதவர்களாகவோ இருக்கின்றனர். ஆனால், தொழிலாளரின் வெளியேற்றம் நீடிக்கும் போது உற்பத்தி நஷ்டம் அதிகரிக்கும் அதேவேளையில், நாட்டில் தங்கியிருக்கும் தொழிலாளர் உயர் சம்பளம் கேட்டு நெருக்குகின்றனர். இவ்விதமாகப் பண வீக்கத்தின் நிர்ப்பந்தங்கள் தோன்றுகின்றன.

தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து தேர்ச்சிபெற்றோர் வெளியேறுவதாலும், அவற்றின் சொந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தடைப்படுகின்றன. உதாரணமாக, வங்காள தேசத்தில் ஏற்பட்டுள்ள பிரதான நஷ்டம் சகல விதமான தொழில் நுணுக்கர்களுக்கும் வெளியேறிவிட்டமையாகும் குறிப்பாகத் தொழிற்சாலைத் தொழில் நுணுக்கர்கள், பொருத்துநர்கள், உருக்கி ஒட்டுவோர் (வெல்டர்), மெக்கானிக்குகள் ஆகியோர் வெளியேறிவிட்டனர். இந்த வெளியேற்றத்தினால் அபிவிருத்தித் திட்டங்கள், பெரிய கைத்தொழில்கள் ஆகியவற்றில் அநேகம் தங்களுடைய தேர்ச்சி பெற்ற ஆள்பலத்தை இழந்துவிட்டன. வங்காள தேசத்தைப் பற்றிய தமது துண்டுப் பிரசுரத்தில் மைக்கல் ஸ்கொட் தந்துள்ள ஓர் உதாரணத்தை ஈண்டு காண்போம்: "சிட்டகாங்கில் பழுத்த அனுபவம் படைத்த பத்து சிவில் எஞ்சினியர்களைக் கொண்டிருக்க வேண்டிய பெரிய அளவிலான தண்ணீர்த் திட்டமொன்று இருக்கிறது. அவர்களில் எட்டுப் பேர் வெளியேறப் போகின்றனர். வேலைத் தலத்தில் இரண்டு எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். வேலை நின்றுவிட்டது. நல்ல படிகள் (அலவன்ஸ்) கிடைத்து வந்ததன் காரணமாக முன்பு வயலிலிருக்க விரும்பியவர்கள் இப்பொழுது டாக்காவில் இருக்க விரும்புகின்றனர். ஏனென்றால், தங்களை புத்திய கிழக்குக்கு அனுப்பக் கூடிய யாரேனும் ஓர் உயரதிகாரியின் கவனத்தை அங்கு ஈர்க்க முடியுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள்."

குடிபெயரும் தொழிலாளர்களின் இந்த வெளியேற்றத்தினால் சமூக விளைவுகளும் ஏற்படுகின்றன. பெற்றோரில் ஒருவரை மட்டும் கொண்டு—அஃதாவது தாய் அல்லது தந்தையை மட்டும் கொண்டு—பெருந்தொகையான குழந்தைகள் வளர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது; தொன்று தொட்டு ஆணே பெற்றோருக்குரிய கட்டுப்பாட்டதிகாரத்தைச் செலுத்து வரும் சமூகங்களில் சில குழந்தைகள் தந்தையரின்றி இருக்கின்றன; வேறு சமூகங்களில் சில குழந்தைகள் தாய்மாரின் சம்ரட்சணையில்லாதிருக்கின்றன. மேலும், குடிபெயர்ந்த தொழிலாளர்களில் இளம் சந்ததியினர் தமது குடும்பங்களுக்குத் திரும்பும் போது தாங்கள் முன்பு கொண்டிருந்ததைவிட எவ்வளவோ அதிக பணத்தோடும், அதிக எதிர்பார்புகளுடனும், வித்தியாசமான வாழ்க்கைப் போக்குகளோடும் வருகின்றனர். இதன் விளைவாகக் குடும்பத்தில் பல்வேறு கொந்தளிப்புகள் ஏற்படுகின்றன.

## வளைகுடா பிரதேசத்தில் இலங்கையர்

முற்போந்த பகுப்பாய்வின் அடிப்படையில், இந்தக் குடிபெயர்வு இலங்கையருக்கும், முழுப் பொருளாதாரத்துக்கும் எவ்வளவு நன்மை செய்துள்ளதென்ற கேள்வி எழுகின்றது.

அட்டவணை 5

### இலங்கையில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள்

| மாதம் | 1977 | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|---|
| ஜனவரி | 1792 | 7824 | 12244 | 6477 |
| பெப்ரவரி | 2589 | 7133 | 12375 | 6316 |
| மார்ச் | 3728 | 9274 | 12691 | 6387 |
| ஏப்ரல் | 2898 | 8229 | 11786 | 5648 |
| மே | 3728 | 8233 | 10806 | 6769 |
| ஜூன் | 5279 | 11157 | 13026 | 7488 |
| ஜூலை | 6017 | 10719 | 13309 | 8784 |
| ஆகஸ்ட் | 5254 | 10869 | 13008 | 8620 |
| செப்டம்பர் | 5310 | 8343 | 11488 | 10314 |
| ஒக்டோபர் | 6771 | 9612 | 8175 | 10849 |
| நவம்பர் | 6645 | 9511 | 7558 | 9374 |
| டிசம்பர் | 8223 | 10556 | 5173 | 10418 |
| மொத்தம் | 58234 | 111660 | 131639 | 97444 |
| மாதாந்த சராசரி | 4853 | 9305 | 10970 | 8120 |

மூலம்: குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, பாகிஸ்தான், இந்தியா, வங்காளதேசம், இந்தோனீஷியா, பிலிப்பைன்ஸ், தென் கொரியா போன்ற ஆசிய நாடுகள் யாவும் 1970கள் முழுவதும் குடா நாடுகளுக்குக் கட்டடத் தொழிலாளர்களை வழங்கி வந்துள்ளன. இந்த வேலை வாய்ப்புகள் ஏறக்குறைய 1975ம் ஆண்டளவிலேயே இலங்கையருக்குக் கிடைக்கத் தொடங்கின. அப்பொழுதிருந்து எண்ணெய் வளமுள்ள நாடுகளில் வேலை பெறுவதற்காக பெருந் தொகையினர் குடிபெயர்ந்து வந்துள்ளனர். ஆண்டொன்றுக்குச் சராசரியாகச் சுமார் 10,000 பேர் வீதம் இக்குடிபெயர்வு நடந்துள்ளது. இன்று இப்பிரதேசத்திலுள்ள குடிபெயர்ந்த இலங்கையரின் தொகை ஏறக்குறைய 40,000 இருக்குமென மதிப்பிடப்படுகிறது. இலங்கையிலிருந்து தொழிலாளர் குடிபெயர்வதில் காணப்படும் போக்கு மற்றும் ஆசிய நாடுகளது தொழிலாளரின் குடிபெயர்வில் காணப்படும் போக்கிலிருந்து இலேசாக வித்தியாசப்பட்டுள்ளது. ஏனெனில், அந்நாடுகளில் பல பெண் தொழிலாளரின் ஏற்றுமதி மீது கட்டுப்பாடுகளை விதித்தன. ஆனால், அப்படிச் செய்வதில்லையென இலங்கை முடிவு செய்தது. இக்கொள்கையின் ஒரு விளைவு என்னவென்றால், குடா நாடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கையரில் மிகப் பெரிய தொழில் செய் குழுவினர் வீட்டு வேலைக்காரிகளாக இருப்பதாகும்.

1970களின் பிற்பகுதியில், வேலையிலிருந்தவர்களிலும், வேலையற்றிருந்தவர்களிலும் அதிகமதிகமான பேர் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஆபிரிக்க நாடுகளுக்கும் தொடர்ந்து குடிபெயர்ந்துள்ளனர். உயர் சம்பளங்களாலும், முன்னைவிடச் சிறந்த வாழ்க்கை நடத்தலாம் என்ற உறுதியினாலும் அவர்கள் கவரப்பட்டவர்கள் என்பது தெளிவு. ஒன்றில் விடுமுறையின் பேரிலோ அல்லது தங்களுடைய ஒப்பந்தம் முடிந்துவிட்டதனாலோ குடாப் பிரதேசத்திலிருந்து நாடு திரும்பிய இலங்கைத் தொழிலாளர் குடா நாடுகளிலுள்ள கவர்ச்சிகள் பற்றிமிகுந்த நம்பிக்கையூட்டும் கதைகளைக் கூறி வருகின்றனர். இது இன்னும் வேலையில் அமராதிருந்த இளைஞர்களில் பெருந் தொகையினரை மட்டுமன்றி தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைக் கொண்ட ஜீவாதாரமான குழுக்களையும் கவர்ந்துவிட்டது. 1970களில் முன்பு பெரும்பாலும் உயர் தொழில்களில் அமர்ந்திருந்த இலங்கையரான மூளைசாலிகள் மேற்கு நாடுகளுக்கு வெளியேறிச் செல்வதாகவே இருந்தது. அது இப்பொழுது உடல் வலிமையுள்ளவர்களின் வெளியேற்றமாக மாறிவிட்டது. குடா நாடுகளில் வேலை பெறும் நாட்டங் கொண்டவர்களாய் தேர்ச்சி பெற்ற—ஓரளவு தேர்ச்சிபெற்ற — தேர்ச்சி பெறாத தொழிலாளர்களில் ஏராளமானோர் குடிபெயர்ந்துள்ளனர்.

இப்படிக் குடிபெயரும் தொழிலாளர் வழமையாக ஆள் திரட்டும் முகவர் நிலையங்கள் மூலமாகவே வேலை வசதியைப் பெறுகின்றார்கள். இந்த நோக்கத்துக்காகவே இந்நிலையங்கள் பிரதானமாக கொழும்பில் தோன்றியுள்ளன. வெளிநாட்டு வேலைகளுக்குத் தொழிலாளரைத் திரட்டும் முகவர் நிலையங்களின் தொகை 1977ம் ஆண்டில் சுமார் 100 ஆக இருந்தது. 1979ம் ஆண்டில் இது 300ஐ மிஞ்சிவிட்டது. இத்துடன், தொழில் திணைக்களமும் தனது சொந்த வெளிநாட்டு வேலைப் பகுதியை அமைத்ததுடன் குடா நாடுகளுக்கான ஆள் திரட்டலில் சுமார் 10 சதவிகிதத்துக்குப் பொறுப்பாக இருந்துள்ளது. தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பலவற்றில் நடந்துள்ளதைப் போல, இலங்கையிலும் முகவர் நிலையங்கள் குடிபெயர்ந்த தொழிலாளர்களைச் சுரண்டியுள்ளன. இம் முகவர் நிலையங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்டம் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு கடந்த வருட பிற்பகுதியில் ஏற்பட்டது. எனினும், சிறிய பதிவு செய்யப்படாத பல முகவர் நிலையங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. இம் முகவர் நிலையங்கள் ஒருபுறமிருக்க, குடிபெயர்வோரில் ஒரு சிறு தொகையினர் வெளிநாடுகளில் வேலைக்கமர்ந்துள்ள நண்பர்கள், உறவினர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு வேலை வசதிகளைப் பெற்றுவருகிறார்கள்.

இவ்விஷயம் இதுவரை மிக ஆழமாக ஆராயப்படவில்லை. நாளது வரை நிலைமையைப் பற்றி நடந்துள்ள ஒரேயொரு பரிசீலனையும், சரி பார்ப்பும் திட்ட அமுல் அமைச்சினாலேயே நடத்தப்பட்டுள்ளன. இப்பரிசீலனையின் போது சுமார் 300 பதிவு செய்யப்பட்ட வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களில் 57 ஐப் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அதிலிருந்து, 1977ம் ஆண்டில் மத்திய கிழக்குக்கு ஏறக்குறைய 6,000 பேர் குடிபெயர்ந்தனர் என்றும், இத்தொகை 1978ம் ஆண்டில் 8,000 ஆகவும் 1979ம் ஆண்டில் 9,000 ஆகவும் உயர்ந்ததென்றும் தெரிய வந்துள்ளது. அறிக்கை செய்யாத முகவர் நிலையங்களும் தங்களுடைய நிலையை வெளியிட்டிருந்தால், இத்தொகை மிக அதிகமாயிருக்கலாமென்பதை இங்கு எடுத்துக் காட்டல் வேண்டும். 1979ம் ஆண்டில் இந்த 57 முகவர் நிலையங்களும் தொழில் திணைக்களமும் 9,422 பேரை வெளிநாடுகளுக்கு அனுப்பின.

நியாயமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தும் மாதிரிப் புள்ளி விவரங்கள் எனக் கருதத்தக்க இத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது, மொத்தத் தொகையில் சுமார் 65 சதவிகிதம் தேர்ச்சி

அட்டவணை 6

மத்திய கிழக்கு .நாடுளில்

வேலைகளைப் பெற்ற இலங்கையர் — 1979

| ஆட்பல (வகை) மட்டங்கள் | தொழில் திணைக்களம் மூலம் | வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மூலம் | மொத்தம் | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| உயர் மட்ட ஆள் பலம் | 03 | 159 | 162 | 2.0 |
| நடுத்தர மட்ட ஆள் பலம் | 124 | 585 | 709 | 8 0 |
| தேர்ச்சிபெற்ற மட்ட ஆள்பலம் | 346 | 2 103 | 2 449 | 26.0 |
| தேர்ச்சிபெறாத மட்ட ஆள்பலம் | 336 | 5,767 | 2 103 | 64.0 |
| மொத்தம் | 809 | 8,614 | 5,423 | 100.0 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை 7

### மத்திய கிழக்கு நாடுகளில் வேலைகளைப்பெற்ற இலங்கையர் 1978—1979
### (தேர்ச்சிபெற்ற ஆள்பலம்)

| தொழில் | தொழில் திணைக்களத்தின் மூலம் 1978 | 1979 | தனிப்பட்ட முகவர் நிலையங்கள்மூலம் 1978 | 1979 | மொத்தம் 1978 | 1979 |
|---|---|---|---|---|---|---|
| மின்னியலாளர் | 36 | 36 | 154 | 152 | 190 | 188 |
| மரத்தச்சர்கள் | 502 | 92 | 253 | 261 | 755 | 353 |
| கொத்தனார் | 459 | 38 | 188 | 109 | 647 | 147 |
| மெக்கானிக்குகள் | 24 | 35 | 278 | 276 | 302 | 311 |
| சாரதிகள் | 270 | 36 | 374 | 388 | 647 | 424 |
| சமையல்காரர் | 10 | 03 | 191 | 209 | 201 | 212 |
| உருக்கி ஒட்டுநர் | 19 | 04 | 49 | 78 | 68 | 82 |
| கொல்லர் | 01 | — | 01 | 02 | 02 | 02 |
| பொருத்துநர் | 02 | 14 | 77 | 74 | 79 | 88 |
| உருக்கு நிலைப்படுத்துநர் | 00 | 12 | 24 | 62 | 94 | 62 |
| குழாய்க் கம்மாளர் | 22 | — | 56 | 67 | 78 | 79 |
| பார் அலுவலர் | 85 | 38 | 63 | 01 | 148 | 01 |
| வர்ணப் பூச்சுத்தொழிலர் | 39 | — | 57 | 70 | 76 | 108 |
| இயந்திரவியலாளர் | — | | 08 | 17 | 08 | 214 |
| இயந்திர இயக்குநர் | 05 | 27 | 70 | 187 | 75 | 17 |

பெருந ஆள்பல வகையைச் சேர்ந்ததென நாம் காண்கிறோம். (முழுத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு வீட்டு வேலைக்காரிகள்.) சுமார் 25 சத விகிதம் தேர்ச்சிபெற்ற ஆள்பல வகையைச் சேர்ந்தது; நில அளவையாளர், கட்டடப் படவரைஞர், மருந்து வழங்குநர், தொழில் நுணுக்கர், மேற்பார்வையாளர், இலிகிதர்கள், தட்டெழுத்தாளர் ஆகியோரைக் கொண்ட நடுத்தர மட்ட ஆள்பலம் மொத்தத்தில் 8 சத விகிதமாக மட்டுமே உள்ளது. டாக்டர்கள், எஞ்சினியர்கள், முகாமையாளர் போன்ற உயர் தொழில்களில் அமர்ந்துள்ளோர் அடங்கியுள்ள உயர்மட்ட ஆள்பலம் மொத்தத்தில் 2 சதவிகிதமாக மட்டுமே உள்ளது. எனினும், மொத்தம் 162 பேரைக் கொண்ட இச் சதவிகிதம் கூட பொருள் பொதிந்ததாகும். ஏனென்றால், அவர்களில் 58 எஞ்சினியர்களும், 40 கணக்கறிஞர்களும், 7 டாக்டர்களும், 44 சிரேஷ்ட முகாமையாளர்களும், 13 உயர் தொழில் நுட்ப வியலாளர்களும் உள்ளனர். குறிப்பாக, நாட்டில் பிரமாண்டமான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் கைக்கொள்ளப்பட்டிருக்கும் இவ்வேளையில், உயர் தொழில் தேர்ச்சியாளர்களுக்குத் தட்டுப்பாடு இருந்துவரும் நிலைமையில், ஓராண்டில் ஒரு நாடு உயர் தொழில்களில் தேர்ச்சிபெற்ற இத்தனைபேரை இழப்பதென்பது பெரிய நஷ்டம்தான். உயர் தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்களில் குடிபெயர்ந்த பதிவு செய்யப்படாத தொகையினரையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், உண்மையில் வெளியேறியோரின் தொகை இதைவிட மிக அதிகமாயிருக்கலாம்.

குடிபெயர்வு அர்த்தபுஷ்டியுள்ளதெனக் கருதத்தக்க மற்ற ஆள்பல வகை யாதெனில், தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுடையதாகும். 1978ம் ஆண்டில் வெளியேறிய தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களின் தொகை 1979ம் ஆண்டில் வெளியேறியோரின் தொகையை விட மிக அதிகமாகும்; ஏனென்றால், 1979ம் ஆண்டில் தொழில் திணைக்களத்தினால் சிறு தொகையான சேர்ச்சிபெற்ற தொழிலாளர்களையே திரட்ட முடிந்தது. இதன் விளைவாக, 1978 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வசதிகளைப் பெற்றவர்கள் எல்லோரிலும் சுமார் 45 சதவிகிதத்தினர் தேர்ச்சி பெற்ற ஆள்பல வகையைச் சேர்ந்ததாயிருந்தபோது, 1979ம் ஆண்டில் திரட்டப்பட்ட ஆட்கள் எல்லோரிலும் சுமார் 25 சதவிகிதத்தினர் மட்டுமே இவ்வகையைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். தொழில் திணைக்களம் 1978ம் ஆண்டில் 1,680 தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களுக்கு வேலை வசதிகளைத் தேடிக் கொடுத்தது. ஆனால், 1979ம் ஆண்டில் இத்தொகை 346 ஆக வீழ்ச்சியடைந்தது. இதற்கிடையில், தனிப்பட்ட ஆள் திரட்டல் முகவர் நிலையங்கள் வெளிநாட்டு வேலைகளைப் பெற்றுக் கொடுத்த தேர்ச்சி பெற்ற தொழிலாளரின் எண்ணிக்கையை அதிகரித்தன. அஃதாவது, 1978ம் ஆண்டில் 1,976 ஆக இருந்த இத்தொகை 1979ம் ஆண்டில் 2,071 ஆக உயர்ந்துவிட்டது. இவ்விரு வருடங்களிலும் வெளிநாட்டு வேலைகளைப் பெற்ற தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களில் மிகப் பெரிய தொகையினர் சாரதிகளாவர்; அவர்களையடுத்து மரத்தச்சர்களும், கொத்தனார்களும், மெக்கானிக்குகளும் இடம்பெறுகின்றனர். இயந்திர இயக்குநர்கள், மின்னியலாளர், வர்ணப்பூச்சுத் தொழிலர் ஆகியோரும் குடிபெயர்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களில் குறிப்பிடத்தக்க விகிதத்தினராக அமைந்திருந்தனர்.

இந்தக் குடிபெயர்வினால் ஏற்பட்ட ஒரு விளைவினால், அநேக இடைத்தர, குறைந்த மட்ட தேர்ச்சி பெற்ற தொழிலாளர் தட்டுப்பாடாயிருக்கின்றனர். தேர்ச்சி பெற்ற ஆள்பலமில்லாத இக்குறையினால் முக்கியமான அரசாங்க சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, சாரதிகளும், மெக்கானிக்குகளும் அருமையாயிருப்பதால் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படைந்துள்ளன. மின்னியலாளரும், தொழில் நுணுக்கர்களும் அவர்களைப் போன்ற தேர்ச்சி பெற்ற ஆளணியினரும் வெளியேறிவிட்டதால் தந்திப் போக்குவரத்துச் சேவை, மின்சாரசேவை, மற்றும் பொதுப் பயன்படு சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தேர்ச்சி பெற்றோருக்கான தேவை நாட்டுக்குள்ளே வளர்ந்து வருகிறது. மகாவலித் திட்டத்துக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதிய போக்குகள்

## நிஹால் பெரேரா

வேம்பராயின் பிரச்சினைகளை (இப்பிரச்சினைகள் அக்கிராமத்துக்கு மட்டுமே உரித்தானவையென்று எவ்விதத்தும் கூறமுடியாது) ஏ. பி. கே. வாலிபர்களும், அக்கிராமத்தில் வாழும் 'பள்ளர்'களின் இயற்கையான தலைவரும், வெறும் மேலுடனிருப்பவருமான 36 வயதுடைய மகாலிங்கமும் கூறிய விளக்கங்களிலிருந்து என்னால் துண்டு துண்டாக சேகரிக்க முடிந்தது. அப்பிரச்சினைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அவற்றின் வேர்கள் குடாநாடெங்கும் காணிப் பெறுமதிகளிலே அண்மையில் ஏற்பட்ட அசாதாரண அதிகரிப்புகளுக்கு நீளுகின்றன. வெளிநாடுகளிலிருந்து திரும்புவோர் தங்களுடைய சொந்த ஊர்ப் பகுதிகளிலுள்ள காணிகளில் முதலீடு செய்ய விரும்புவதால் இந்நிலைமை மோசமடைகின்றது. (மத்திய கிழக்குக்குச் சென்ற உயர் தொழிலாளர்கள், குடிபெயர்ந்த மற்றும் தொழிலாளர்களுக்குப் புறம்பாக, சுமார் 5,000 வாலிபர்கள் மேற்கு ஜெர்மனிக்கு வேலை தேடி இதுவரை போயிருக்கிறார்களென்று எனக்குச் சொல்லப்பட்டது!) இந்நிகழ்வுப் போக்கு, குடாநாட்டில் எஞ்சியுள்ள நிலமானியக் கட்டுக்கோப்பின் மூலவேர்களையே தாக்கி வருவது இயற்கையாகும். செழுமையற்ற நிலப்பகுதிகளில் குடியிருக்கும் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த மக்களிடமிருந்து இலவச சேவைகளைப் பிழிந்தெடுப்பதுடன் திருப்தியடைந்து வந்த 'நிலச்சுவான்தார்கள்' இப்பொழுது உரிமைப் பத்திரங்களுடன் வட்டமிட்டுக் கொண்டு, பல தசாப்தங்களாகத் தாங்கள் ஏறிட்டும் பார்க்காத காணிகளுக்கு உரிமை கோருவதில் முனைந்திருக்கிறார்கள். அண்மையில் சாவகச்சேரியில் நடைபெற்ற காணிகளிலிருந்து வெளியேற்றல், வீடுகளைத் கொளுத்துதல் போன்ற சம்பவங்கள் இதன் தவிர்க்க முடியாத விளைவுகளாகும்.

வேம்பராயிலுள்ள காணிகளுக்குச் சட்ட ரீதியான உரிமை கோருவோர் ஒரு மழவரையர் (முதலியார்) குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கல்வியின் போஷகர்கள் என்ற முறையில் இவர்களுடைய புகழ் அப் பகுதிக்கப்பாலும் பரவியுள்ளது. தற்போது இக்காணிகளில் குடியிருந்து வருவோர் — கிராம வாசிகள்— இக்குடும்பத்தினால் ஒரு நூற்றாண்டுச் சொச்ச காலத்துக்கு முன்னர் இக்காணிகளில் குடியேற்றப்பட்டவர்களின் வழித்தோன்றல்களாவர். காணிகளுக்கும் இவர்களுக்கும் உள்ள சம்பந்தம் பிரதானமாக நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்கிராமவாசிகள் குடியேற்ற உரிமைக்குப் பிரதியுபகாரமாகப் பல்வேறு உடலுழைப்புச் சேவைகளை (திருமண வைபவங்களிலும் ஈமச் சடங்குகளிலும் இலவச உழைப்பு, நிலச் சொந்தக்காரரின் ஆதனங்கள் முதலியவற்றில் கட்டாய உழைப்பு) நல்கிவந்தனர். அத்துடன், அவர்கள் கொத்தடிமைகளைப் போல் ஒப்பந்தத்தால் பிணிக்கப்பட்ட குடியேற்ற வாசிகளாவர்; கிராமத்தை விட்டு வெளிச் செல்ல அவர்களுக்குச் சுதந்திரம் இருக்கவில்லை. வேம்பராய் மக்கள் ஒருபோதும் எவ்விதத்தும் பயிர் செய்யும் விவசாயிகளாக இருந்திராத போதிலும் (அவர்கள் மீன் விற்பதன் மூலமும் கள்ளிறக்குவதன் மூலமும் தங்களுடைய ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்கிறார்கள்), பாறைகள் சிதறலாக உள்ள வளமற்ற காணிகளை பல்லாண்டு காலமாக அபிவிருத்தி செய்திருக்கிறார்கள். உண்மையில், கிராமவாசிகள் இப்பொழுது குடியிருக்கும் நிலப் பகுதி சாகுபடி செய்வதற்கு மிகச் சிறந்த நிலையிலுள்ளது. வாலிபர்கள் கூறுகிறபடி, இக்காணி லாச்சம் அல்லது பரப்பு ஒன்றுக்கு (ஏக்கரில் ஏறக்குறைய 16இல் 1 பங்கு) 10,000/- ரூபா வரை இன்று விலையைப் பெறமுடியும். இதனுடன் ஒப்பிடுகையில், குடியிருக்காததனால் அபிவிருத்தியுறாதிருக்கும் காணிப் பகுதியைப் பொறுத்தவரை, விலை 3,000/- ரூபாவுக்கு மேல் போகாது (கிராமத்தில் அமைந்துள்ள 400 சொச்ச லாச்சம் காணியில் 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியிருக்கின்றன.) நிலச் சொந்தக்காரர்கள், காணியின்— குறிப்பாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணிப் பகுதியின் குடியில்லாத சுவாதீனத்தைப் பெற இப்பொழுது பொல்லாத முறையில் அவசரப்படுகிறார்கள்— அன்று காலையே காணிகளுக்கருகில் அவற்றை வாங்கக் கூடிய பலர் சுற்றியலைந்து கொண்டிருப்பதை நான் காண முடிந்தது.

சட்ட ரீதியான வழிகள் ஒருபுறமிருக்க, கிராமவாசிகளை வெளியே பிடித்துத் தள்ளிவிட, காணிக்காரர்கள் இப்பொழுது பல்வேறு தந்திரங்களைக் கையாண்டு வருகிறார்கள். முதலாவதாக, இவையெல்லாம் அதிகாரமின்றி மரம் முதலானவை வெட்டி நீக்கித் துப்புரவு செய்யப்பட்ட நிலப் பகுதிகள் என்ற போலிச் சாக்கின்பேரில் குடியேற்றப் பகுதிக்குச் செல்லும் சகல பாதைகளையும் அடைப்பதற்கு ஒரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, (இவை தங்களுடைய முன்னோர்கள் நட்டவையெனக் கிராமவாசிகள் பெருமையுடன் சுட்டிக் காட்டும்) பனை மரங்களிலிருந்து ஓலைகளை வெட்டியதற்காக அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. கிராமவாசிகள் கட்டிக் கொண்டிருந்த ஒரு கோவிலிலும், நூல் நிலையத்திலும் பலாத்காரமாக வேலை நிறுத்தப்பட்டுள்ளது. நிரந்தரக் கட்டுமானங்களை அமைப்பதன் மீது ஒரு தடையுத்தரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சிமெந்து தளத்துடன் வீடொன்றைக் கட்டியதற்காக ஒரு கிராமவாசி இப்பொழுது விசாரணையை எதிர்நோக்குகிறார். ஆறு குழந்தைகளின் தகப்பனும் ஒரு காலை மட்டும் உடையவருமாகிய 60 வயதான கதிரன் என்பவர் "அதிகாரமில்லாமல்" ஒரு வேலியை அமைத்துவிட்ட காரணத்திற்காக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட தமது வீட்டிலிருந்து பொருள்களை மீட்டுக் கொண்டிருக்கும் பரிதாபக் காட்சியை நேரில் காண்பதற்காக நான் அழைத்துச் செல்லப்பட்டேன். கிராம வாசிகளைத் துன்புறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கடைசி உபாயம் என்னவென்றால், அவர்களுக்கு உணவு முத்திரைகளை வழங்காதிருப்பதாகும்— இவ் விவகாரத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் உண்மையில் நடுநிலை வகிக்கவில்லையென்பதற்கு இது ஒரு நிச்சயமான அடையாளமாகும்.

"லங்கா கார்டியன்" (1980 ஜூலை)

தேவையான ஆள்பலத்தைப் பற்றிய ஒரு மதிப்பீட்டின்படி, 1979ம் ஆண்டில் தேவைப்படக் கூடிய தேர்ச்சிபெற்ற தொழிலாளரின் தொகை ஏறக்குறைய 9,000; 1981ஆம் ஆண்டுக்கு 13,000 பேர் தேவைப்படுவர்; இம்மூன்று வருடங்களிலும் மேலதிகமாக 4,000 பேர் தேவைப்படுவர். எனினும், நடந்துள்ளதென்னவென்றால், கடந்த மூன்று வருடங்களிலும் வருடந்தோறும் ஏறக்குறைய 4,000 தேர்ச்சிபெற்ற தொழிலாளர் குடிபெயர்ந்துள்ளனர். 1978ம் ஆண்டில் திட்ட அமுல் அமைச்சு சகல பெரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் கவனத்திற் கொண்டு, ஒரு மதிப்பீட்டைத் தயாரித்தது. இலங்கைக்கு 1979ம் ஆண்டில் 6,775 கொத்தனார்களும், 1980ம் ஆண்டில் 5,675 கொத்தனார்களும் தேவைப்படுவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரத் தச்சர்களைப் பொறுத்தவரை 1979ம் ஆண்டில் 5,150 பேரும், 1980ம் ஆண்டில் 3,800 பேரும் தேவை; மெக்கானிக்குகளைப் பொறுத்த வரை, 1979ம் ஆண்டில் 2,750 பேரும், 1980ம் ஆண்டில் 2,825 பேரும் தேவை; மின்னியலாளரைப் பொறுத்த வரை, 1979ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் 320 பேரும், 1980ம் ஆண்டில் 370 பேரும் தேவை.

இப்போது நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்ட நிலைமை, வெளிநாட்டுச் செலாவணி அனுப்பீடுகளால் ஏற்படக் கூடிய நன்மைகள் ஆகிய இரு காரணங்களை முன்னிட்டு, தேர்ச்சி பெற்ற தொழிலாளரும், தேர்ச்சிபெருத தொழிலாளரும் மெதுவாக வெளியேறுவது பிரயோஜனமுள்ளதாயிருக்கும் எனினும், வெளிநாட்டு வேலைகளைப் பெற்று நடுத்தர மட்ட ஆள்பலமும், தேர்ச்சிபெற்ற ஆள்பலமும் பெருந்தொகையாக வெளியேறினல் திட்டமிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்படும் என்று திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த ஆள்பல திட்டமிடல் பகுதியின் பணிப்பாளர் 1978ம் ஆண்டில் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில் எச்சரித்தார். குறிப்பாக, எந்திரவியல் தொழில்களில் ஆள்பலத் தேவைகள் அவ்வருடம் பெருமளவுக்கு அதிகரித்துள்ளனவென்றும், துரிதப்படுத்திய மகாவலி வேலைத் திட்டம், உள்ளூராட்சி, வீடமைப்பு—கட்டட நிர்மாண வேலைத் திட்டங்கள், பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கும், இயந்திர சாதனங்கள், மூலப் பொருள்கள் ஆகிய இரண்டிலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதனல் எழக்கூடிய தனியார் துறையின் கோரிக்கைகளைச் சமாளிக்கவும் 1979ம் ஆண்டிலும் அதற்குப் பிறகும் பெருந்தொகையானேர் தேவைப்படுவாரென்றும் அவர் வற்புறுத்தினர். இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெரும்பாலும் தேவைப்பட்ட ஆள்பல வகையினர், கட்டட நிர்மாணத் தொழில் நுணுக்கர்கள், முகாரிகள் (போர்மன்மார்), கட்டட நிர்மாண அத்தியட்சகர்கள் (சூப்ரண்டுகள்), நில அளவையாளர், கட்டடப் படவரைஞர்கள் போன்ற நடுத்தர மட்டத்தில் பயிற்றப்பட்ட ஆளணியினராகவும், சுண்ணச்சாந்து வேலைகள் (கொத்து வேலைகள்), மரத்தச்சு வேலை, உருக்கி ஒட்டும் வேலை, கொல்லர் தொழில், ஆகிய கைப்பணி மட்டத்தில் பயிற்றப்பட்ட ஆளணியினராகவும், மெக்கானிக்குகள், மின்னியலாளர், இயந்திர இயக்குநர்கள், வாகன சாரதிகள் ஆகியோராகவும் இருப்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆதலால், இத்தொழில்களில் ஆட்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமெனும் உடனடிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகப் பயிற்சித் திறனளவை அதிகரிப்பதும், அபிவிருத்தித் திட்டங்களில் வேலை ஆரம்பிக்கப்படும் போது ஆள் திரட்டல் நிலைமை கடுமையாயிருந்தால் இந்த வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதும் அவசியமாயிருந்தது.

எனினும், நடுத்தர மட்ட ஆள்பலமும், தேர்ச்சிபெற்ற ஆள் பலமும் வெளியேற அனுமதிப்பதனல் நாட்டுக்கு நன்மைகள் ஏற்படக் கூடிய சாத்தியமும் இருந்தது. இந்த நன்மைகள் பின்வருமாறு நிரல்படுத்தப்பட்டுள்ளன:

(1) உபரியாயுள்ள ஆள்பலம் அகல்வதனல் வேலையில்லாத் திண்டாட்ட நிலைமையில் ஏற்படக் கூடிய நன்மையான தாக்கம்;

(2) குடிபெயர்வோர் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் அந்நியச் செலாவணித் தொகைகள்;

(3) நீண்ட காலங்களுக்குக் குடிபெயரும் உயர்மட்ட ஆள்பலத்தைப் போலன்றி இவர்களில் கணிசமான தொகையினர் நாட்டுக்குத் திரும்புவதனல் வெளிநாடுகளில் பெரிய கட்டட நிர்மாணத் திட்டங்களிலும், எந்திரவியல் முயற்சிகளிலும் வேலை செய்வதனல் பெறப்படும் அனுபவம் பெரும் பயனுள்ளதாயிருக்கும்;

(4) குடிபெயர்வோரால் இங்கு அனுப்பப்படும் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் ஓரளவுக்கு உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும். அதனல் இறக்குமதிகளுக்குத் தேவைப்படும் அந்நியச் செலாவணித் தொகைகள் குறையும்;

(5) குடிபெயர்வோர் வெளி நாடுகளில் தங்கியிருக்கும் போது இங்கு அனுப்பும் பணத்தினல் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களுக்கு வருமான ஆதரவு கிடைக்கின்றன.

## அந்நியச் செலாவணியின் மூலம்

1970களின் பிற் பகுதியிலிருந்து இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைத்து வரும் பிரதான மூலங்களில் ஒன்று, மத்திய கிழக்கு நாடுகளில் வேலைக்கமர்ந்துள்ள அதன் குடிமக்கள் அனுப்பி வைக்கும் பணமாகவே இருந்து வந்துள்ளது. குடாநாடுகளில் வேலைக்கமர்ந்துள்ள இலங்கையர் ஒன்றில் தங்களுடைய சொந்த வங்கிக் கணக்குகளுக்கோ அல்லது நாட்டிலுள்ள தங்கள் உறவினர்கள், நண்பர்களின் வங்கிக் கணக்குகளுக்கோ கிரமமாகப் பணம் அனுப்பி வருகின்றனர். (இந்தப் பண அனுப்பீடுகளின் பெறுமதியையும், மூலங்களையும் சரியாக மதிப்பிடுவது கடினமாகும். ஏனென்ருல், இப்பண அனுப்பீடுகள் ஐரோப்பிய வங்கிகள் வாயிலாக இலங்கைக்கு நெறிப்படுத்தப் படுகின்றன. இப்பண அனுப்பீடுகள் எங்கிருந்து வருகின்றன என்பதைப் பற்றி வர்த்தக வங்கிகளில் கிடைக்கக் கூடியதாயுள்ள ஒரே தகவல் இதுதான்). அண்ணளவான மதிப்பீடுகளின்படி, மத்திய

அட்டவணை 8

### தேர்ச்சிபெற்ற ஆள்பலத் தேவை

| வகை | தேவை 1979 | தேவை 1980 |
|---|---|---|
| 1. கொத்தனர் | 6775 | 5675 |
| 2. மரத்தச்சர் | 5150 | 3800 |
| 3. உருக்கி ஒட்டுநர் | 520 | 505 |
| 4. மெக்கானிக்குகள் | 2750 | 2825 |
| 5. பொருத்துநர் | 285 | 290 |
| 6. மின்னியலாளர் | 320 | 370 |
| 7. இயந்திரவியலாளர் | 475 | 525 |
| 8. குழாய்க் கம்மாளர் | 165 | 140 |
| 9. தகர வேலைக்காரர் | 180 | 175 |
| 10. கொல்லர் | 310 | .310 |
| 11. மின்கம்பி போடுவோர் | 325 | 350 |
| 12. கனரக இயந்திர இயக்குநர் | 355 | 360 |
| 12. வர்ணப் பூச்சுத் தொழிலர் | 280 | 295 |

மூலம்: திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த ஆள்பலத் திட்டமிடல் பகுதியினல் தயாரிக்கப்பட்ட ஒரு பரீட்சார்த்தமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.

கிழக்கில் வேலைக்கமர்ந்துள்ள இலங்கையர்களால் அவ்வாறு அனுப்பப்பட்ட பணத் தொகைகளின் மதிப்பு 1975ம் ஆண்டில் ஏறக்குறைய 4.5 கோடி ரூபா; 1976ல் 8 கோடி ரூபா; 1977ல் ஏறக்குறைய 17.5 கோடி ரூபா.

1976ம் ஆண்டில் இலங்கையிலிருந்து மத்திய கிழக்குக்குக் குடிபெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,000—3,000 என மதிப்பிடப்பட்டது. இது 1977ம் ஆண்டில் கிட்டத்தட்ட 6,000க்கு உயர்ந்தது. இவ்விதம் பெருந்தொகையான தொழிலாளர்கள் வெளியேறுவது 1978ம் ஆண்டிலும் நீடித்தது. அவ்வருடம் இத்தொகை சுமார் 10,000ஐ எட்டியது. (தொழில் திணைக்களத்தினாலும், 27 தனியார் வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களாலும் திரட்டப்பட்டவாறு உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட தொகை 8,082). 1978ம் ஆண்டு முடிவுக்குள் மத்திய கிழக்கு நாடுகளில் கிட்டத்தட்ட 20,000 இலங்கையர் இருந்தனர். அவர்களுடைய பண அனுப்பீடுகள் 1977ம் ஆண்டிலிருந்த தொகையான ஏறக்குறைய 17.5 கோடி ரூபாவிலிருந்து 1978ம் ஆண்டில் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாவுக்கு அதிகரித்துவிட்டது. மத்திய கிழக்கிலுள்ள இலங்கையருக்கு அரசாங்க வங்கிகளும் அதிக வசதிகளை விஸ்தரித்தன. பண அனுப்பீடுகளின் விகிதத்தை அதிகரிப்பதில் உதவிய ஒரு காரணி இதுதான்.

1979ம் ஆண்டிலேதான் வெளிநாட்டு வேலைகளுக்காக மிகப் பெருந்தொகையான ஆட்கள் திரட்டப்பட்டனர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வமாக 9,423 பேர் 57 தனியார் முகவர் நிலையங்களாலும், தொழில் திணைக்களத்தினாலும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். எனினும், குறைந்தபட்சம் இன்னும் 2,000 பேர் வெளிநாட்டு வேலைகளுக்காக மற்ற வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களாலும், நேரடித் தொடர்பு மூலமாகவும் திரட்டப்பட்டிருக்கலாம். பண அனுப்பீடுகள் முறையே கடந்த இரு வருடங்களில் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளன. (1977ம் ஆண்டுக்குப் பின் ரூபா மதிப்புக் குறைப்பையடுத்து சீராக்கப்பட்ட ரூபா விகிதத்தைக் கவனத்துக்கு எடுத்துக் கொண்டாலுங் கூட) இது அந்நியச் செலாவணி சம்பாத்தியத்துக்கு ஒரு கணிசமான மூலமாகியுள்ளது. 1979ம் ஆண்டில் இலங்கைக்கு மாற்றப்பட்ட தனியார் கொடுப்பனவுகளின் மொத்தத் தொகையான 93.5 கோடி ரூபாவில் 75—80 கோடி ரூபா என மதிப்பிடப்படும் ஒரு தொகையை மத்தியகிழக்கிலிருந்து அனுப்பப்பட்ட சம்பாத்தியம் எனக் கருதலாம். 1980ம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் மட்டும் தனியார் மாற்றும் கொடுப்பனவுகளின் தொகை 100 கோடி ரூபாவை மிஞ்சிவிட்டது. கடந்த வருடத்தின் முதற் பாதியைச் சேர்ந்த இந்தப் பண அனுப்பீடுகள் 1979ம் வருடம் முழுவதிலும் அனுப்பப்பட்ட முன்னெப்போதும் காணாச் சம்பாத்தியமான 75—80 கோடி ரூபாவை மிஞ்சியிருக்கலாம். 1980 ஆம் ஆண்டு முழுவதற்குமான தரவுகள் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், மத்தியகிழக்கு பண அனுப்பீடுகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட அந்நியச் செலாவணித் தொகை கடந்த வருடத்தின் போது 100 கோடி ரூபாவை நிச்சயமாக மிஞ்சுமென மதிப்பிடப்படுகிறது.

## சமூக—பொருளாதாரப் பிரச்சினைகள்

மறு பக்கத்தில், தொழிலாளரை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குள் இந்தப் பண அனுப்பீடுகள் பாய்வதுடனும், குடிபெயர்ந்த இத்தொழிலாளர்கள் தாய்நாட்டுக்குத் திரும்புவதோடும் அதிகமான சமூக—பொருளாதாரப் பிரச்சினைகள் சிருஷ்டிக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்த வரை, அம்பலாங்கொடைப் பகுதியில் எஸ். எல். திலகசிறியும் அசோகா டீ சில்வாவும் நடத்திய ஒரு சுருக்கமான பரிசீலனையிலிருந்து இந்தக் குறிப்பிட்ட கிராமத்தில் செல்வச் செறிவு ஏற்பட்டுள்ளதற்குரிய திட்டமான அறிகுறிகள் காணப்பட்ட போதிலும், பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் எழுந்துள்ளன. மேலும், வெளிநாட்டு வேலைகளுக்காகப் பெருந்தொகையான இளைஞர்கள் குடிபெயர்ந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில், பாரம்பரிய வழக்கங்களால் பலமாகப் பிணிக்கப்பட்டுள்ள இப்பகுதிக் கிராமங்கள் சிலவற்றின் சமூக—பொருளாதாரக் கட்டுக்கோப்பில் தெளிவான எதிரொலிகள் கேட்கின்றனவென்று நிஹால் பெரேராவின் அவதானிப்புகளிலிருந்து தெரிகின்றது. (பெட்டிச் செய்தியைப் பார்க்கவும்.)

எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்து நாட்டுக்குள்ளே நுகர்வு முறையில் மாற்றங்கள் தோன்றத் தொடங்கியுள்ளனவென்பது வெளிப்படை. ஆனால், இந்த நிகழ்வுப் போக்கை மத்திய கிழக்குக் குடிபெயர்வு எவ்வளவு தூரம் உருவாக்கியதென்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், மத்திய கிழக்கில் வேலைகளைப் பெற்றவர்களின் பெரும்பாலான குடும்பங்களில் நுகர்வு முறைகள் மாறியுள்ளன என்பது தெளிவாகும். இலங்கையர்களின் வெளிநாட்டுச் செலாவணி சம்பாத்தியங்களை அபிவிருத்தி முயற்சிக்குப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வேலைக்கமர்ந்துள்ள இலங்கையர்களால் பல்வேறு விதமான நுகர்ப்பொருள்கள் ஏராளமான அளவில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவென்பது யாவருமறிந்த விஷயம். அவர்கள் தங்களுடைய தேட்டங்களில் ஒரு பகுதியை உடுதுணிகள், வானொலிப் பெட்டிகள், மின்சார உபகரணங்கள், போன்ற பொருள்களாகவும், மோட்டார் வாகனங்கள் போன்ற பொருள்களாகவும் தங்களுடைய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அனுப்புகிறார்கள். இவ்விதமாகக் குறைந்த வருமானமுள்ள வீடுகளில் கூட வானொலிப் பெட்டிகளையும் விலையுயர்ந்த உடுதுணிகளையும் தைத்த ஆடைகளையும் காணலாம். மத்திய கிழக்குக்கு இலங்கையர்கள் வெளியேறியதால் இந்நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாவென்ற பிரச்சினை இதில் சம்பந்தப்பட்ட அநேக மக்களினதும், ஸ்தாபனங்களினதும் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்து வருமென்பது திண்ணம்.

## பெண்களின் குடிப்பெயர்வு

57 தனியார் முகவர் நிலையங்களினதும், தொழில் திணைக்களத்தினதும் (வெளிநாட்டு வேலை வசதிப் பகுதி) ஆள்திரட்டல் புள்ளி விவரங்களைப் பதிவு செய்த திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுல் அமைச்சு, மத்திய கிழக்கில் வேலைபெற்றவர்களில் பெரும்பாலோர் தேர்ச்சி பெருத ஆள்பல வகையைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டது. மத்திய கிழக்கில் வேலைக்கமர்த்துவதற்காகத் திரட்டப்பட்டவர்களின் 1979ம் ஆண்டுக்கான மொத்தப் பதிவு செய்யப்பட்ட தொகை 9,423 இவர்களில் 6,103 பேர் அல்லது 34 சதவிகிதத்தினர் தேர்ச்சி பெருத ஆள்பல வகையைச் சேர்ந்தவர்கள். 1978ம் ஆண்டில் கூட திட்ட அமுல் அமைச்சு 27 தனியார் முகவர் நிலையங்களாலும், தொழில் திணைக்களத்தினாலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆள் திரட்டல் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தது. அவ்வாண்டில் குடிபெயர்ந்ததாக அறிவிக்கப்பட்ட தேர்ச்சி பெருத ஆட்களின் தொகை 3,382 ஆக இருந்தது. பெருந்தொகையான தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் காணப்படும் நிகழ்வுப் போக்குகளுக்கு மாருக, 1979ம் ஆண்டில் தேர்ச்சி பெருத ஆட்பல வெளியேற்றத்தில் மிகத் தெளிவாகக் காணக்கூடிய ஓர் அதிகரிப்பு இருந்தது; 1979ம் ஆண்டில் காணப்படும் அதிகமான தொகையின் ஒரு பகுதிக்கு, ஒரு வேளை பதிவு செய்வதில் ஒரு விரிவான உள்ளடக்கம் காரணமாக இருந்திருக்கலாம். ஆனல், விகிதாசார ரீதியாக, 1978ம் ஆண்டில் நடைபெற்ற குடிபெயர்வுகளில் 45 சதவிகிதத்துக்குப் பொறுப்பான தேர்ச்சி பெருத ஆள்பலம் சம்பந்தமாக ஒரு தெளிவான மாற்றம் காணப்படுகிறது. இதே வேளை, 1979ம் ஆண்டில் நடைபெற்ற மொத்தக் குடிபெயர்வுகளில் சுமார் 65 சதவிகிதத்துக்குத் தேர்ச்சி பெருத தொழிலாளர் பொறுப்பாயிருந்தனர்.

தேர்ச்சி பெருத தொழிலாளர் வகையில் அடங்கியுள்ள ஒரு குறிப்பிடத்தக்க பகுதியினர் பெண்களாவர். இவர்கள் வீட்டு வேலைக்காரிகளாக வேலைகளைப் பெற்றனர். இந்த முகவர் நிலையங்கள் மூலமாக மட்டும் திரட்டப்பட்ட வீட்டுப் பணிப் பெண்களின் தொகை 1979ம் ஆண்டில் 3,236. இத்தொகை அவ்வருடத்துக்காக இந்த முகவர் நிலையங்கள் மூலம் திரட்டப்பட்ட மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கும், தேர்ச்சி பெருத சகல தொழிலாளர்களிலும் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டதுமாகும். தேர்ச்சி பெருத பெண் தொழிலாளர்களின் தொகை இந்தப் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையைவிட மிக அதிகமாயிருக்குமென்று கருதலாம். ஏனென்ருல், (தங்களுடைய ஆள் திரட்டல் தரவுகளைச் சமர்ப்பித்திராத) சிறிய வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் பிரதானமாகப் பெண்களையே திரட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனல், இலங்கையிலிருந்து வீட்டுப் பணிப்பெண்கள் வேண்டுமென்ற கோரிக்கை துலக்கமாக அதிகரித்து வந்துள்ளதென்பது உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கையிலிருந்து கூட வெளிப்படையாகத் தெரிகிறது. ஏனென்ருல், 1978ம் ஆண்டுக்குரிய உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட தொகை 1,384 ஆகவும் 1979ம் ஆண்டில் இதில் ஏறக்குறைய 133 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டு, 3,230 ஆகவும் இருந்தது.

1979ம் ஆண்டில் மிகப் பெருந்தொகையான இலங்கைப் பெண்கள் அஃதாவது 1,469 பேர் அல்லது 45 சதவிகிதத்தினர் குவைத்துக்குக் குடிபெயர்ந்தனர். அவ்வருடத்தின் போது, 1,021 பெண்கள் ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்களுக்கும் 440 பெண்கள் பஹ்ரெயினுக்கும் குடிபெயர்ந்துள்ளனர்.

## வெளிநாட்டு வேலைகளுக்குப் பெண்களைத் திரட்டும் பிரச்சினைகள்

வேலைகளுக்குப் பெண்களைத் திரட்டுவது சம்பந்தமான பிரச்சினைகள் காலத்துக்குக் காலம் பத்திரிகைகளில் விசேஷமாகச் சுட்டிக்காட்டப்பட்டு, உணர்ச்சிகளைத் தூண்டும் முறையில் பரபரப்பாக வெளியிடப்பட்டுள்ளன. எனினும், இந்தப் பெண்கள் பெரும்பாலும் இடம், காலம் முதலான சந்தர்ப்ப நிலைகளால் கொடிய கஷ்டங்களுக்கு உட்பட்டும், (சில சமயங்களில் தங்களுடைய சுயமரியாதையை இழந்தும்கூட), வெளிநாட்டு வேலைகளை நாடுகின்றனர் என்பது உண்மை. இலங்கைப் பெண்களின் பணியகத்தின் தலைவராயிருக்கும் வினிதா ஜயசிங்கா அண்மையில் இந்நாடுகளில் சிலவற்றிற்கு விஜயம் செய்தபோது இந்நிலைமையின் சில அம்சங்களைப் பற்றி அறிக்கை செய்தார்.

அளவுமீறிய வேலைச் சுமை; கட்டட வசதிக் குறைவு; ஈட்டிய ஊதியம் வழங்கப்படாமை; சம்பளங்கள் ஒப்பந்தப்படி இல்லாமை அல்லது குறைந்த சம்பளங்கள்; வீட்டு எஜமானியால், வீட்டு எஜமானல், முகவர்களால் தாக்கப்படுதல்; வீட்டு எஜமானனின் தகாத நடத்தை — இந்தப் பெண்கள் தங்களுக்கு நேர்ந்த உபத்திரவங்களைப்பற்றியும், அவமானங்களைப்பற்றியும் அவருடைய கவனத்துக்குக் கொண்டு வந்த கிரமமான முறையீடுகள் இவைதாம்.

அட்டவணை 9

மத்திய கிழக்கு நாடுகளில் வேலைகளைப் பெற்ற இலங்கைப் பெண்கள் — 1978, 1979ம் ஆண்டுகள்

| தொழில் | மொத்தம் | |
|---|---|---|
| | 1978 | 1979 |
| இலிகிதர் சேவையும் அதனுடன் தொடர்புள்ள சேவையும் | 23 | 30 |
| முகாமையாளர் | — | 06 |
| தாதிமார் | 07 | 08 |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 1,384 | 3,236 |
| *மற்றவர்கள் | — | 23 |
| மொத்தம் | 1,414 | 3,303 |

*தொழிலாளிகள், ஏவற்காரிகள் சமையற்காரிகள்.

மூலம்: மேற்கு ஆசியாவில் வேலைக்கமர்ந்த இலங்கையர்— திட்ட அமுல் அமைச்சு

### அட்டவணை 10
### மத்திய கிழக்கு நாடுகளில் வேலைகளைப் பெற்ற இலங்கைப் பெண்களின் பகிர்வு — 1979

| தொழில் | சவூதி அரேபியா | குவைத் | ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள் | ஓமான் | கட்டார் | பஹ்ரெயின் | ஜோர்தான் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலிகிதர் சேவையும் தொடர்புள்ள சேவையும் | — | — | 30 | — | — | — | — | 30 |
| முகாமைக்காரி | — | — | 05 | — | — | 01 | — | 06 |
| தாதிமார் | — | 05 | 01 | 02 | — | — | | 08 |
| வீட்டுப் பணிப் பெண்கள் | 167 | 1464 | 965 | 19 | 173 | 436 | 12 | 3236 |
| *மற்றவர்கள் | — | — | 20 | — | — | 03 | — | 23 |
| மொத்தம் | 167 | 1469 | 1021 | 21 | 173 | 440 | 12 | 3303 |

*தொழிலாளிகள் ஏவற்காரிகள், சமையற்காரிகள் முதலியோர்

மூலம்: மேற்கு ஆசியாவில் வேலைக்கமர்ந்த இலங்கையர்— திட்ட அமுல் அமைச்சு.

இதற்கு ஓராண்டுக்கு முன்பு தொழில் அமைச்சரே ஐந்து மத்தியகிழக்கு நாடுகளுக்கு — அஃதாவது ஈராக், குவைத், சவூதி அரேபியா, பஹ்ரெயின், ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள் — விஜயம் செய்து, இந்நாடுகளில் வேலைக்கு அமர்ந்துள்ள இலங்கைத் தொழிலாளர்களைச் சந்தித்தார். அப்பெண்கள் பொதுவாகத் துயரக் கதைகளையே கூறினர். அவர்கள் அங்கு சந்தோஷமாயில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால், அமைச்சர் நாடு திரும்பியதும் தமது விஜயத்தைப் பற்றிப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையின்படி, அவர்களை நாட்டுக்குத் திருப்பிக் கொண்டுவந்துவிட அவர் முன்வந்தபோது, அவர்களில் ஒருவராவது அங்கிருந்து வெளியேறத் தயாராயிருக்கவில்லை. அவர்கள் முன் எந்த மாற்றுவழியும் இருக்கவில்லை என்றே தோன்றியது. இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த பெண்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களையும், அபாய ஏதுக்களையும் பற்றித் திட்ட அமுல் அமைச்சைச் சேர்ந்த வேலைவாய்ப்பு — ஆள்பலத் திட்டமிடல் பகுதியின் பணிப்பாளர் 1978 செப்டம்பர் மாதம் விமர்சிக்கையில் கூறினார்: "அங்கு கிடைக்கக் கூடிய தாயுள்ள வேலைகளுக்கே பெண்கள் திரட்டப்படுகின்றனர். அவ்வேலைவகைகள் எமது சமூக, கலாசார சூழலுக்கு ஏற்றனவாயில்லை. அவர்களுக்குக் கீழ்த்தரமான ஊழியங்களிலிருந்தும், வீட்டு வேலைகளிலிருந்தும் விடுதலை கிடைப்பதற்காக, பெண் தொழிலாளர் வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கும் குறைப்பதற்குமாவது நடவடிக்கை எடுப்பது விரும்பத்தக்கது — இது தக்க சமயமாகும்."

இந்நாடுகளில் குடியேறும் பெண் தொழிலாளர் நடத்தப்படும் விதம்பற்றியும், இந்நிலைமை நீடிக்க அனுமதிப்பது விரும்பத்தக்கதா என்பதுபற்றியும் கடந்த வருடப் பிற்பகுதியில் அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டது. பெண் தொழிலாளர் குடிபெயர்வதை முற்றாகத் தடைசெய்வதில்லை என்றும், இவர்கள் இம்சிக்கப்படுதலை முடிந்த அளவு குறைப்பதற்குத் தேவையான சகல பாதுகாப்புகளையும் கையாள்வதென்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

## எதிர்கால சாத்தியக்கூறுகள்

1979-ம் ஆண்டிலேதான் ஆகக் கூடிய தொகையான இலங்கைத் தொழிலாளர்கள் மத்திய கிழக்குக்குச் சென்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் மிகப் பெருந்தொகையான கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதும் இந்த வருடத்தில்தான். மாதந்தோறும் சராசரியாக 11,000 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டன. 1980-ம் வருடத்தில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுகளின் தொகை மாதமொன்றுக்குச் சுமார் 8,000 க்குக் குறைந்துவிட்டது. இது குடிபெயரும் தொழிலாளரின் வெளியேற்றத்தை எவ்விதத்தும் எடுத்துக்காட்டுவதாயிருக்குமாயின், 1980ம் ஆண்டில் தொழிலாளரின் வெளியேற்றத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் போன்ற தொழிலாளரைப் பெருமளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகள் சிலவற்றில், தொழிலாளர் வெளியேறும் முறையில் ஏற்கனவே மாற்றம் ஏற்பட்டுவிட்டது. முன்னரே குறிப்பிடப்பட்டதுபோல, ம. கிழக்கில் கட்டடங் கட்டும் வேலைகள் படிப்படியாகக் குறையும்போது ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளருக்கும் தேர்ச்சி பெறு தொழிலாளருக்குமான கோரிக்கை வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமயத்தில், உயர்தர — நடுத்தர மட்டங்களில் உள்ள நிர்வாக, பராமரிப்புத்துறைகளில் வேலைவாய்ப்புகள் எழும்.

உயர்தரமட்ட வினைத்திறன்களுக்கான தேவையில் இந்த நிகழ்வுப் போக்கு மிக உறுதியாக வளர்ந்து வருகிறதென்று இவ்வருடம் மார்ச் மாதத்தில் நாங்கள் நடத்திய ஒரு பூர்வாங்க பரிசீலனை எடுத்துக் காட்டியது.

குடிபெயரும் தொழிலாளரில் குறிப்பிட்ட வகையினருக்கான தேவை 1981-ம் ஆண்டிலும் இருந்ததென்பதற்குப் பலத்த சான்றுகள் உள்ளன. எனினும், அநேக வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் வீட்டு வேலைக்காரிகள் தேவை என்றே தொடர்ந்து விளம்பரஞ் செய்து வந்தன; எனினும், முக்கியத்துவம் நடுத்தர மட்ட, தேர்ச்சிபெற்ற மட்ட ஆள்பலத்துக்கு மாறிவிட்டதென்பது தெளிவாகப் புலப்பட்டது. பல்வேறு தரங்களைச் சேர்ந்த நில அளவையாளர், கட்டடப் பட வரைஞர், புள்ளிவிவர இயலாளர் ஆகியோரிலிருந்து வாகன மெக்கானிக்குகள், மின்னியலாளர், களவேலை மேற்பார்வையாளர், கனரக சாதனங்கள் — நிர்மாண இயந்திரங்களுக்குரிய மெக்கானிக்குகள், சாரதிகள், பொருத்துநர்கள், மரத் தச்சர்கள், உருக்கி ஒட்டுநர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காய்ச்சி இணைக்கும் வெல்டர்கள்), குழாய்ப் பொருத்துநர்கள், முடியலங்கரிப்போர், தையற்காரர், ஆண் உடைத் தயாரிப்பாளர்கள் — வடிவமைப்பாளர்கள் ஆகியோர்வரை விரிவான வினைத்திறன்கள் உள்ளோர் தேவையெனக் கோரி, இவ்வருடம் மார்ச் 24-ம் திகதிக்கும் ஏப்ரல் 5-ம் திகதிக்குமிடையேயுள்ள 14 நாட்களுக்கிடையே 14 எடுப்பான பத்திரிகை விளம்பரங்கள் அல்லது சராசரியாக நாளுக்கொரு விளம்பரம்வீதம் வெளியிடப்பட்டன. நிர்வாகப் பதவிகள், இலிகிதர் பதவிகள் ஆகியவற்றிற்கான கோரிக்கையும் இடையருதிருந்து வந்தது. இந்த ஆளணியினரைக் கோரிய நாடுகள் ஓமான், ஈராக், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீர் இராஜ்யங்கள், பஹ்ரெயின் ஆகியனவாகும்.

மிகப் பெரிய கவர்ச்சி அவை அளிக்க முன்வந்த சம்பள விகிதங்களில்தான் தங்கியிருப்பதாகத் தோன்றியது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஒரு வருடத்தில் இலங்கையில் சம்பாதிக்கப்படும் சம்பளம் மத்திய கிழக்கில் ஓரிரு மாதங்களில் ஈட்டக்கூடிய சம்பளத்துக்குச் சமமாக இருந்தது. இந்நிலைமை வீட்டுப் பணிப் பெண்கள், உடலுழைப்புத் தொழிலாளர், சமையற்காரர் போன்ற தேர்ச்சி பெருத வகையினருக்கு மட்டுமன்றி, எஞ்சினியர்கள், நில அளவையாளர், புள்ளிவிவர இயலாளர், கட்டடப் படவரைஞர்கள் போன்ற உயர்மட்ட ஆள்பலத்துக்கும், அத்துடன் சாரதிகள், மின்னியலாளர், மெக்கானிக்குகள் போன்ற தேர்ச்சிபெற்ற தொழிலாளருக்கும் பொருந்தும். அத்துடன், உயர் சம்பளங்கள் அளிக்க முன்வரும்போக்கும் காணப்பட்டது. இரு வருடங்களுக்கு முன்பு, முன்வைக்கப்பட்ட சம்பள விகிதங்களுடன் இன்று முன்வைக்கப்படும் சம்பள விகிதங்களை ஒத்துப் பார்ப்போம்: 1978-ம் ஆண்டில் எஞ்சினியர்களுக்கு மாதமொன்றுக்கு முன்வைக்கப்பட்ட சம்பளவிகிதங்கள் 10,000/- ரூபாவுக்கும் 15,000/- ரூபாவுக்குமிடையே வேறுபட்டது; ஆனால், இப்பொழுது அவர்களுக்கு 15,000/- ரூபாவிலிருந்து 25,000/ ரூபா வரையான சம்பள விகிதங்கள் முன்வைக்கப்படுகின்றன. முன்பு நிர்வாக இலிகிதர்களுக்கு மாதாந்த சம்பளமாகச் சுமார் 5,000/- ரூபா முன்வைக்கப்பட்டது; ஆனால், இப்பொழுது சுமார் 10,000/- ரூபா முன்வைக்கப்படுகிறது. சாரதிகளின் சம்பளங்கள் உயர்ந்தபட்சத் தொகையான 5,000/- ரூபாவிலிருந்து 6,000/- ரூபாவுக்கு மேல் போய்விட்டன. மெக்கானிக்குகள், மின்னியலாளர் ஆகியோரின் சம்பளங்கள் ஏறக்குறைய 4,000 /- ரூபாவிலிருந்து சுமார் 5,000/- ரூபாவுக்கு ஏறிவிட்டன. குடாப் பிரதேசத்துக்கான வீட்டு வேலைக்காரிகளைக்கூடப் பெறுவது இப்பொழுது மிகக் கடினமாயிருப்பதாகத் தோன்றுகிறது. முன்பு அவர்களுக்கு மாதம் சுமார் 1,500/- ரூபாவிலிருந்து 2,000/- ரூபாவரையான சம்பளம் வழங்கப்பட்டது; இப்பொழுது அது 3,000/- ரூபாவுக்கு உயர்ந்துவிட்டது.

இதைப்பற்றி விசாரிக்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களில் அநேகம், "பெண் தொழிலாளருக்குடனடித் தேவை இருந்து வருகிறது. எனினும், அவர்கள் ஆங்கில அறிவுள்ளவர்களாயிருப்பதவசியம் என்று வேலைகொள்வோர் குறிப்பிடுகின்றனர். அத்துடன், விண்ணப்பதாரிகள் கவர்ச்சியான தோற்றம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அவர்களில் சிலர் வற்புறுத்துகின்றனர்" என்று கூறின. பெரும்பாலான வேலைகள் சம்பந்தமாக முன்வைக்கப்படும் சம்பள விகிதங்கள் இலங்கையில் வழங்கப்படுவதைவிட ஐந்திலிருந்து ஏழுமடங்குவரை அதிகமாயிருப்பதைக் காணலாம். மத்தியகிழக்கில் இந்த அபிவிருத்தி வேலைகளின் வேகம் பின்னிடுவதுடன், கட்டடத் தொழிலாளருக்குரிய திடீர்ச் சுபிட்சநிலை முடிவடைந்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை. எனினும், நிர்வாகத் துறையிலும் பராமரிப்புத் துறையிலும் குறிப்பாக உயர் மட்டத்திலும் நடுத்தரமட்டத்திலும் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. எனவே, அடுத்த சில வருடங்களில் இலங்கைத் தொழிலாளர்கள் இவ்வகையான உத்தியோகங்களில்தான் வேலைவாய்ப்புகளைக் காண முடியும். பெண் தொழிலாளர்களில் குறிப்பாக வீட்டுப் பணிப் பெண்களுக்கான கோரிக்கை சிலகாலம்வரை தொடர்ந்து இருந்து வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடல்கடந்த வேலைவாய்ப்புகளின் இத்துரிதப் போக்கு சம்பந்தமாகக் கொள்ளப்படும் பேரச்சம் யாதெனில், குறிப்பாக இந்த வேலைவசதிகள் தொழிலாளரை வழங்கிவரும் நாட்டின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தளர்த்த உதவியதும், விரைவில் முடிவடைந்துவிடக் கூடும் என்பதாகும். இதற்கோர் உதாரணம் உண்டு: ஐரோப்பாவில் வியாபார முயற்சிகள் தற்காலிகமாக ஒடுங்கியபோது, அழைப்பின் பேரில் வந்த துருக்கிய தொழிலாளர்களில் அநேகர் தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. இது துருக்கி நாட்டில் பிரமாண்டமான அளவில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கியது மட்டுமன்றி குடிபெயர்ந்த துருக்கிய தொழிலாளர்களது பண அனுப்பீடுகளின் கன அளவையும் கணிசமாகக் குறைத்துவிட்டது. மேலும், இது தோற்றுவித்த பாரதூரமான நிதிப் பிரச்சினைகள் இன்றும் துருக்கியின் பொருளாதாரத்தை ஆட்டிப்படைத்து வருகிறது. மத்தியகிழக்குக்குத் தொழிலாளரை வழங்கிவரும் நாடுகளுக்கு இந்நிலைமை நேருமாயின், இம்மூலங்களிலிருந்து அந்நாடுகள் ஈட்டிவந்த வெளிநாட்டுச் செலாவணித் தொகைகளும் குறையத் தொடங்கிய ஒரு சமயத்திலே, ஏற்கனவே அளவுமீறி நிறைந்துள்ள ஓர் உள்நாட்டுச் சந்தைக்குப் பெருந்தொகையான தொழிலாளர்கள் திரும்பிவந்து சேரும் பிரச்சினையைப் பல ஆசிய அரசாங்கங்கள் எதிர்நோக்கும் என்பது திண்ணம். அல்லது இந்நிலைமை திடீரென ஏற்படுமானால், சமூக, அரசியல், நிதித் துறைகளில் ஏற்படும் விளைவுகள் பல மற்ற நிலையிலுள்ள பல பொருளாதாரங்களை ஊறுபடுத்திவிடும் என்பது நிச்சயமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

# வர்த்தகத் துறையின் மாறிவரும் போக்குகள்

தாராள வர்த்தகக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல் 1980ம் ஆண்டு முழுவதிலும், பிரதானமான மேற்கத்தைய நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு நல்ல சந்தை வசதி இருந்தது. கடந்த வருடம் நவம்பர் மாதம் வரையில், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 24 சத வீதமான பொருட்களை அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் மட்டும் வாங்கி இருந்தன. எனினும், நாட்டின் வர்த்தகப் போக்கு திசை திரும்பி இருக்கின்றதெனக் குறிப்பிடக்கூடிய விதத்தில் சீனு மீண்டும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை பெருமளவில் வாங்கத் தொடங்கியுள்ளது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களை வாங்கும் பிரதான நாடுகளில் சீனு நான்காவது இடத்தை வகித்தது. ஆனல், 1979ம் ஆண்டில் சீனு ஐந்தாவது ஸ்தானத்துக்கு இறங்கி இருந்தது. 1978, 1977ஆம் ஆண்டுகளில் சீனு எமது ஏற்றுமதிப் பொருள்களை வாங்கும் நாடுகள் வரிசையில் முறையே இரண்டாம், முதலாம் இடங்களை வகித்து வந்தது. 1979இல் நிலைமை மாறி மீண்டும் 1980இல் பழைய திசைக்குத் திரும்பியுள்ளது என்று சொல்லலாம். அதே வேளை, எப்பொழுதும் வர்த்தகச் சமநிலை குன்றும் விதத்தில் எம்மிடமிருந்து மிகக்குறைந்த அளவு பொருள்களையே வாங்கிவரும் இந்தியா, இப்போது மிகப் பெருமளவில் வாங்கிவருவதும் எமது வர்த்தகத் துறையில் குறிப்பிடக்கூடிய ஒரு மாற்றமாகும். எமது நாட்டு உற்பத்திப் பொருள்களை வாங்குவதில் முன்னணி வகிக்கும் நாடுகளின் வரிசையில் ஏழாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்கு இந்தியா இப்போது எம்மிடமிருந்து அதிக பொருள்களை வாங்கி வருகிறது. அந்த வரிசையில் பாகிஸ்தான் இந்தியாவை அடுத்து எட்டாவது இடத்தை வகித்து வருகிறது. 1980 அக்டோபர் வரையும், கடந்த மூன்று வருட காலத்துக்கு மேலாக எமது நாட்டுக்கு அதிக பொருள்களை ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடாக விளங்கி வரும் ஜப்பான் எமது பொருள்களை அதிக அளவில் வாங்கும் நாடுகளில் ஒன்ருகவும் இருந்து பத்தாவது இடத்தை வகித்து வந்தது. ஆனல் இப்போது அது பதினெராவது, ஸ்தானத்துக்கு இறங்கிவிட்டது.

ஈராக், சவூதி அரேபியா, ஐக்கிய அரபுக் குடியரசு, ஈரான் ஆகிய நாடுகளும் இலங்கையின் உற்பத்திப் பொருள்களை வாங்கும் முன்னணி நாடுகளாகத் திகழ்கின்றன. அவை பெருமளவில் தேயிலையையும், அடுத்துக் கராம்பையும் எம்மிடமிருந்து வாங்குகின்றன. இலங்கையின் பிரதான கொள்வனவு நாடுகளில் இருந்து நாம் மிகப் பெருந்தொகையான பொருள்களை வாங்கி வருகின்றமெனினும், அந்த நாடுகளுடனுன வர்த்தகச் சமநிலை இன்னமும் குறிப்பிடக் கூடிய அளவுக்கு சீரற்றதாகவே உள்ளது. பிரஸ்தாப நாடுகளுக்கான எமது ஏற்றுமதியை இன்னமும் அதிகரிக்க முடியும் என்பதையே இது உணர்த்துகிறது.

பல வருட காலச் சரித்திரத்தில், சவூதி அரேபியா இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இப்போது முதலாவது இடத்தை வகிக்கிறது. பெற்ருேலியம் பொருள்களின் விலை உயர்த்தப்பட்டதே அதற்குப் பிரதான காரணமாகும். 1980ம் ஆண்டு நவம்பர் மாத இறுதி வரை இலங்கையின் பெற்ருேலியச் செலவினம் 988 கோடியே 30 லட்சம் ரூபாவாக (இது மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 30 சதவீதமானதாகும்) இருந்தது. 1979ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் நாட்டின் பெற்ருேலிய இறக்குமதிச் செலவினம் 396 கோடி ரூபாவாக (இது மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 17 சதவீதமாகும்) இருந்தது. 1979ம் ஆண்டில் சவூதி அரேபியாவிலிருந்து 129 கோடியே 90 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன; அதே வேளை, 1980ம் ஆண்டில் 579 கோடி 90 லட்சம் ரூபாவுக்கு அங்கிருந்து பொருள்கள் இறக்குமதியாகியுள்ளன. அதன் விளைவாக, 1980 நவம்பர் வரை நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 11·6 சத வீதம் பெறுமதியான பொருள்கள் ஜப்பானிலிருந்தே இறக்குமதியான போதிலும் அது சவூதி அரேபியாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தையே பெற முடிந்தது. 1979இல் ஜப்பானிலிருந்து இறக்குமதியான பொருள்களின் பெறுமதி 273.6 கோடி ரூபாவாக இருந்து 1980ல் 385.2 கோடியாக உயர்ந்தது. பிரிட்டனிலிருந்து 1979இல் 186.9 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இறக்குமதியாகின; ஆனல், 1980இல் பிரஸ்தாப தொகை 287.7 கோடி ரூபாவாக உயர்ந்தது. ஆனல், இந்தியாவிலிருந்து இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவு குறைந்திருக்கிறது. 1979இல் 214.5 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதியாகின; ஆனல், 1980ம் ஆண்டில் அது 146.3 கோடி ரூபாவுக்குக் குறைந்தது.

போக்குவரத்துச் சாதனங்கள், இரும்பு மற்றும் உருக்குப் பொருள்கள், மின்சாரப் பொருள்கள், உர வகைகள், என்பன ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் பிரதான பொருள்களாகும். பிரிட்டனிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களில் போக்குவரத்துச் சாதனங்கள், மின்சார உபகரணங்கள், இயந்திராதிகள் மற்றும் உபகரண வகைகள் என்பன பிரதானமானவையாகும். சவூதி அரேபியா, ஈராக், ஈரான் ஆகிய நாடுகளைப் பொறுத்தமட்டில் அவற்றிடமிருந்து இறக்குமதியாகும் பிரதான பொருள்கள் பெற்ருேலியம் எண்ணெய் வகைகளாகும். இவ்வாருன சூழ்நிலையில், எமது வர்த்தகத் துறையில் இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையில் நிலவும் வர்த்தகச் சமனற்ற நிலை கூடி வருவது குறிப்பிடற்பாலதாகும்.

1980ம் ஆண்டின் பதினெரு மாத காலப் பகுதியிலும் நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவம்பர் மாதம் வரையான பதினொரு மாதங்களில் தெரிவு செய்யப்பட்ட பொருள்களின் இறக்குமதி 1979—1980*

| பொருள் | 1979 பெறுமதி (பத்து லட்சம் ரூபாவில்) | (ஜன.—நவ.) மொத்தத்தில் சத வீதம் | 1980 பெறுமதி (பத்து லட்சம் ரூபாவில்) | (ஜன—நவ) மொத்தத்தில் சத விதம் |
|---|---|---|---|---|
| சீனி, இனிப்புப் பொருள்கள் | 843.5 | 4.0 | 1,712.4 | 5.2 |
| பெற்ரோலியப் பொருள்கள் | 3603.6 | 17.2 | 9 883.3 | 29.8 |
| உர வகைகள் | 632.4 | 3.0 | 1,151.4 | 3.5 |
| இரும்புப் பொருள்கள் | 1,091.5 | 5.2 | 1,457.7 | 4.4 |
| கனலடுப்புகள் இயந்திராதிகள், இயந்திர உபகரணங்கள் பிற | 1,090.5 | 9.1 | 3,053.2 | 9.2 |
| மின்சார இயந்திரங்கள் உபகரணங்கள் உதிரிப் பாகங்கள் | 819.8 | 3.9 | 1 389.7 | 4.2 |
| ரயில்வே உபகரணங்கள் தவிர்ந்த வாகனங்கள் | 1 901.4 | 9.1 | 2 769.5 | 8.4 |
| மற்றவை | — | — | — | — |
| கூட்டு மொத்தம் | 20,933.4 | 100.0 | 33,168.3 | 100.0 |

பெற்ற ஏற்றுமதியை 1979ம் ஆண்டின் அதே காலப் பகுதியில் இடம்பெற்ற ஏற்றுமதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எமது பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்கள் மூன்றும் பின்னடைந்து வருவதைக் காண முடிகிறது. 1979இல் மூன்று ஏற்றுமதிப் பொருள்கள் மூலமும் 916.8 கோடி ரூபா வருமானம் கிடைத்திருக்கும் போது 1980இல் அந்த வருமானம் 914.5 கோடி ரூபாவாக குறைந்தது. இந்தக் காலப் பகுதியில் தேயிலை மட்டுமே சிறிது முன்னேற்றம் கண்டது; றப்பர் ஏற்றுமதி மூலமான வருமானம் 234 கோடி ரூபாவில் இருந்து, 231.9 கோடியாக குறைந்தது. அதே வேளை தெங்குப் பொருள் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானமும் ரூ. 115·8 கோடியிலிருந்து 69.3 கோடி ரூபாவாக வீழ்ச்சி கண்டது. எமது ஏற்றுமதித் துறையில், தயாரிக்கப்பட்ட ஆடை மூலம் பெறப்படும் வருமானமே பெருமளவில் அதிகரித்தது. 1979ம் ஆண்டின் பதினொரு மாதங்களில் தயாரிக்கப்பட்ட ஆடை வகையால் கிடைத்த 99 கோடியே 30 லட்சம் ரூபா, 1980 இல் 153 கோடியே 20 லட்சம் ரூபாவாக உயர்ந்தது. இதே வேளை, பெற்ரோலியம் பொருள்கள், உரவகைகள், இரும்பு, உருக்குப் பொருள்கள், கனலடுப்புகள், இயந்திராதிகள், இயந்திரங்களுக்கான உபகரணங்கள், மின்னியல் இயந்திரங்கள், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், வாகனங்கள் போன்றவற்றின் இறக்குமதியால் நாட்டின் இறக்குமதிச் செலவினம் உச்சத்துக்கு உயர்ந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் நாட்டில் குறுகிய கால வர்த்தகப் பற்றுக் குறைகள் ஏற்படும் போக்கு உண்டாகும். கிடைக்கும் உதவியைக் கொண்டு அபிவிருத்தி வேலைகளுக்குத் தேவையான இயந்திராதிகள், உபகரணங்கள், மூலப் பொருள்கள் என்பனவற்றை இறக்குமதி செய்து வருவதாலும், குறுகிய கால வர்த்தகப் பற்றுக் குறைகள் ஏற்பட ஏதுவாகும். எனவே இடைக்காலத்திலும், நீண்ட காலத்திலும் வர்த்தகப் பற்றுக்குறை மேன்மேலும் அதிகரிக்காதிருப்பதற்கு வகை செய்யும் விதத்தில் ஏற்றுமதித் துறையை பெருமளவில் விஸ்தரிக்க வேண்டியது அவசியமாகும். எனினும், இலங்கை போன்ற நாடுகளில் வர்த்தக ஏற்பாடுகளை விட பணவீக்க வீதம் மிகவும் வேகமாக உயர்ந்து செல்லும்போது, இறக்குமதிக்கு ஊக்கமளிப்பதாகவும், ஏற்றுமதித் துறையில் உள்ள போட்டியைத் தணிப்பதாகவும் அமையும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், பொருளாதார வீழ்ச்சியைச் சரி செய்வதற்கு நாணய மதிப்பைக் குறைப்பது அல்லது மீள நிர்ணயிப்பது அவசியமாகிறது. பணவீக்கம் கட்டுப்பாடின்றி உயர்ந்து செல்லச் செல்ல, நாணய மதிப்புக் குறைப்பு என்ற நச்சு வட்டம் அடிக்கடி சூழ்ந்து கொண்டே இருக்கும்—நாணய மாற்றுத் தேய்மானங்கள் மேன்மேலும் பணவீக்கத்துக்கு வழி செய்யும்; அதனல் மேலும் நாணய விகிதத்தில் தேய்மானம் என்று முடிவில்லாமல் தொடர்ந்து சென்று கொண்டே இருக்கும்.

ஏற்றுமதி, இறக்குமதிகளின் பெறுமானம்
(பத்து லட்சம் ரூபாவிலும் எஸ்· டி· ஆரிலும்)

| | 1979 | நவம்பர் மாதம் வரையான பதினொரு மாதங்களில் 1979 | 1980 | 1979ஆம் ஆண்டில் இருந்ததை விட 1980இல் ஏற்பட்ட மாற்றம் பெறுமதி | சத வீதம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| மொத்த ஏற்றுமதிகள் | 15,272.5 | 14,043.9 | 15 656.5 | 1,656.5 | 11.5 |
| | (758.3) | (697.2) | (732.0) | ( 34.8) | ( 5.0) |
| இறக்குமதிகள் | 22 560.5 | 20,658.5 | 33,139.2 | 12,273.7 | 58.8 |
| | (1 120.2) | (1,036.0) | (1 549.3) | ( 517.3 ) | ( 49.5) |
| பண்ட வர்த்தக நிலுவை | — 7,287.9 | — 6 821.6 | -17,482.7 | | |
| | — (-361.9) | (-338.8) | (-817.3) | | |

*(அடைப்புக்குறிக்குள்—பத்து லட்சம் எஸ். டி. ஆரில் பெறுமதி)*
*(ஆதாரம்: இலங்கைச் சுங்கப் பகுதி அறிக்கை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் விளைச்சல் தரும் நெல்லினங்கள்

உணவுப் பொருள் உற்பத்தியில் "பசுமைப் புரட்சி" ஏற்படுத்திய தாக்கம் குறித்து கடந்த சில வருடங்களாகப் பெரும் சர்ச்சை நிலவி வருகிறது. சென்ற ஆண்டு பிற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில், பத்தலகல நெல் பரிசோதனை நிலையத்தில் பணிபுரியும் இரு ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர். "எச்" வகை நெல் இனங்கள் அறிமுகமாகிப் பிரபல்யமடைந்ததோடுதான் இலங்கையில் பசுமைப் புரட்சி ஏற்பட்டது என்று சொல்வது தவறானது என்று அவர்கள் இருவரும் சாதித்தனர். எனினும், "எச்" வகை நெல் இனங்கள் ஏக்கர் ஒன்றுக்கு 30 புசல்களாக இருந்த தேசிய சராசரி நெல் உற்பத்தியை 51 புசல்களாக உயர்த்துவதற்கு 1957ம் ஆண்டுக்கும் 1969ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நிச்சயம் உதவின. அதாவது "பசுமைப் புரட்சி" பற்றிப் பேசப் பல ஆண்டு காலத்திற்கு முன்னரே நாட்டின் சராசரி நெல் உற்பத்தி உயர்வதற்கு 'எச்' வகை நெல் இனங்கள் பெருமளவில் உதவின.

உரவகைகளைப் பாவிப்பதால் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய தன்மை கொண்ட நெல் இனங்களை உருவாக்கும் முயற்சிகளும், பயிர்ச்செய்கைக்கு வேண்டிய விதை நெல் வகைகளை இனப்பெருக்கம் செய்யும் முயற்சிகளும் ஐம்பதுக்களிலேயே ஆரம்பமாகிவிட்டன. பிலிப்பைன்ஸ் நாட்டில் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவகம் ஆரம்பிக்கப்படுவதற்கு சுமார் பத்தாண்டு காலத்திற்கு முன்னரே, எமது நாட்டில் மேலே தெரிவிக்கப்பட்ட இரு முயற்சிகளும் தொடங்கிவிட்டன. இலை வெடிப்பு நோய்க்கு ஈடு கொடுக்கக் கூடியதும், உரவகைகளைப் பாவித்தால் மேலதிக விளைச்சல் தர வல்லதுமான அதிக மகசூல் தரக்கூடிய "எச்" வகை நெல்லினம் 1958ம் ஆண்டளவில் பெருமளவில் பாவனைக்கு வந்தது. பிரஸ்தாப 'எச்' இன நெல் வகைகளை விருத்தி செய்துமேன்மேலும் பாவனைக்கு வழங்கியதன் மூலம், நாட்டின் நெற் செய்கை நடைமுறைகளில் பெரும் மாற்றங்கள் தோன்றின. 'எச்-4', 'எச்-9' நெல்லினங்கள் விளைச்சலில் மாபெரும் சாதனையை நிலைநாட்டி திருப்பத்தை உண்டாக்கின. அத்தோடு நாட்டில் மிகப் பிரபல்யம் வாய்ந்த நெல் இனமாகவும் விளங்கியது சமீப காலம் வரை இலங்கையின் வரண்ட வலயப் பிரதேசங்களிலும், மத்திய வலயப் பிரதேசங்களிலும் நெற் செய்கையில் 'எச்' நெல் இனங்களே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளன. 1957ம் ஆண்டில் ஏக்கர் ஒன்றுக்கு முப்பது புசல்களாக இருந்த தேசிய சராசரி விளைச்சல், 1969ல் ஐம்பத்தொரு புசல்களாக உயர்வதற்கு 'எச்' நெல் இனங்களே காரணமாக இருந்தன.

அபிவிருத்தி செய்யப்பட்ட இனங்கள் என்று இப்போது அழைக்கப்படும் 'எச்' வகை இனங்கள், பசளையின் அளவை அதிகரிக்கும் போது மேலதிக விளைச்சல் தரக்கூடியவை. எனினும், பாரம்பரிய நெல் இனங்களைப் (உயர்ந்த மெல்லிய தண்டும் கீழே குத்திட்டு நிலத்தை முட்டும் நீளமான இலையும் கொண்ட இனங்களைப்) போலவே, 'எச்' இனங்களும் அளவுக்கு அதிகமாகப் பசளையைப் பயன்படுத்தினால் அதனால் தறுக்கணித்து, அதிக விளைச்சலுக்குப் பதில் அனேகமாகக் குறைந்த விளைச்சலையே தரும். நெல் மணிகள் முற்றும் போது ஏற்படும் தாக்கத்தினால், 'எச்' இன நெல் வகைகளைக் குற்றும் போது அரிசி உடைந்து சேதமடைவதுண்டு. சூழல், பருவகாலம் என்பனவற்றுக்கு ஈடுகொடுத்து அதிக விளைச்சலைத் தரும் தன்மை 'எச்' இன நெல்வகைகளிடம் மிகவும் குறைவு.

பிலிப்பைன்ஸில் உள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவகத்தில் விருத்தி செய்யப்பட்ட ஐ. ஆர். 8 என்ற நெல் இனம் 1968ம் ஆண்டளவில் எமது நாட்டில் அறிமுகமானது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அந்த இனத்தை உற்பத்தி செய்வது குறித்துச் செய்யப்பட்ட பரீட்சார்த்தச் செய்கைகள் மற்றும் பரிசோதனைகள் மூலம், பிரஸ்தாப ஐ ஆர் 8 இனமானது, எமது நாட்டின் நெல்லுடன் கலப்பினம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட எச்-4 நெல்லினத்தைவிட மிகச்சிறந்தது எனச் சொல்வதற்கு இல்லை என்று கண்டறியப்பட்டது. அதாவது, ஐ ஆர் 8 இனத்துக்கும் எச் 4 இனத்துக்குமிடையில் விளைச்சலில் அதிக வித்தியாசமில்லை என்று தெரியவந்தது. எனினும், நைதரசன் உரங்களைச் சற்று அதிகமாகப் பாவிப்பதன் மூலம் ஐ ஆர் 8 நெல்லினம் எச் 4 இனத்தை விட அதிக விளைச்சலைத் தந்தது. அதே வேளை, ஐ ஆர் 8 நெல்லினம் சில பயிர் நோய்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் இருந்ததாலும், நாட்டின் சில பகுதிகளில் அது உற்பத்திக்கு உகந்ததாக இருக்காமையாலும் அதனைப் பரந்த அளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது மட்டுமன்றி ஐ ஆர் 8 நெல் மணியின் தரமும் வெகுவாகக் குன்றியிருந்தது. நாட்டின் பிரதான பயிர் நோய்களுக்குத் தாக்குப் பிடிக்கும் தன்மையும் அதனிடம் இல்லை. ஐ ஆர் 8 நெல்லினமானது புதிய பயிர்ச் செய்கைத் தொழில் நுட்பங்களுக்கு ஒரு மாதிரியாக விளங்கிய போதிலும், அவற்றுக்குத் தேவையான கவனத்தைச் செலுத்துவதற்கும், நேரத்தைச் செலவிடுவதற்கும் பல விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை. புதிய பயிர்ச்செய்கை நடைமுறைகளுக்குத் தேவையான பராமரிப்பு, செய்முறை பாதுகாப்பு, தொழில் முறை முகாமைத்துவங்களைச் செய்யும் தன்மை எமது விவசாயிகளிடம் இல்லை என்பதற்கு, ஐ ஆர் 8, தைவான் தைச்சுங் நாட்டினம் ஆகியவை தோல்வி கண்டமையே ஒரு எடுத்துக்காட்டாகும்.

உள்நாட்டு நெல்லினங்களின் தறுக்கணிப்பைத் தடுப்பதையும், நெல் மணியின் போஷாக்குத் தரத்தை அபிவிருத்தி செய்வதையும் பிரதான நோக்கங்களாகக் கொண்டு தேசிய நெல் வளர்ப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு இடங்களில் பல்வேறு நெல்லினங்களைப் பரந்த அளவில் பரீட்சித்துப் பார்க்கும் அம்சமும் பிரஸ்தாப நெல் வளர்ப்புத் திட்டத்தில் அடங்கும். இந்தப் புதிய அணுகு முறையின் கீழ், நெல் ஆராய்ச்சியாளர்கள், நாட்டின் பல்வேறு வகைப்பட்ட விவசாய—பூகர்ப்பச் சூழல்களையுடைய பல இடங்களில் நெல்லினங்களின் தன்மை குறித்துக் குறுகிய காலத்தில் மதிப்பீடு செய்ய முடிந்தது. புதிய திட்டத்தின் பெறுபேறுகள் 1960ம் ஆண்டுகளிலேயே வெளிவரத் தொடங்கியது. அதாவது ஒவ்வொரு வயது, வகுப்புக்கும் ஏற்ற அதிக விளைச்சல் தரும் நெல்லினங்களை இனங்காண முடிந்தது. அதன் விளைவாக, ஏக்கர் ஒன்றுக்கு 140 புசல் விளைச்சல் தரக்கூடிய உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பி ஜி-11-11, எல் டி-66 ஆகிய புதிய நெல்லினங்களை அறிமுகப்படுத்த முடிந்தது. இந்த இரு புதிய நெல்லினங்களும் ஐ ஆர் 8ஐ விட பல வகைகளிலும் சிறந்த தன்மைகள் கொண்டவை என்றும் கண்டறியப்பட்டது. விவசாயத் திணைக்களம் வெளியிட்ட ஆராய்ச்சிக் குறிப்பின் பிரகாரம், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பிஜி-11-11, எல் டி-66 ஆகியவற்றைவிட ஐ ஆர்-8 இன் தரமும், தன்மைகளும் மிக மிகக் குறைந்ததாகும்; அதுவும் குறிப்பாக ஈரவலயப் பிரதேசங்களில் ஐ ஆர்-8இன் சாதனை மிகவும் மட்டமானதாகும். அதிக விளைச்சல் தரும் நெல்லினங்களின் உற்பத்திச் சாதனைகளை கீழே உள்ள அட்டவணையில் காணலாம்.

அபிவிருத்தி செய்யப்பட்ட நெல்லினங்களை வளர்த்தல், விவசாயிகள் மத்தியில் அறிமுகப்படுத்துதல் திட்டமானது, இரு பெருங்கட்டங்களாக அமைந்துள்ளது எனலாம். 1950ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்து 1970ம் ஆண்டு வரை முதலாவது கட்டம் என்றும், 1970ம் ஆண்டு முதல் இற்றை வரையும் இரண்டாவது கட்டம் என்றும் கொள்ளலாம். முதலாவது கட்டத்திலேயே உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'எச்' நெல்லினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1960ம் ஆண்டுகளில் அது விவசாயிகள் மத்தியில் வெகுவேகமாகப் பிரபல்யமானது. 1970ம் ஆண்டளவில், நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட மொத்தக் காணிகளில் 70 சத வீதமானவற்றில் 'எச்' நெல்லினங்களே விதைக்கப்படுமளவுக்கு அந்த இனங்கள் பிரபல்யம் அடைந்திருந்தன. இரண்டாவது கட்டத்தில் குறிப்பிடக் கூடிய திருப்புமுனை என்னவெனில், அதிக சக்தி படைத்தவையும், குறுகிய காலத்தில் பயன் தரக்கூடியவையும், அதே வேளை நாட்டின் பல்வேறுபட்ட விவசாய—சீதோஷ்ண சூழ்நிலை நெல்லினங்கள் உருவாக்கப்பட்டு களுக்கு உகந்தவையுமான புதிய மிகப் பரந்த அளவில் அறிமுகமாகின. 1975ம் ஆண்டளவில் 40 சதவீதமான விவசாயிகள் புதிதாக உருவாக்கப்பட்ட நெல்லினங்களையே பாவித்தார்கள்.

அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நெல்லினங்கள் பிரபல்யமானதன் பின்னர், அபிவிருத்தி செய்யப்பட்ட பழைய நெல்லினங்களின் பாவனை 1970ம் ஆண்டின் பின் பெருமளவில் வீழ்ச்சி கண்டது. 1979ம் ஆண்டில், நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்தக் காணிகளில் 55 சத வீதமானவற்றில் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நெல்லினங்களும், 23 சத வீதமான காணிகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட பழைய நெல்லினங்களும், மிகுதி 22 சதவீதமான காணிகளில் பாரம்பரிய நாட்டினங்களும் **விதைக்கப்பட்டிருந்தன.** விவசாயத் திணைக்களம், அபிவிருத்தி செய்யப்பட்ட இனங்களின் விதை நெல் வகைகளை மேன்மேலும் பெருமளவில் விவசாயிகளுக்கு விநியோகித்து வருவதால் அந்த நெல்லினங்கள் எதிர்வரும் ஆண்டுகளில் மிகப் பெருமளவில் செய்கை பண்ணப்படும்.

அதிக விளைச்சலைத் தரும் பீஜீ இனங்களின் விதை நெல், உரத்தினால் விரைவில் தாக்கமுறக் கூடியதாகும். அத்தோடு, களைக் கட்டுப்பாடு, தண்ணீர் விநியோகம், பயிர் நோய், பூச்சிகளின் தாக்கம் சம்பந்தமான செய்முறைகள் தொடர்பாக மிகக் கவனமும் அவசியம். மண் வளமும் சாதகமானதாக இருக்கவேண்டும். நீர்ப்பாசன வசதிகள் போதிய அளவு உள்ள பகுதிகளிலேயே பிஜி நெல்லினங்கள் பயிர் செய்யப்படுகின்றன. அதே வேளை, மழையையே நம்பியிருக்கும் வறண்ட பிரதேசங்களிலும், இடைப்பட்ட பிரதேசங்களிலும் 'எச்' இன நெல்வகைகளே பிரபல்யம் அடைந்திருந்தன. இரத்தினபுரி, நுவரெலியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு போன்ற இடங்களிலேயே 'எச்' நெல்லினங்கள் பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன. பாரம்பரிய விதை நெல் வகைகள், 'எச்' விதை நெல்லினங்களைவிட, முழு அளவில் சாதகமில்லாத மண் வளத்துக்கு நின்று பிடிக்கக் கூடியவை ஆகும். அதேபோன்று வெள்ளத்தினால் அல்லது தண்ணீர் பற்றுக்குறையினால் அல்லது வறட்சியினால் எமது நாட்டின் விதை நெல்வகைகள் பாதிக்கப்படுவது ('எச்' நெல்லினங்களோடு ஒப்பிடுகையில்) மிகவும் குறைவு. குறைந்த தண்ணீர் வசதியுடன் கூடிய வறண்ட பிரதேசங்களிலேயே எமது நாட்டு நெல்லினங்கள் பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன. காலி, களுத்துறை போன்ற மாவட்டங்களில் விதைக்கப்படும் விதை நெல் வகைகளில் சுமார் 75 சத வீதமானவை எமது நாட்டு நெல்லினங்களே ஆகும். அதே வேளை கம்பஹாவில் நாட்டின நெல் வகைகள் 40 சதவீதமே பயிர் செய்யப்படுகின்றன. சிறிய

அதிக விளைச்சல் நெல்லினங்களின் உற்பத்திச் சாதனை-1
(ஏக்கர் ஒன்றுக்குக் கிடைத்த புசல்கள்)

| இனம் | சராசரி விளைச்சல் | எச்-4 இனத்தை விடக் கூடிய அளவு |
|---|---|---|
| ஐ ஆர்—8 | 93.3 | 24.5 |
| பி ஜி11—11 | 106.2 | 28.7 |
| எல் டி—66 | 122.0 | 12.9 |
| எச்—4 | 117.8 | — |

1-- 1969ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது நாற்று நடப்பட்டதன் மூலம் கிடைத்த விளைச்சல்கள்

ஆதாரம்: விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் உள்ள நெற்காணிகளில் 80 சத வீதத்துக்கு மேற்பட்டவற்றிலும், மழை நீரை நம்பியுள்ள நெற்காணிகளில் சுமார் 50 சத வீதமானவற்றிலும் அபிவிருத்தி செய்யப்பட்ட பழைய இனங்களும், அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய இனங்களுமே பயிரிடப்பட்டன.

பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் அடங்கும் நெற்காணிகளில் அநேகமாக 100 சத வீதமானவற்றிலும், அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நெல்லினங்கள் வெகுவாகப் பரவியுள்ளன. எனினும், பத்தலகலவில் உள்ள மத்திய நெல் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இரு ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, இப்போது கிடைக்கக்கூடிய சகல விதமான நெல்லினங்களை மேற்கொண்டும் ஆராய்ச்சி செய்து, இதுவரை கண்டறியப்படாமல் இருக்கும் தன்மைகளையும், பயன்பாடுகளையும் கண்டுபிடிக்க வேண்டும். பாரிய நீர்ப்பாசனத் திட்டக் காணிகளில் வருடம் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 200 புசல்களை உற்பத்தி செய்யலாம் என அவர்கள் மதிப்பீடு செய்துள்ளார்கள்.

இந்த நெல்லினங்கள் தரக்கூடிய விளைச்சலைக் கட்டுப்படுத்துவது உரப் பாவனை என்றே எண்ணத் தோன்றுகிறது. பயிர்ப் போஷாக்கை (நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம் ஆகியவை) அதிகரித்து விளைச்சலை கூட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளின்போது அவற்றின் பாவனை 1958ம் ஆண்டிலிருந்து 1977 வரை ஏக்கர் ஒன்றுக்கு 13.5 இருத்தல்களில் இருந்து 37·3 இருத்தல்களாக அதிகரித்தது. அதற்கேற்றவாறு ஏக்கர் ஒன்றில் கிடைக்கும் சராசரி விளைச்சலும் 34.4 புசல்களிலிருந்து 47 புசல்களாக உயர்ந்தது. ஆனால், இலங்கையைப் போன்றே அபிவிருத்தி செய்யப்பட்ட நெல்லினங்களைப் புதிதாக அறிமுகப்படுத்திப் பாவிக்கத் தொடங்கிய தென் கொரியாவில், அதே காலப் பகுதியில் உரப்பாவனை ஏக்கர் ஒன்றுக்கு 83.6 இருத்தல்களிலிருந்து 232.3 இருத்தல்களாக உயர்ந்து, விளைச்சல் ஏக்கர் ஒன்றுக்கு 55.6 புசல்களிலிருந்து 122.7 புசல்களாக அதிகரித்தது. எமது நாட்டைப் பொறுத்த மட்டில், தேசிய ரீதியிலான சராசரி உரப் பாவனையைவிட, பாரிய நீர்ப்பாசனத் திட்டக் காணிகளில் அதிகமான உரம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எனினும், அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நெல்லினங்களின் சக்தி முழுவதையும் பெறுவதற்கு எமது உரப்பாவனை அளவு போதுமானதல்ல. போதிய அளவில், புதிய அளவில் இந்தக் காணிகளுக்கு உரம் இடப்பட்டால் அவை வருடமொன்றுக்கு 6.5 கோடி புசல் நெல் விளைச்சலைத் தரக்கூடியவையாக இருக்கும்.

## பூச்சிகளும் நோயும்

அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நெல் இனங்கள், பிரதான பயிர்நோய்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு வேண்டிய எதிர்ப்புச் சக்தி கொண்டவையாக விளங்குகின்றன. எனினும், அதிக அளவில் நைதரசன் பொருள்கள் அடங்கிய உரவகைகளைப் பாவிப்பதனால் அவற்றின் எதிர்ப்புச் சக்தி குறைந்துவிட ஏதுவாகிறது. 'புல்லுண்ணி' 'அறக்கொட்டியான்' ஆகிய வைரஸ் தொற்று நோய்கள் மிகவும் ஆபத்தானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதிகள் மேன்மேலும் அதிகரிக்கப்பட்டு வருவதாலும், தொடர்ச்சியான நெற்செய்கைப் போகங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாலும், நோய்கள் அதிக அளவில் ஏற்படும் வாய்ப்பு உண்டு. மேலும், புல்லுண்ணி வைரஸ், கபிலநிறத் தத்துக்கிளி ஆகியவற்றின் தாக்கம் அண்மைக்காலங்களில் ஆபத்தான நோய்களாக உருவெடுத்துள்ளன. அதனால் இப்போது நோய் ஆய்வு வேலைகள் சிறிய அளவில் நடைபெற்று வருகின்றன.

எனினும், கிருமிநாசனிகள், பூச்சிக் கொல்லிகளை அளவுக்கு அதிகமாகப் பாவிப்பதால், நெற் பயிருக்குக் கெடுதல் விளைவிக்கும் பூச்சிகள், கிருமிகளை ஒழிக்கும் அதே வேளையில், நெற் பயிருக்குத் தேவையான பூச்சிகள், கிருமிகளையும் ஒழிக்க வேண்டியதாகிறது. பாவிக்கப்படும் கிருமிநாசனிகள், பூச்சிக் கொல்லிகளின் அளவைப் பொறுத்து நெல் வளர்ச்சிக்கும், விளைச்சலுக்கும் தேவையான உயிரினச் சமநிலையில் ஏற்றத் தாழ்வு உண்டாகிறது. அதன் விளைவாக விளைச்சலில் வீழ்ச்சி ஏற்படுகிறது. அதே வேளை, எமது பிரதான உணவான அரிசியில், கிருமிநாசனிகள், பூச்சிக்கொல்லிகள் மூலம் மனித உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் தன்மையுடைய வஸ்துக்கள் சேர்ந்துவிடும் ஆபத்தும் உண்டு. அது மட்டுமன்றி, எமது சூழல் சுற்றாடலும் அசுத்தமடைய ஏதுவாகிறது. எனவே, கிருமிநாசனிகள், பூச்சிக்கொல்லிகளைப் பாவித்து நெற்பயிர்களை நோய்களில் இருந்து காப்பாற்றுவதை விட நோய்களை எதிர்கொள்ளக்கூடிய சக்தி படைத்த புதிய நெல்லினங்களைக் கண்டுபிடிப்பது அவசியமாகும்.

இரசாயன உர வகைகளின் விலைகள் இப்போது உயர்ந்து வருகின்றன; அதனால் உரத்துக்கு ஆகும் செலவினங்கள் அதிகரிக்கின்றன. உர வகைகளைப் பாவிப்பதால் பயிருக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடிய பூச்சிகள் உருவாகும் சாத்தியம் அதிகரிக்கிறது. உரத்தை அதிகம் பாவிப்பதனால் மண் வளமும் குறிப்பிட்ட அளவுக்குப் பாதிப்படைகிறது. இவற்றை மொத்தத்தில் கருத்தில் கொள்ளும் போது, குறைந்த உரப்பாவனை தேவைப்படும் புதிய நெல்லினங்களைக் கண்டுபிடிப்பது அவசியமாகிறது. மேலும், குழைகள், சாணம், வைக்கோல், ஓலை வகைகள் போன்ற பாரம்பரிய அசேதன உரவகைகளை மீண்டும் பெருமளவில் பாவிப்பதன் மூலமும் இரசாயன உரவகைகளின் பாவனையைக் குறைக்க முடியும். அசேதன உர வகைகளை பாவிப்பதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் இரசாயன உரப்பாவனையை குறைக்க முடியும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

எமது நாட்டில் பல்லாண்டு காலமாக நெற்சாகுபடி நடைபெற்று வருகிறது. அதனால் பாரம்பரிய நெல்லினங்களை மாற்றுதல், சாகுபடி சம்பந்தமான கலாசார நடைமுறைகளை மாற்றி அமைத்தல் என்பனவற்றில் சில கஷ்டங்கள் இருக்கவே செய்கின்றன. எனினும் மறுபுறத்தில், புதிய நெல்லினங்களையும், நவீன கலாசார நடைமுறைகளையும் புதிய பிரதேசங்களில் அறிமுகப்படுத்துவது இலகுவானது என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலாவணி விகிதமும் ரூபா பெறுமதியும்

ச. நா. நிதியின் பணமான எஸ். டீ. ஆரின் பெறுமானத்தின் பிரகாரம், கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமானம் 50 சதவீதத்திற்கும் மேலாக வீழ்ச்சி அடைந்துள்ளது. எவ்வாறாயினும், தனி நாணயங்களின் வடிவில் நோக்குமிடத்து ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி பெருமளவு தேய்வடையவில்லை. பிரித்தானியப் பவுணின் வடிவில் அதன் பெறுமானம் 33 சதவீதமும், ஜப்பானிய யென்னின் வடிவில் 26 சதவீதமும் வீழ்ச்சி அடைந்தபோதிலும், ஐ. அ. டொலர், ஜேர்மன் மார்க் என்பவற்றைப் பொறுத்தவரையிலும் வீழ்ச்சி குறைவாகவேயிருந்தது. ஒரு நிலைவான நாணய மதிப்பிறக்கத்தைவிடவும், ரூபாயின் படிப்படியான பெறுமானத் தேய்வு நாட்டில் மோசமடைந்து வருகின்ற வர்த்தக, சென்மதி நிலைமையை சரிக்கட்ட உதவும் என நம்பப்படுகின்றது. ஐ. அ. டொலர் ரூபா 20ஐயும், பிரித்தானியப் பவுண் ரூபா 50ஐயும் நெருங்குகின்ற வரையிலும் இத் தேய்வு தொடரும் என்ற ஊகம் நிலவுகின்றது. டொலரைப் பொறுத்த வரையிலும், ரூபா அதன் இலக்கினை நோக்கி நெருங்கி அசைந்துள்ளது; ஆனல், ஸ்டர்லிங் பவுணைப் பொறுத்த வரையிலும் குறிப்பிடத்தக்க ஒரு காலத்துக்கு ரூபா 40/-ஐ விடவும் சிறிது கூடுதலாக உள்ளது. இதற்கிடையில் எதிர்பார்க்கப்பட்ட சரிக்கட்டல் நடவடிக்கை இடம் பெற்றதாகத் தென்படாத அதே வேளை, இறக்குமதிகளின் அதிகரித்து வருகின்ற பெறுமானம் (ரூபா வடிவில்) இறக்குமதிக்குரிய உந்துதலை மட்டுப்படுத்தவில்லை. அட்டவணையில் இருப்பது போன்று, 1980 ஜூனில் இடம் பெற்ற குறிப்பிடத்தக்க ஒரு மாற்றத்துடன், 1980 ஜனவரி முதல் 1981 வரையிலும் உள்ள 12 மாதங்களுக்குள் ரூபாவின் பெறுமானத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

முன்னெருபோதுமில்லாத உள்ளூர் வீக்கம், அதிகரித்துச் செல்கின்ற இறக்குமதிச் செலவு, விரிவடைந்து வருகின்ற வெளிநாட்டு வர்த்தக இடைவெளி போன்ற காரணிகள் ரூபா பெறுமானத் தேய்வின் பின்னணியில் உள்ளன. உள்ளூர் வீக்கத்தைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பின் மாத்திரமே நாணய மதிப்பிறக்கத்தின் மூலம் அடைய எதிர்பார்க்கின்ற (இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம்) விளைவினைப் பெறலாம் என்பது பிரபல்யம்வாய்ந்த சர்வதேச பொருளாதாரத் தத்துவமாகும். வீக்கம், ஏற்றுமதிச் செலவினை அதிகரித்து, ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டு உற்பத்தியை விடவும் இறக்குமதியைக் கவர்ச்சி மிக்கதாக ஆக்குவதனுல் நாணய மதிப்பிறக்கத்தின் தாக்கத்தினை இல்லாமற் செய்யலாம். வீக்க விகிதாசார மதிப்பீடு 25—50 சதவீதத்திற் கிடையில் வேறுபட்டு அமைந்துள்ளது. இலங்கை வர்த்தகம் செய்கின்ற நாடுகளில் நிலவுவதனை விடவும் கூடுதலான வீக்கம் இங்கு நிலவுவது தெளிவாகும். ஒரு நாட்டின் வீக்க நிலைமை, அதன் வர்த்தகப் பங்காளர்களை விடவும் வேகமாக இருப்பின், இறக்குமதி தூண்டப்படுவதுடன், ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையும் வீழ்ச்சி அடையும். இத்தகைய ஒரு சூழ்நிலையில், இழந்த நிலையை மீட்டுவதற்கு மேலும் மதிப்பிறக்கம்/பெறுமானத் தேய்வு தேவைப்படுகின்றது. வீக்கம் குறைவடையாது தொடருமாயின், ஒரு பெறுமானத் தேய்வு விஷச்சுழல் தொடரலாம். நாணயமாற்று விகிதாசாரத் தேய்வு முடிவுற்ற வகையில் மென்மேலும் வீக்கத்துக்கும், பெறுமானத் தேய்வுக்கும் இட்டுச் செல்லலாம். இலங்கையில் நிலவுவதனைப் போன்ற ஒரு திறந்த பொருளாதாரத்தில், இறக்குமதிக்கான விருப்பு கூடுதலாக இருப்பதால், குறிப்பிடத்தக்களவு உள்நாட்டு வீக்கத் தாக்கம் கூடிய இறக்குமதியின் ஊடாக வெளிச் செல்லலாம்.

எவ்வாறாயினும், 1980ம் ஆண்டு இறக்குமதியில் அதிகரித்த செலவினை உடைய பெற்ரோலியப் பொருட்களும், உணவு இறக்குமதிகளும் முக்கியம் வாய்ந்த ஒரு காரணியாக விளங்குகின்றன; 1980ல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி பெறுமான அடிப்படையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்திருந்த போதிலும், ரூபா 3360 கோடியான நாட்டின் இறக்குமதிச் செலவில் இவ்விரு பொருட்களும் கிட்டத்தட்ட 40 சதவீதமாக இருந்தன. இப்போக்கு 1981ம் ஆண்டிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது; இவ்வாண்டில் பெற்ரோலியப் பொருட்கள், உணவுப் பண்டங்கள் என்பன நாட்டின் இறக்குமதியில் 50 சதவீதத்திற்கும் கூடுதலாகவிருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1981ற்கான இறக்குமதிச் செலவில் மூன்றிலொரு பகுதியை மாத்திரமே ஏற்றுமதி வருமானத்தால் நிதிப்படுத்தலாம் என தற்போது நிலவுகின்ற போக்குகள் சுட்டிக்காட்டுகின்றன. அதிகரித்துச் செல்கின்ற இறக்குமதிச் செலவுடன், ஏற்றுமதி வருமானத்தை ஒப்பிடுமிடத்து (குறிப்பாக பிரதான ஏற்றுமதிகள்) அது நிலையானதாகவே இருந்து வந்துள்ளது. ஏற்றுமதித் துறையில் ஒரு பாரிய உடைவு ஒரு தொலைநோக்காகவே இருந்து வந்துள்ளது. ஏற்றுமதிகள் மூலம் இறக்குமதிகளை நிதிப்படுத்தல் சென்ற வருடங்களில் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. 1978ல் ஏற்றுமதி வருமானம், இறக்குமதிச் செலவில் 90 சதவீதத்தை நிதிப்படுத்தியது; 1979ல் இது 70 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 1978ல் ரூபா 1500 கோடியாக இருந்த இறக்குமதிச் செலவு 1980 இல் ரூபா 3400 கோடியாக அதிகரித்திருப்பதனால் 1980ல் ஏற்றுமதி வருமானத்தால் இதன் அரைவாசியை மாத்திரமே நிதிப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டவணை—1

### இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி
### ரூபா 100ன் பெறுமதி வெளிநாட்டு நாணயங்களில்

| | ஐ. அ. டொலர் | பிரித்தானிய பவுண் | ஜேர்மன் மார்க் | ஜப். யென் | இந்திய ரூபா | எஸ்.டி.ஆர்.* |
|---|---|---|---|---|---|---|
| 1977 நவம்பர் 16 | 6.25 | 3.44 | 14.08 | 1527 | 54.05 | 9.60 |
| 1978 ஜனவரி 31 | 6.51 | 3.34 | 13.79 | 1536 | 52 63 | 5.11 |
| 1979 ஜனவரி 31 | 6.44 | 3.23 | 12 03 | 1299 | 53.19 | 4.97 |
| 1980 ஜனவரி 31 | 6.44 | 2 85 | 11.16 | 1538 | 51.55 | 4.50** |
| 1981 ஜனவரி 31 | 5.53 | 2.31 | 11.63 | 1131 | 44.94 | 53.01** |
| 1977 நவம்பரிலிருந்து— 1981 ஜனவரி வரையில் ரூபாவின் தேய்வு வீதம் | 11.52 | 32.8 | 17.4 | 26.4 | 16.8 | |

**1981, பெப். 17ந் திகதியில்

*சர்வதேச நாணயப் பெறுமானங்களில் அடிக்கடி நிகழ்ந்த தளம்பல்கள் காரணமாக சர்வதேச நாணய நிதி எஸ். டீ. ஆர். ஐ. (விசேஷ எடுப்பனவு உரிமை) அறிமுகஞ் செய்தது. சார்பு ரீதியாக தளம்பலின்றி இருக்கும் ஒரு சர்வதேச நாணய அலகுப் பெறுமானம் என இது கருதப்பட்டது. உலகின் பிரதான 5 நாணயங்களின் அடிப்படையிலேயே ச. நா. நி. எஸ். டீ. ஆரின் பெறுமதியை கணிப்பீடு செய்தது. ஜனவரி—மே 1977ல் எஸ். டீ. ஆரின் சராசரிப் பெறுமானம் ரூ. 9.27; ஜன—மே 1978ல் ரூ. 19.02; டிசம்பர் 1979ல் ரூ. 20.35; டிசம்பர் 1980ல் ரூ. 22.88.

வர்த்தக இடைவெளியை நிதிப்படுத்துகின்ற ஒரு பிரதான மூலமாக வெளிநாட்டு உதவியும், கடன்களும் தொடர்ந்து இருந்து வருகின்றன. குறிப்பாக, இன்று உலகப் பொருளாதாரம் கடந்து செல்கின்ற உலகளாவிய பின்வாங்கலின் பின்னணியில், வெளிநாட்டுக் கடனின் அசைவு அதி உயர் நிலையை அடைந்துள்ளது. இத்தகைய ஒரு சூழ்நிலையில், 1980ற் போன்று எதிர்காலத்திலும் இறக்குமதிச் செலவினை அதிகரித்துச் செல்லவிட முடியாது. எதிர்காலத்தில் நாடு எப்பொருட்களை, எந்தளவு இறக்குமதி செய்ய வேண்டும் எனத் தெரிவு அடிப்படையில் செயல்படுவதற்குரிய அறிகுறிகள் தெளிவாகத் தென்படுகின்றன. இறக்குமதிப் பெறுமானத்தை ஒழுங்குபடுத்துவதில் பாதிப்பினை ஏற்படுத்தாத நாணய மாற்றுத் தேய்வுடன், உள்ளூர் உற்பத்திக்கு சிறந்த ஊக்குவிப்புக்களை அளிக்கும் வகையில் இறக்குமதி அமைப்பிற்குள் ஒரு ஒழுங்குப்பாட்டு அம்சத்தினை அறிமுகப்படுத்துவதற்கான அமுக்கம் இருந்து வருகின்றது.

ஒரு 'திறந்த பொருளாதாரக்' கொள்கை நிலவுகின்ற சூழ்நிலைக்குள் கட்டுப்பாடுகளை அறிமுகம் செய்தல் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கும் போற் தோன்றியது. குறிப்பாக, குறைந்த ரூபாப் பெறுமானம், உலகளாவிய வீக்கம் என்பவற்றிற்கிடையில் 1980ல் இறக்குமதிப் பெறுமானம் முன்னெரு போதுமில்லாத வகையில் ரூபா 3360 கோடியாக அதிகரித்தமை தவிர்க்கவியலாததாகும். இதற்கிடையில், அதிகரித்த வீக்க அமுக்கத்துடனும், ஏற்றுமதி உற்பத்தியை முரணான வகையில் தாக்கிய தடைகள் என்பவற்றுடன் ஏற்றுமதிப் பெறுமானம் எத்தகைய அதிகரிப்பினையும் காட்டாமையால், இறக்குமதிச் செலவினைப் போன்றே வர்த்தக நிலுவையும் முன்னெரு போதுமில்லாத நிலையை அடைந்தது.

இவ்விறக்குமதிகளையும், அதிகரித்துச் செல்கின்ற வர்த்தக இடைவெளியையும் நிதிப்படுத்த அதிகளவு உதவி அவசியமாகும்; 1979 டிசம்பர் வரையிலும் அதிகரித்த போக்கினைக் காட்டி, 1980 இல் வீழ்ச்சி அடையத் துவங்கிய நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் இதனைப் பிரதிபலிக்கின்றன. 1980ன் 12 மாதங்களிலும் நாட்டின் வெளிநாட்டுக் கடன் 40.6 சதவீதத்தை அடைந்த அதேவேளை, வெளிநாட்டுச் சொத்துக்கள் 29.9 சதவீத வீழ்ச்சியையும், வர்த்தக நிலுவை 123.4 சதவீத அதிகரிப்பினையும் காட்டியது.

நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்து வருவதாகவும், இறக்குமதிகளுக்கு எம்மிடம் 2½ மாத ஒதுக்கு மாத்திரமே இருப்பதாகவும் நிதியமைச்சர் 1980 டிசம்பர் 19 அன்று பாராளுமன்றத்தில் அச்சம் தெரிவித்தார். 1980 டிசம்பரில் இது 675.6 கோடியாக இருந்தது. இலங்கை ரூபாவின் மெய்ப் பெறுமதியைக் கவனத்திலெடுப்பின், எஸ். டி. ஆர். வடிவில் இதனை அரைவாசிக்கும் குறைவானதாகக் கருதுதல் வேண்டும். இறுக்கமான நிதிக்கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படாவிடில், நிலைமை மோசமடையலாம் என்ற நிதி அமைச்சரின் வேண்டுகோளை மோசமடைந்து வருகின்ற ஒதுக்கின் பின்னணியிலேயே அவதானித்தல் வேண்டும்.

## அட்டவணை—2

### வெளிநாட்டு வர்த்தகத் தொகுப்பு
### (ரூபா பத்து லட்சங்களில்)

| | ஏற்றுமதி | இறக்குமதி | வர்த்தக நிலுவை | மொத்த இறக்குமதியில் ஏற்றுமதியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1978 | 13,193 | 15 100 | 1 907 | 52 |
| 1979 | 15,286 | 22,560 | 7 274 | 87 |
| 1980 | 17 388 | 33,637 | 16,249 | 68 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க செலவில் வெட்டு

கடந்த மூன்று வருடகாலப் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டின் பொருளாதாரத்தைத் தெளிவாகவே மிகை உஷ்ணப் படுத்தி உள்ளன. முன்னொரு போதும் இல்லாத வீக்கமும், வலு நிரம்பல் போன்ற பிரதான துறைகளில் திக்குமுக்காடல் நிலையின் உருவாக்கமும் இதன் விளைவுகளாகும். 200—300 சதவீதமான விலைப் பாய்ச்சல் எல்லா அரசாங்கத் திட்டங்களதும் பிரதான பண்பாக மாறியிருப்பதுடன், எதிர்பாராத விலைப் பாய்ச்சலைச் சரிக்கட்டும் வகையில் செலவு மதிப்பீடுகளை அடிக்கடி மாற்ற வேண்டியும் உள்ளது. 1977 ல் ரூபா 1000 கோடிக்குக் குறைவாகவிருந்த அரசாங்க செலவினம், 1980 ல் ரூபா 2800 கோடியாகவும் 1981 ல் ரூபா 3000 கோடியாகவும் துரிதமாக அதிகரித்துள்ளது; மகாவலி போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் செலவினையும் அதிகரித்துச் செல்கின்ற செலவுகளையும் இது பிரதிபலிக்கின்றது. இச்செலவினங்களின் பொருட்டு, கிடைக்கப்பெறுகின்ற நிதி மூலங்களை — வரி, வெளிநாட்டு நிதி, வீக்கமற்ற மூலங்களில் இருந்து பெறுகின்ற உள்ளூர்க் கடன் — அவற்றின் உயர் எல்லைக்கே விரிவாக்க வேண்டி உள்ளது. இவை வற்றியதன் பின்னர், தவிர்க்க இயலாத வகையில் பாரிய வங்கிக் கடன்களை நாட வேண்டி ஏற்பட்டது. விரிவடைந்து செல்கின்ற இவ் வரவுசெலவுத் திட்ட இடைவெளியைச் சமாளிப்பதற்குத் தேவையான குறுங்காலக் கடன்களைத் திரட்டும் வகையில் ரூபா 300 கோடி ஆகவிருந்த திறைசேரி உண்டியல் விநியோக எல்லையை ஒரு வருட காலகட்டத்தில் ரூபா 1000 கோடியாக அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. 1979 ல் 29 சதவீதத்தினுல் அதிகரித்த பண நிரம்பல், 1980 ல் மேலும் 30 சதவீதத்தினுல் தொடர்ந்து அதிகரித்தது.

மிகப் பிரதானமான நிவாரண நடவடிக்கையாக, பொதுச் செலவினங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தின் பின்னணி இதுவாகும். வரவு செலவுத் திட்டப் பற்ருக்குறையைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாக அரசாங்கம் 1981 ம் ஆண்டுக்கான (1980 நவம்பரில் அறிவித்த) வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் முதலாவது வெட்டினைச் சுமத்தியது. பெருமளவு செலவுசெய்கின்ற அமைச்சுக்களின் மூலதனச் செலவு 272.2 கோடி ரூபாவால் (அல்லது 22 சதவீதம்) குறைக்கப்பட்டது. ஆனுல், ஒரு நிவாரண நடவடிக்கை என்ற வகையில் இது போதிய ஒரு வெட்டு இல்லை என்பது நிரூபணமாகியது. ஆகையால், மார்ச் 11-ம் தேதியன்று, நாட்டின் பொருளாதாரத்தை மீளாய்வு செய்த அரசாங்கம், சென்ற வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிதியில் மேலும் வெட்டினைச் சுமத்தத் தீர்மானித்தது. பிரதான தீர்மானங்கள் பின்ருமாறு:

— ஏற்கனவே மகாவலித் திட்டத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 450 கோடி செலவினத்தை, ரூபா 375 கோடிக்குள் வைத்திருத்தல்; இது 17 சதவீத வெட்டாகும். (இவ் வெட்டு ரத்துச் செய்யப்படும் எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது.)

— சென்ற வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட 268 கோடி ரூபாவை ரூபா 218 கோடிக்குள் வைத்திருத்தல்; இது 19 சதவீத வெட்டாகும்.

— எல்லா அமைச்சுக்களும் அங்கீகரிக்கப்பட்ட நிதியில், 90 சதவீதத்தைச் செலவளித்தல்; இது 10 சத வீத வெட்டாகும்.

— மின்சாரத் தட்டுப்பாட்டினைக் கருத்திற்கொண்டு குளிரூட்டி, மின்சார சாதனங்கள், தூக்கி போன்ற மின்சார வலுவை நுகருகின்ற பொருட்கள் மீதான மூலதனச் செலவினைக் குறைத்தல். (வலுப் பற்ருக்குறையைக் கருத்திற் கொண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை, புதிய உயர் மாடிக் கட்டடங்களை நிர்மாணிக்க அனுமதி வழங்காது.)

— ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை அமைச்சுக்கள் பூர்த்தி செய்யும்; ஆனுல், 1982, 1983ம் ஆண்டுகளுக்கு எத்தகைய புதிய முதலீட்டுத் திட்டங்களையும் ஆரம்பிக்காது. பொதுக் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரையில்கூட, அவை தமது சொந்த நிதியினுல் ஆரம்பிக்கின்ற மூலதனத் திட்டங்களுக்கும் அரசாங்க உயர்நிலைக் குழுவொன்றின் முன் அங்கீகாரம் தேவை.

— (அ) செலவு செய்த மூலதனத்தில் இருந்து விரைவான இலாபம். (ஆ) தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவித்தல் என்பன பொதுச் செலவினைத் தீர்மானிக்கின்ற முன்னுரிமைகளுக்கு உரிய இரு வழிகாட்டுதல் களாகும். அடுத்து வருகின்ற சில வருடங்களில், மூலதனச் செறிவு மிக்க, நீண்ட காலத் திட்டங்களுக்குக் குறைந்த முன்னுரிமை வழங்குதல் என்பது இதன் கருத்தாகும்.

இத்தீர்மானங்களைத் தொடர்ந்து அரசாங்க செலவினத்தில் 'நிதி ஒழுக்காறினைப்' பேணுவதற்குரிய தேவை, விரயத்தைத் தவிர்த்து, உரிய நிதி முகாமையைக் கைக்கொள்வதற்குரிய தேவை என்பன தொடர்பாக பிரதான அரசாங்கப் பேச்சாளர்கள் கருத்து வெளியிடலாயினர். அரசாங்க செலவினங்களில் அதிக விவரமும் மிகையும் உண்டு என்பதும், குறிப்பிடத்தக்க அளவு சிக்கனத்தைப் பேணுவதற்கு இடம் உண்டு என்பதும் தெளிவாகும். முதன்மையான திட்டங்களுக்குத் தொடர்ந்தும் நிதி அளிக்கப்பட்ட போதிலும் (மகாவலித் திட்டத்தின்மீது விதிக்கப்பட்ட ரூபா 75 கோடி வெட்டு மீட்சிக்கப்பட்டுள்ளது). பிரதான திட்டங்களுடன் இணைந்த துணைத் திட்டங்கள் சிறிய திட்டங்கள் என்பனமீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்; குறிப்பாக, பல்வேறு வகையிலான கட்டட நிர்மாணங்களைக் குறிப்பிடலாம்.

(33ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெண் கல்வியும் வேலை வாய்ப்பும்

## பிரச்சினையின் பரிமாணங்கள்

—சுவர்ணு ஜயவீர

இலங்கையில் கல்வித்துறையில் பெண்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்படுவதில்லை எனவும், கல்விக் கொள்கை, அமுலாக்கம் என்பவற்றில் சம வாய்ப்பு மையக் கொள்கையாக உள்ளது எனவும் சிறிது நியாயத்துடன் கூறப்படுகின்றது. வீட்டை மையமாகக் கொண்ட மனைவிமார்களை சமூக வடிவாகக் கொண்டுள்ள ஒரு கலாசாரப் பின்னணியில் நோக்குமிடத்து, தொழில் துறையைப் பொறுத்தவரையிலும் இத்தகைய ஒரு கூற்று நீடித்து நிலவக்கூடியதல்ல.

மூன்று தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த கல்விக் கொள்கைகள், பாடசாலை அனுமதியில் சம பங்குக்கு வழிவகுத்துள்ளன; 1978ல் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுள் 47·3 சதவீதமும், உயர்தரப் பாடசாலை மாணவர்களுள் 50.5சதவீதமும் பெண்களாகவிருந்தனர். 1970ல் 44·5 சதவீதமாகவிருந்த பல்கலைக்கழகப் பெண்களின் விகிதாசாரம், 1973ல் 40.6 சதவீதமாக வீழ்ச்சி அடைந்த போதிலும், இதன் பின்னர் இச் சதவீதம் நிலையாக இருந்து வந்துள்ளது; ஆண்களை முதன்மையாகக் கொண்ட கட்டுபெத்தை தொழில் நுட்பக் கல்லூரி பல்கலைக்கழக அமைப்பிற்குள் வந்ததன் விளைவாகவே இவ் வீழ்ச்சி ஏற்பட்டது எனலாம். எவ்வாறாயினும், கலைத்துறை, வைத்தியம், பல் வைத்தியம், மிருக வைத்தியம் ஆகிய பாட நெறிகளில் பெண்களின் உள்நுழைவு 40 சதவீதத்துக்கும் மேலாகவே உள்ளது. ஆசியாவிலும், ஏனைய பாகங்களிலும் உள்ள வளர்முக சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெண் கல்வி விகிதாசாரம் (1971 சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் 70.9%) ஒப்பீட்டு ரீதியில் உயர்வாக உள்ளது.

மேலும், எழுபதுக்களைப் பின்னோக்கிப் பார்ப்பதற்கும், பெண்களின் வாழ்க்கைத் தரத்தையும் தவிர்க்கவியலாத வகையில் அவர்களது குடும்பங்களையும் — மூன்ற வகையில் பாதிக்கின்ற கல்வி வாய்ப்பின் இடைவெளிகளை அடையாளம் காணவும், தொழில் அமைப்பில் பெண்களின் நிலைமையை நோக்கவும் இது ஒரு வாய்ப்பாகத் தென்படுகின்றது.

சம கல்வி வாய்ப்பு மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது; நுழைவுரிமை, உள்நுழைதல், தொடர்ந்து இருத்தல். கல்வி வாய்ப்பு பற்றிய உயர் எண்ணத்தில் நாம் மூழ்கியுள்ள அதேவேளையில் பொருளாதார அம்சங்களின் விளைவாக கல்வி அளிப்பில் ஏற்படுகின்ற சமமின்மை இரு பாலாரதும் கல்வி வாய்ப்பினைப் பாதிக்கின்றது; இலங்கையின் கலாசாரப் பின்னணியில் இது பெண்களைப் பெரிதும் பாதிக்கின்றது. ஒரு விரிவான பாடசாலை அமைப்பு, கல்வியை எல்லா சமூக பொருளாதாரக் குழுக்களதும் காலடிக்குக் கொண்டு வந்துள்ளது. ஆனால், மொத்தம் 27.2 சதவீதமான பாடசாலைகளும், அனுராதபுரம், மட்டக்களப்பு, வவுனியா போன்ற மாவட்டங்களில் உள்ள 40 சதவீதத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளும் அலுவலக வார்த்தைப் பிரயோகத்தில் சிறிய பாடசாலைகள் எனக் கணிக்கப்பட்டிருப்பதுடன், இவை ஒவ்வொன்றும் 100க்கு குறைந்த மாணவர்களையும், இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களையும் கொண்டுள்ளன. இப் பாடசாலைகளில் மாணவர்கள் பெறுகின்ற குறைவான கல்வி, இவை வெகு தொலைவில் கிராமங்களில் அமைந்திருப்பதனால் மேலும் மட்டுப்படுத்தப்படுகின்றது; போதிய போக்குவரத்து வசதிகள் இன்மை இவர்கள் உயர்தரக் கல்வியை அடையாதவாறு தடுக்கின்றது. இது இப் பின்தங்கிய சமூகங்களில் உள்ள பெண்களைப் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சினையாகும்.

நுழைவுரிமையின் இரண்டாவது பிரச்சினை, கல்விப்படியின் உயர் கல்வி வாய்ப்பினைப் பாதிக்கின்றது. உயர்தரப் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி வசதிகளை அளிப்பதில் உள்ள சமமின்மை, பிரதேசங்களுக்கும், தனிப்பட்ட பாடசாலைகளுக்குமிடையில் மாத்திரமன்றி, 11ம், 12ம் தரங்களுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் பால் அடிப்படையில் சமமின்மையையும் பிரதிபலிக்கின்றது. கலைத்துறை, விஞ்ஞானத் துறைப் பாடநெறிகளைக் கற்கின்ற பல்கலைக்கழக மாணவர்களின் சமூக உள்ளடக்கத்திலிருந்து இப் பிரதிபலிப்பின் தாக்கத்தினைக் காணலாம். 1976ல் கலைத்துறைப் பாட நெறிகளுக்கு அனுமதி பெற்றவர்களில் 42·4 சதவீத ஆண்களும், 34.9 சதவீத பெண்களும் கிராமப்புறக் குடும்பங்களைச் சேர்ந்தோராகவும், 57·5 சதவீத ஆண்களும், 47.9 சதவீத பெண்களும் ரூபா 200/-க்குக் குறைந்த மாதாந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்தோராகவும் இருந்தனர்; 11.2 சதவீத ஆண்களும், 17·1 சதவீத பெண்களும் மாத்திரமே தொழில்சார் குடும்பங்களைச் சேர்ந்தோராகவிருந்தனர். விஞ்ஞானத்துறைப் பாட நெறிகளுக்கு அனுமதிக்கப்பட்டவர்களுள் 52·9 சதவீத ஆண்களும், 65.5 சதவீத பெண்களும் தொழில்சார் குடும்பங்களைச் சேர்ந்தோராக இருந்தனர்; 20.2 சதவீத ஆண்களும், 5.8 சதவீத பெண்களும் மாத்திரமே கிராமீய விவசாய சமூகங்களைச் சேர்ந்தோராகவும், 23.7 சதவீதமான ஆண்களும் 7·2 சதவீதமான பெண்களும் ரூபா 200க்குக் குறைந்த மாதாந்த வருமானம் உழைக்கின்ற குடும்பங்களைச் சேர்ந்தோராகவிருந்தனர். ஆண்களை விடவும், பெண்களின் கல்வி வாய்ப்புக்களை சமூக—பொருளாதாரக் காரணிகள் பாதிப்பது போற்றோன்றுகின்றது. குறைந்த வசதி படைத்த குடும்பங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான பெண்கள், வேலையின்மை அல்லது குறைந்த வருமானமும், குறைந்த மதிப்பும் உள்ள தொழில்களுக்கு இட்டுச் சென்று, உயர் சமூக—பொருளாதார அசைவினை விடவும், அதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை—1

### 1963லும் 1971லும் பால் வயதுத் தொகுதிகளின் அடிப்படையில் கல்வி விண்ணப்ப விகிதாசாரம்

| வயதுத் தொகுதி | 1963 ஆண் | பெண் | மொத்தம் | 1971 ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 5—11 | 77.6 | 74.6 | 76.2 | 66.8 | 64.7 | 65.8 |
| 5—14 | 76.7 | 72.0 | 74.4 | 66.8 | 63.7 | 65.3 |
| 15—19 | 43.3 | 36.6 | 40.0 | 37.1 | 32.9 | 35.0 |
| 11—19 | 56.8 | 48.9 | 53.0 | 49.6 | 44.5 | 47.1 |
| 20—24 | 5.3 | 4.0 | 4.6 | 8.1 | 7.0 | 7.4 |
| 5—19 | 67.7 | 62.5 | 65.2 | 58.4 | 54.9 | 56.7 |
| 5—24 | 56.2 | 51.3 | 53.8 | 47.6 | 44.0 | 46.0 |

1963, 1971 இலங்கைக் குடிசனக் கணிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தது. —குடிசனமதிப்பு, புள்ளிவிவரத் திணைக்களம்.

ருப்திக்கு வழிவகுக்கின்ற கலைத் துறைப் பாடநெறிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

கல்விப் பங்கெடுப்பு தொடர்பான நுண்ணாய்வும் இரு முரணை பண்புகளை வெளிப்படுத்துகின்றது. ஆண்டுகள் தொடர்பான நம்பகமான வயதுத் தரவுகள் கிடைக்காத போதிலும், அறுபதுக்களின் ஆரம்பப் பகுதியிலிருந்து வயதுப் பங்கெடுப்பு வீழ்ச்சி அடைந்திருப்பதுடன், எழுபதுக்களிலும் இவ் வீழ்ச்சி தொடர்ந்ததாகத் தெரிகின்றது. பாடசாலைக்குச் செல்லாத சிறார்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டு வருகின்ற அதிகரிப்பு பற்றி 1973 ஆம் ஆண்டுக்கான நுகர்வோர் ஆய்வு கவனத்தை ஈர்த்தது. இப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதனை 1980இன் சமூக-பொருளாதார ஆய்வும், 1980 புள்ளி விவரக் கணக்கீடும் வெளிக்காட்ட வேண்டி உள்ளன.

முதலாம் தரத்துக்கு உள் நுழைபவர்கள், சராசரியாக 50 சதவீத மானோர் மாத்திரமே 6ம் தரம் வரை கல்வியைத் தொடருகின்றனர்; பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற இவ் விகிதாசாரம் பொதுமக்களின் கல்வித் தரத்தைப் பின்வாங்கச் செய்கின்றது. பெண்களை விடவும் அதிகளவு ஆண்கள் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

பொருளாதார அம்சங்கள் இருபாலாரையும் பாதிக்கின்ற அதே வேளை, கல்வி விளைவுகளைப் பாதிக்கின்ற கலாசார நிலைமைகளினால் பெண்கள் மேலும் சங்கடமான நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர். திறந்த கல்வி அமைப்பு ஒரு பொதுவான பாடவிதானத்தைக் கொண்டுள்ளது; ஆனால், பன்முகப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டு, பாட விருப்புக்கு விடப்பட்டால் பாடத் தெரிவு, பெறுபேறு என்பவற்றில் பால் பாதிப்பு செயல்படத் துவங்கும். க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சிறியளவு எண்ணிக்கையிலான பெண்களே உயர் கணிதம், கேத்திர கணித, பொறிமுறை வரைதல், மர, உலோக வேலை போன்ற பாடங்களுக்குத் தோற்றுகின்றனர். இவற்றை விடவும், மனையியல், சுருக்கெழுத்து—தட்டச்சு, நெய்தல், வரைதல், சங்கீதம் போன்ற பாடங்களையே விரும்புகின்றனர். பரீட்சைப் புள்ளிவிவரங்கள் இதனைச் சிறப்பாகக் காட்டுகின்றன. உதாரணமாக, 1972ம் ஆண்டு க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு பெருமளவுக்கு சம எண்ணிக்கையிலான ஆண்களும், பெண்களும் தோற்றி, தேவையான ஆறு பாடங்களிலும் சித்தி பெற்றனர்; ஆனால், ஆண்களை விடவும் அரைவாசிப் பெண்களே கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் தேர்ச்சி பெற்றனர். க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் பெண் தேர்வுநாடிகள் முழுப் பரீட்சையிலும் சிறிது தேர்ச்சி பெற்றிருந்தனர். உயிரியல் விஞ்ஞானம், கலைத்துறைப் பாடங்களில் இவர்கள் ஆண்களை விடவும் எண்ணிக்கையில் கூடுதலாகவிருந்ததுடன், இவ்விரு துறைகளிலும் சிறப்பாகத் தோற்றியுமிருந்தனர். ஆனால், பௌதிக விஞ்ஞானங்களைத் தெரிவு செய்பவர்களுள் 25 சதவீதத்தினர் மாத்திரமே பெண்களாக இருந்தனர்.

கல்வி அமைப்பில் மிகக் குறைந்த அளவு விருத்தி பெற்றுள்ள தொழில் கல்வி, கொள்கை வகுப்போர், தொழில் வழங்குவோர், பெண்கள் ஆகிய அனைவரும் கலாசார அம்சங்களினால் சுமத்தப்பட்ட பால் பங்களிப்புக் கருத்தினை உடனடியாக ஏற்றுக் கொள்வதனால் மேலும் வலுவிழக்கின்றது. விவசாயத்தில் ஒப்பீட்டு ரீதியில் பெண்களின் உயர் பங்கெடுப்புக்கும், விவசாயக் கல்வியில் பெண்களின் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளுக்கும் இடையே ஒரு இருமுனைப்பண்பு தொடர்ந்து இருந்து வருகின்றது. இன்னும் பெண்கள் தொழில்நுட்ப நிறுவகங்களில் வர்த்தகப் பாட நெறிகளையே கற்க விரும்புகின்றனர்.

பாரம்பரியமற்ற கல்வி, தொழிற் பயிற்சி பொருத்தமான ஒரு ஊடகமாக கருதப்பட்டு வந்துள்ளது; ஆனால், பெண்களின் தொழிற் கல்வி, வேலைவாய்ப்புக்கள் என்பவற்றைப் பொறுத்தவரையிலும் எழுபதுக்களின் அனுபவம் ஏமாற்றம் தருவதாக உள்ளது. எழுபதுக்களின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட விவசாயக் குடியேற்றங்கள், கூட்டுறவுப் பண்ணைகள், பெண்களின் பண்ணைகள் என்பன பொருளாதார முயற்சி, பயிற்சி, செயற் திட்டம் என்ற வகைகளில் தோல்வி கண்டுள்ளன. பயிற்றப்பட்ட ஆளணியினர், உயர்தர கருவிகள் என்பவற்றின் குறைபாட்டினாலும், குறைந்த சந்தைப்படுத்தல் வசதிகள், தீர்மானம் எடுப்போரின் குறைந்த கவனம் என்பவற்றினாலும் பண்ணைப் பெண்களின் விவசாய விஸ்தரிப்பு செயற் திட்டம் தோல்வி கண்டது.

தொழில் திணைக்களத்தின் தொழிற் பயிற்சி நிலையங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை—2

பால், தர அடிப்படையில் இலங்கைக் கல்விச் சேவையின் அங்கத்தவர்கள் (1973, 1979)

| | 1973 | | | 1979 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண்கள் | பெண்கள் % | மொத்தம் | பெண்கள் | பெண்கள் % |
| வகுப்பு 1 | 12 | — | — | 5 | — | — |
| வகுப்பு 2 | 36 | 3 | 7.6 | 32 | 3 | 8.6 |
| வகுப்பு 3 | 78 | 8 | 9.3 | 82 | 9 | 10.9 |
| வகுப்பு 4 | 235 | 45 | 16.1 | 253 | 43 | 16.9 |
| வகுப்பு 5 | 831 | 73 | 10.8 | 899 | 28 | 3.1 |
| | 1192 | 129 | 8.1 | 1271 | 83 | 6.5 |

மூலம்: கல்வி அமைச்சு

தையல் வேலை, பாய் பின்னுதல் என்பவற்றிற்குத் தொடர்ந்தும் பெண்களை மட்டுப்படுத்தியதுடன், அதன் புதிய தொழில் பயிற்சித் திட்டத்தில் (1978) நாடா பின்னுதலை மாத்திரம் பாடவிதானத்தில் சேர்த்தது. சிறு கைத்தொழில் திணைக்களத்தின் பயிற்சி நிலையங்கள், போதிய மூலவளங்கள், வசதிகள் இன்மை, குறைந்த உற்பத்தித் திறன் போன்ற பண்புகளைப் பெற்றிருப்பதுடன், நவீன இறக்குமதிகளின் போட்டியினால் அதன் பின்தங்கிய தோற்றம் மேலும் பின்தள்ளப்பட்டுள்ளது. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின், பெண்கள் அபிவிருத்தி நிலையங்கள் சுய தொழிலுக்குரிய தொழிற் பயிற்சி நிலையங்கள் என்ற வகையில் தோல்வி கண்டுள்ளன; போதிய மூலவளங்கள், வசதிகள், பயிற்றப்பட்ட ஆளணியினர் இன்மை என்பனவே மீண்டும் ஒரு முறை இதன் தோல்விக்குக் காரணமாக உள்ளன. தேசிய தொழில் பயிற்சி சபை பெண்களுக்கு சிறியளவு பயிற்சி வாய்ப்புக்களையே அளித்துள்ளன. 1978ல்

இயல்பாகவே தனியார் துறை, தொழிற் சந்தைக் கேள்வியின் ஆதிக்கத்திற்குட்பட்டுள்ளது; சுதந்திர வர்த்தக வலயத்திற்கு உள்ளும் வெளியிலும் உள்ள தேசிய, பல்தேசிய நிறுவனங்கள் உடனடித் தொழில் பயிற்சியை அளிக்கின்றன; அதிகரித்த அளவில் உயர்தரப் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றன பெண்களை இவை ஒப்பீட்டு ரீதியில் அரைத்—திறன் மிக்க மலிவான ஊழியமாகக் கருதுகின்றன. போதிய மூலவளங்கள் இன்மையால் தொண்டர் நிறுவனங்கள் அசைவின்றி இருப்பதுடன், பாரம்பரிய 'மகளிர்' பயிற்சித் திட்டங்களில் உடைவினை ஏற்படுத்துதல் கடினம் என்பதனையும் கண்டறிந்

பெண்களின் வேலையின்மை பற்றிய நிலைமையின் பிரதான பண்புகள் சிறு மாற்றங்களுக்கே உட்பட்டுள்ளன.

(1) அதிகரித்த கல்வி வாய்ப்புக்களும், உயர்ந்து செல்கின்ற வாழ்க்கைச் செலவும் விரிவான ஊழியர் பட்டாளத்தைத் தோற்றுவித்துள்ளது. ஆனால், பெண்களின் வேலையின்மை விகிதாசாரம் ஆண்களை விடவும் இரு மடங்காகி உள்ளது. வேலையற்ற பல்கலைக்கழகப் பட்டதாரிகள், க. பொ. த. உயர்தர, சாதாரணதர தகைமை படைத்தோர் ஆகியோரிடையே பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விடவும் அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

(2) பெண்கள் புதிய தொழில் துறைகளில் உட்புகுந்தனர்; மிகச் சிலரே வெற்றிகரமான முயற்சியாளர்களாக மாறினர்; அல்லது தமது தொழிலின் ஊடாக ஆக்கத்திறனை வெளிப்படுத்தக் கூடியோராக இருந்தனர். தாதிகளாகவும், எழுதுவினைஞர்களாகவும் மாத்திரமன்றி, அளவையாளர்கள், போக்குவரத்துக் கண்காணிப்பாளர், பஸ் நடாத்துநர் என்பவற்றுடன் இராணுவத்தில் கூட பெண்கள் சேருவதற்கு அரசாங்கக் கொள்கை வழிவகுத்தது. எவ்வாறுயினும், இன்னும் பெரும்பான்மையான பெண்கள் பெருந்தோட்டத் துறை, உழவர் விவசாயம், பின்னுதல், இழைத்தல், தையல் போன்ற

அட்டவணை—3

பால், தர அடிப்படையில் இலங்கைப் பல்கலைக் கழகங்களின் கல்விப் பணியாளர் (1973,1979)

| | 1973 | | | 1979 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண்கள் | பெண்கள் % | மொத்தம் | பெண்கள் | பெண்கள் % |
| போராசிரியர் | 83 | 2 | 2.4 | 119 | 3 | 2.5 |
| இணைப் போராசிரியர் | 24 | 2 | 8.3 | 67 | 6 | 8.9 |
| சிரேட்ட விரிவுரையாளர் | 126 | 19 | 15.1 | 220 | 37 | 16.8 |
| விரிவுரையாளர் | 180 | 33 | 18.3 | 283 | 57 | 20.1 |
| உதவி விரிவுரையாளர் | 314 | 65 | 20.7 | 593 | 135 | 22.8 |
| மொத்தம் | 727 | 121 | 16.6 | 1282 | 238 | 18.6 |

மூலம்: கொழும்பு, பேராதனை, வித்தியாலங்கார, வித்தியோதய, கடுபெத்தைப் பல்கலைக்கழக வளாகங்கள் 1973. கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம், களனி, கோட்டே, மொறட்டுவ பல்கலைக்கழகங்களும் றுகுணைப் பல்கலைக் கழகக் கல்லூரியும், 1979.

A... ...priate Technology Services
21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.____



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அட்டவணை—4

**பால், தர அடிப்படையில் இலங்கை நிர்வாக சேவை அங்கத்தவர்கள்—1979**

| தரம் | மொத்த எண்ணிக்கை | பெண்களின் எண்ணிக்கை | பெண்கள் % |
|---|---|---|---|
| வகுப்பு 2 | 165 | 3 | 1.8 |
| வகுப்பு 2 தரம் 1 | 345 | 19 | 5.5 |
| வகுப்பு 3 தரம் 2 | 1035 | 95 | 9.2 |
| மொத்தம் | 1545 | 117 | 7.2 |

மூலம்: பொது நிருவாகத் திணைக்களம் (கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள், அடைத்தல், வர்த்தகக் குறி ஒட்டுதல் ஆகிய நவீன கைத்தொழில்கள், சௌக்கிய, கல்விச் சேவைகள், வீட்டுப் பணி போன்ற தொழில் துறைகளிலேயே ஈடுபாடு கொண்டுள்ளனர். தொழில் வழங்குவோரின் தப்பெண்ணம் தொழில் நுட்ப, முகாமைத்துவம் தொழில் துறைகளிலிருந்து அவர்களைத் தவிர்த்துவிடுகின்றது.

(3) சராசரியாக 70 சதவீதமான பெண்தொழிலாளர்கள், அரைத்திறன் கொண்ட தொழில்களிலும், திறனற்ற தொழில்களிலும் உள்ளனர். 'அபிவிருத்தி,' கிராமியக் கைத்தொழில்களில் உயிர் வாழ்க்கைக்குப் போராடுகின்ற பெருந்தொகையான பெண்களைக் கடந்து சென்றுவிட்டது. மறுபுறத்தில் அது, திருமணமாகாத இளம் பெண்களை மலிவான தற்காலிக ஊழியமாகச் சுரண்டி, ஒரே கருமத்தை மேலும் புரிந்து தனித்துவத்தை இழக்கச் செய்கின்ற ஆடைத் தயாரிப்பு, மின்னியக்கம், இரத்தினக் கல் செப்பனிடுதல் போன்ற தொழில்களில் ஈடுபடவைக்கின்ற பல்தேசிய, தேசிய நகர்ப்புறம் சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுவதற்குப் புதிய தொழில் வாய்ப்புக்களைத் திறந்துள்ளது.

(4) தொழிலில் பாகுபாடு காட்டாதிருப்பதனை எமது யாப்பு உறுதிப்படுத்துவதுடன், பெண்களுக்கு எதிரான பாகுபாட்டினை நீக்குகின்ற ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தையும் இலங்கை அங்கீகரித்துள்ளது. ஆயினும், குடியேற்ற வாதத்தின் முதுசமான கூலி வேறுபாடு தொடர்ந்து இருந்து வருகின்றது. கூலிச் சபை உப சட்டத்தின் கீழ் இயங்குகின்ற 31 கைத்தொழில்களுள், பதினாறு தொழில் துறைகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான வேதனத் திட்டங்களில் தீவிர பாகுபாடு காட்டுகின்றன; இன்னும் சில, தொழிலாளர் 'வகைகளுக்கு' வேறுபட்ட வேதனத் திட்டங்கள் என்ற போர்வையில் பாகுபாடு காட்டுகின்றன.

(5) வீட்டில் பெண்களின் பிரதான பங்கு புகழப்பட்டு, மேலதிக வீட்டு வேலை கண்டிக்கப்படுகின்றது; ஆனால், சுய தொழிலிலும், வீட்டை அடிப்படையாகக் கொண்ட தொழில்களிலும் உள்ள பெண் தொழிலாளர்கள் தொழிற் சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்படாதிருப்பதுடன், அவர்களின் முயற்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பொது வசதிகளும் மறுக்கப்பட்டுள்ளன.

திட்ட அமுலாக்கல் அமைச்சில் பெண்கள் பணியகம் நிறுவப்பட்டமையும், பெண்களுக்கான வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு கொள்கை ஆக்குவோரினால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளும் இத் துறையில் மேற்கொள்ளப்படுகின்ற நேர் கணிய முயற்சிகளாகும். பெண்களின் வேலைவாய்ப்புடன் தொடர்பான எண்ணக்கருரீதியிலான இடர்பாடுகள், சில அடிப்படை அம்சங்களைச் சிக்கலானதாக ஆக்குகின்றன.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், அடுத்து வருகின்ற இரண்டு, மூன்று வருடங்களுக்கு அரசாங்கத்தினால் புதிய பாரிய முதலீட்டுத் திட்டங்கள் திட்டமிடப்படமாட்டாது. நாட்டில் நிலவுகின்ற தற்போதைய வீக்கப் போக்குக்குப் பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ள போதிலும், ஒரு புறத்தில் நீண்ட காலத் திட்டங்கள் மீதான அரசாங்கச் செலவுகளில் (மகாவலி போன்ற) ஏற்பட்ட கூடிய அதிகரிப்பும், மறுபுறத்தில் நேரடியாக உற்பத்தியுடன் தொடர்புபடாத (பாராளுமன்றக் கட்டடம், வீட்டு நிர்மாணத் திட்டம் போன்ற) திட்டங்களும் கடந்த இரு ஆண்டுகளாக ஒரு பலம்வாய்ந்த வீக்க மூலங்களாக இருந்து வந்துள்ளன. அரசாங்க முதலீடுகளில் பெரும் பகுதி நேரடி உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பதிலாக (இவை நேரடியாக வெளியீட்டினை அதிகரித்து, வீக்கத்தினைக் கட்டுப்படுத்தும்.) பொது வசதிகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கப்பட்டிருப்பதனால் அபிவிருத்தி முயற்சிகளில் பாரதூரமான சமமின்மை ஏற்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களாக விவசாயம், கைத்தொழில் என்பவற்றைவிட, நிருமாணம், வர்த்தகம், போக்குவரத்து என்பனவே பிரதான பொருளாதார அபிவிருத்தி மூலங்களாக இருந்து வந்துள்ளன. சிறிய, விரைவில் பயனளிக்கின்ற திட்டங்கள்மீது கவனம் அசைதல், அரசாங்க செலவினங்களில் வெட்டினை விதித்தல் என்பன வீக்க அமுக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகளாகும்.

உள்ளூர் சமநிலை இன்மை, அதனுடன் இணைந்த வகையில் வெளிச் சமநிலை இன்மையையும் கொண்டுள்ளது; அதிகரித்துச் செல்கின்ற இறக்குமதிச் செலவு, விரிவடைந்து செல்கின்ற வர்த்தக இடைவெளி, வீழ்ச்சி அடைந்து செல்கின்ற வெளிநாட்டுச் சொத்துக்கள் என்பனவே இவையாகும். இறக்குமதி நிலையை அதிகரித்தல், ஒப்பீட்டு ரீதியில் இலகுவாக உள்ள அதே வேளை, ஏற்றுமதி நிலையை அதிகரிப்பதற்கு ஒரு பாரிய முயற்சி தேவை என்பதனை இலங்கையின் அனுபவம் தெளிவாக காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.




மக்கள் வங்கி வெளியீடு

விலை ரூ. 2/25

பொருளியல் நோக்கில் சுரசுரிக்கப்படுபவற்றைப் பேற்றுக் குறிப்புடன் மீளப் பிரசுரிக்கவோ மேற்கோள் காட்டவோ அனுமதியுண்டு.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org